

அவங்களுக்கு களம் அமைத்
தததே நீங்கதானே ஐயா...

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 312 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 17, திங்கட்கிழமை 03.10.2016




# இறைமையின் அடிப்படையிலான தீர்வையே தமிழர்கள் விரும்புகின்றனர்

## எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் யாழ். நகரில் ஜனாதிபதி முன்னிலையில் நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 3

அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு இனங்களின் இறைமை உறுதிப்படுத்தப்பட்டு இறைமையின் அடிப்படையிலேயே புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்புகின்றது.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் தெரிவித்தார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

42 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று மாலை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டத்தில் முதன் முறையாக தேசிய விளையாட்டு விழா நடைபெறுகின்றது. இது சாதாரண விடயம் அல்ல. நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள பெரிய மாற்றத்தை, >> 23ஆம் பக்கம்

## பொருளாதார மையத்துக்கு மதகுவைத்தகுளம் காணியை விடுவிக்க அமைச்சரவை ஒப்புதல்

யாழ்ப்பாணம், ஒக். 3

பொருளாதார மையத்தை அமைப்பதற்காக மதகுவைத்தகுளம் பகுதியிலுள்ள நிலத்தைத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் இருந்து விடுவிப்பதற்கான அமைச்சரவை அனுமதி வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு கடந்த வாரம் அனுப்பிவைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் பொருளாதார மையம் அமைப்பதற்கான இடத்தேர்வின் காரணமாக அதனை அமைக்கும் பணியே கேள்விக்குறியாக இருந்தது. இறுதியில் மதகுவைத்தகுளம் பகுதியில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. >> 23ஆம் பக்கம்

## சம்பியனானது மேல் மாகாணம் வட மாகாணத்துக்குக் கடைசி இடம்

நடப்பு வருடத்துக்கான தேசியமட்டப் போட்டிகள் நேற்றுடன் நிறைவுக்கு வந்தன. ஒட்டுமொத்தமாக 254 பதக்கங்களுடன் மேல் மாகாணம் சம்பியனானது. ஒட்டு மொத்தமாக 12 பதக்கங்களுடன் வடக்கு மாகாணம் கடைசி இடத்தைப் பிடித்தது.

நடப்பு வருடத்துக்கான தேசியமட்டப் போட்டிகள் பல கட்டங்களாக பல இடங்களில் நடைபெற்று, யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் நடைபெற்று முடிந்த தேசிய மட்ட தடகளத் தொடருடன் நேற்று நிறைவுக்கு வந்தது. இதில் மேல் மாகாணம் சம்பியனான அதேநேரம் வடக்கு மாகாணம் கடைசி இடத்தையும், கிழக்கு மாகாணம் கடைசிக்கு முதல் இடத்தையும் பிடித்தன.

(விரிவு: பக். 27)

## தேர்தலில் தோற்றோர் என்னை வைத்து அரசியல் வியாபாரம் செய்கிறார்கள்

### அதற்காவது பயன்பட்டுள்ளேன் என்பதில் திருப்திதான் என்கிறார் விக்கி

யாழ்ப்பாணம், ஒக். 3

தேர்தலில் தோற்ற சிலர் என்னை வைத்து அரசியல் வியாபாரம் நடத்த முற்பட்டிருக்கின்றார்கள். அவர்களின் வியாபாரத்துக்காவது நான் பயன்பட்டுள்ளேன் என்பதில் எனக்குத் திருப்தி தான்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

"தெற்கில் தேர்தலில் தோற்ற - சிறைத் தண்டனைக்கு இலக்காக வேண்டிய சிலர் எம்மை வைத்து அரசியல் வியாபாரம் நடத்த முற்பட்டிருக்கின்றார்கள். அவர்களின் வியாபாரத்துக்காவது நான் பயன்பட்டுள்ளேன் என்பதில் எனக்குத் திருப்தி தான்" என்று விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

42 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் இறுதி நாள் >> 23ஆம் பக்கம்

## பிரிட்டிஷ்காரன் தன் வசதிக்காக பிரித்த மாகாணங்களுக்கு ஏன் அடிபட வேண்டும்?

### யாழ்ப்பாணத்தில் கேள்வியெழுப்பினார் மைத்திரி



யாழ்ப்பாணம், ஒக். 3

நிர்வாகத்தை இலகுவாக்க ஆங்கிலேயர்கள் பிரித்த ஒன்பது மாகாணங்களுக்காக நாங்கள் ஏன் அடிபட்டுக்கொள்ள வேண்டும் என்று கேள்வி எழுப்பிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாம் ஒரே நாடு அனைவரும் இலங்கையர் என்ற அடிப்படையில் செயற்படுவோம் என்றார்.

42 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று மாலை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் >> 24ஆம் பக்கம்

## தென்பகுதி அரசியல்வாதிகளை தமிழ் மக்கள் கட்டுப்படுத்துவர்

### இப்படிச் சொல்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

வவுனியா, ஒக். 3

தென்பகுதி அரசியல்வாதிகள் வடபகுதிக்கு வந்து சத்தம் போடுவார்கள் என்றால், அதனைத் தமிழ் மக்கள் கட்டுப்படுத்துவார்கள்.

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பணிமனைத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது >> 23ஆம் பக்கம்

## மலையகத் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டத்துக்கு இடைக்காலத் தடை

கொழும்பு, ஒக். 3

நுவரெலியா மாவட்டத்திலுள்ள மஸ்கெலியா நகரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு ஆர்ப்பாட்டத்துக்கு நீதிமன்றத்தால் இடைக்காலத் தடை பிறப்பிக்கப்பட்டது.

போராட்டத்தில் கலந்துகொள்வதற்காக காலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மஸ்கெலிய நகரில் கூடியவேளை, இடைக்காலத் தடை உத்தரவு குறித்து பொலிஸார் அறிவிப்பு விடுத்தனர். அதையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. >> 23ஆம் பக்கம்

## ஜனாதிபதியின் அதிகாரங்களை பகிர்வது குறித்து ஆராய்வு

ஒக்லாந்து, ஒக். 3

நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்கள் அனைத்தையும் நாடாளுமன்றத்துக்கு அல்லது தேசிய சட்டசபை, செனட் சபை மற்றும் மாகாண சபைகளுக்கு மாற்றுவது குறித்து கலந்துரையாடப்படுகிறது.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க >> 24ஆம் பக்கம்

## சமஷ்டியில் ஆர்வமில்லை; அதுவே மக்களின் கருத்து

### லால் விஜயநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 3

கூட்டாட்சித் தீர்வில் (சமஷ்டி) மக்கள் ஆர்வம் கொண்டிருக்கவில்லை என்று, அரசமைப்புத் திருத்தத்துக் கான மக்கள் கருத்தறியும் குழுவின் அறிக்கையில் பரிந்துரைத்துள்ளதாக, >> 23ஆம் பக்கம்

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை புதிதாக உருவாக்குவது குறித்து படைகளுடன் அரசு ஆலோசனை

கொழும்பு, ஒக். 3

நாட்டில் நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பன்னாட்டுத் தரத்திலான பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டமொன்றைக் கொண்டு வருவதற்கு தயாராகிவரும் அரசு, இது தொடர்பில் முப்படைத் தளபதிகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பாதுகாப்புத்துறை சார்பான நிபுணர்களுடன் பேச்சு நடத்தி ஆலோசனைகளைப் பெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் >> 23ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீவகத்தில் இந்த வருடம் முதல் புகையிலை உற்பத்திக்குத் தடை

## பயிர்ச் செய்கையாளர்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஒக். 3

அரசின் அறிவிப்பின் பிரகாரம் தீவகப் பிரதேசத்தில் போதைப் பொருளான புகையிலை உற்பத்தி செய்வதற்கு இந்த வருடம் ஊர்காவற்றுறை மற்றும் வேலணைப் பிரதேச செயலக பிரிவுகளில் முற்றாக தடை செய்யப்படுகிறது என்று பிரதேச செயலர்களால் விடுக்கப்பட்ட அறிவிப்புக்கு ஆயிரக்கணக்கான புகையிலை பயிர் செய்கையாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

புகையிலை மட்டும் போதைப் பொருளல்ல, பல்லாயிரம் குடும்பங்களின் வாழ்வைச் சீரழித்துக் கொண்டிருக்கும் மதுபான விற்பனை நிலையங்களை உடனடியாக மூட பிரதேச செயலர்கள் மட்டுமல்ல யாழ்.மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஊர்காவற்றுறை மற்றும் வேலணைப் பிரதேச செயலர்களால் ஒப்பமிடப்பட்ட விடுக்கப்பட்ட அறிவித்தல்களில்,

பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பயிர் உற்பத்தியை ஊக்குவித்தல் போசாக்கினை அதிகரித்தல் மற்றும் போதை ஒழிப்பு ஆகிய செயற்றிட்டத்தின் கீழ் இந்த வருடம் புகையிலைப் பயிர்ச் செய்கை முற்றாகத் தவிர்க்கப்படல் வேண்டுமென பின்வரும் நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன.

சமுர்த்திப் பயனாளிகள் அல்லது வாழ்வின் எழுச்சித் திட்டப் பயனாளிகள் புகையிலைச் செய்கையை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.

சமுர்த்தித் திட்டத்தில் இணைய விண்ணப்பித்திருப்பவர்கள் புகையிலைச் செய்கையை முற்றாகத் தவிர்த்து சமுர்த்தித் திட்ட பயனாளிக்கான தகைமையைப் பெறல் வேண்டும்.

2016ஆம் ஆண்டு மீள்குடியேற்ற அமைச்சின் வாழ்வாதாரப் பயனாளிகள் புகையிலைச் செய்கையைத் தவிர்க்கவேண்டும்.

விவசாய மானிய உரம் அல்லது கொடுப்பனவு பெறுபவர்கள் புகையிலைச் செய்கையை முற்றாகத் தவிர்க்கவேண்டும்.

புகையிலைச் செய்கையில் ஈடுபடுபவர்கள் பொது நீர் நிலைகளிலிருந்து நீர் இணைப்பு பெறுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

புகையிலை செய்கையை விட்டு ஏனைய பயிர்ச் செய்கைகளில் ஈடுபடும் விவசாயிகள் தமது பெயர் விவரங்களை பிரிவு கிராம அலுவலர், அபிவிருத்தி அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் ஆகியோரிடம் பதிவு செய்து உதவித் திட்டங்களுக்கான முன்னுரிமை பெற்றுக் கொள்ளமுடியும் என்று அறிவித்தனர்

யாழ்.மாவட்டத்தில் தீவகத்திலேயே காலம் காலமாக புகையிலைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது. தீவகப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் புகையிலை தென்பகுதிக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டுவருகிறது. வருடாவருடம் மழைகாலத்தின் பின்னர் டிசெம்பர் தொடக்கம் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்படும் புகையிலை பயிர்ச் செய்கையில் உற்பத்தியாளர்கள் மட்டுமல்ல, தோட்டத்தில் பணிபுரியும் குடும்பங்களும் வாழ்ந்து வந்தன. தீவுப் புகையிலைக்கு தென் பகுதியில் பெரும் கேள்வி என்பதால், ஏப்ரல் மாதம் தொடக்கம் இந்தப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் புகையிலையை கொள்வனவு செய்ய பெருமளவு தென் பகுதி வியாபாரிகள் வருகை தந்து சிப்பமாகக் கட்டி தென்பகுதிக்கு எற்றிச் சென்றனர்.

முன்னைய பாய் மரக் கப்பல்கள் (வத்தைகள்) மூலம் ஓலைப் பாய்களால் சுற்றிக் கட்டப்பட்டு கடல் மார்க்கமாக புகையிலை தென் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டது. நாளாந்த அறுவடையின்றி மொத்தமாக விற்பனை செய்யப்படுவதால், உற்பத்தியாளர்களும் அங்கு பணியாற்றியவர்களும் ஒரே தடவையில் பயன்பெறக்கூடியதாக இருந்தது.

கடந்த வருடம் கூட தீவகப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பெருமளவு புகையிலை வாகனங்களில் கொண்டு செல்லப்பட்டது. போக்குவரத்து தடைப்பட்டிருந்த காலத்தில் கூட காரை நகரிலிருந்து கப்பல்கள் மூலம் புகையிலை ஏற்றுமதி செய்யப்பட்டு உற்பத்தியாளர்கள் பயன் பெற்றனர். அன்றைய காலம் தொட்டு இன்றுவரை புகையிலை உற்பத்தியில் இளைஞர்களே ஈடுபட்டு வருகின்றனர்.

புகையிலையை உற்பத்தி செய்வதை தடுக்க முயலும் அரச அதிகாரிகள் நாட்டில் மலிவாகக் காணப்படும் மதுபான நிலையங்களை நிறுத்த முயலாதது குறித்து கவலையளிக்கின்றது. தற்போது யாழ்.குடாநாட்டையே சீரழித்துக் கொண்டிருக்கும் மதுபான நிலையங்கள் மூடப்பட வேண்டும்.

மேலும் பிரதேச செயலர்களின் நிபந்தனைகள், தீவகப் பகுதியில் திட்டமிட்டு புகையிலை உற்பத்தியை நிறுத்த முயற்சிக்கிறார்களென அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றன. தீவகப் பிரதேசத்தில் அரச பணியாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. தீவகத்தின் அனைத்துக் குடும்பங்களும் ஏதோ ஒரு விதத்தில் விவசாயத்தை நம்பியிருப்பவர்களே. இந்தக் குடும்பங்கள் சமுர்த்திப் பயனாளிகளாகவோ அல்லது வாழ்வின் எழுச்சிப் பயனாளிகளாகவோ உள்ளமை அனைவரும் அறிந்த விடயம். அத்துடன் இந்த வருடம் மீள்குடியேற்ற அமைச்சின் வாழ்வாதாரத் திட்டமான வீடமைப்புத் திட்டத்தில் இணைந்தவர்களாக உள்ளனர். இதனால் தீவகப் பிரதேசத்தில் புகையிலை உற்பத்தியை நிறுத்த பிரதேச செயலர்கள் விடுத்த அறிவிப்புகள் தீவக பிரதேசத்தில் வாழும் பல குடும்பங்களை வறுமையின் விளிம்புக்குக் கொண்டு செல்லும் என்று தீவக புகையிலை பயிர் செய்கையாளர்கள் தெரிவித்தனர். (வ 9)



## நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை திறந்து வைத்தார் மைத்திரி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு பல்கலைக்கழக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள இரண்டு நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

பல்கலைக் கழக மாணவர்களின் கோரிக்கைக்கமைய இந்த குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டன. எதிர்காலத்தில் மேலும் இரண்டு இயந்திரங்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற திறப்பு விழாவில், வடக்கு மாகாண ஆளுநர் கூரே, பல்கலைக்கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது பல்கலைக் கழக மாணவர்கள் ஜனாதிபதி மைத்திரியிடம் மனு ஒன்றையும் கையளித்தனர். (வ-5-10)

## கொக்குவெளி மக்களை அச்சுறுத்திய மூவர் கைது

வவுனியா கொக்குவெளி பகுதியிலுள்ள சிங்கள மக்களுக்கு சட்டவிரோதமாகக் காணிகள் பெற்று பணத்துக்கு வழங்கியதாகக் குற்றஞ்சாட்டப்படும் சின்னவன் என்றழைக்கப்படும் நபர் உட்பட 2 பேர் கைது செய்யப்பட்டனர் என்ற பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொக்குவெளி பகுதிக்குள் சென்று அங்கு குடியிருந்த குடும்பங்களை வெளியேறுமாறு அச்சுறுத்தியதையடுத்து, அந்தப்பகுதி மக்கள் ஏ9 வீதியை மறித்து போராட்டம் மேற்கொண்டனர். அந்தப்பகுதிக்குச்சென்ற வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபர் சம்பவம் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறையிடுமாறும், தான் விரைந்து நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அந்தப்பகுதி விகாரையின் பௌத்த தேரரிடம் வாக்குறுதியளித்தார். அதையடுத்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறையிட்டதையடுத்து, நேற்றுமுன்தினமிரவு சின்னவன் என்றழைக்கப்படும் மகாறம்பைக் குளத்தைச் சேர்ந்த விஸ்வலிங்கம் (வயது - 35), தாஸ்நகர் பூந்தோட்டத்தைச் சேர்ந்த இராசலிங்கம் அம்பிகைபாலன் (வயது - 33) ஆகிய இருவரும் ஒரு இடத்தில் மறைந்திருப்பதாக கிடைத்த தகவலையடுத்து, அந்த இடத்துக்குச் சென்று பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாகவும் இச்சம்பவத்தில் மற்றைய சந்தேக நபர் ஒருவரையும் தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சின்னவன் என்றழைக்கப்படும் சந்தேகநபர் வவுனியாவில் முன்னாள் ஆயுதக்குழு ஒன்றில் இருந்து செயற்பட்டு வந்துள்ளதாகவும், அவர் மீது மகாறம்பைக்குளம் கிராம அலுவலகம் அடித்து சேதமாக்கப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## கிளிநொச்சியில் இம்முறை மேலதிகமாக படகுகள்

கிளிநொச்சி, ஒக்.3

கிளிநொச்சி மாவட்ட மீனவர்களின் படகு பதிவின் பிரகாரம் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டில் 40 படகுகள் இதுவரையில் மேலதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார் .

தற்போது நாடு முழுவதும் படகுகள் பதிவு இடம்பெறுகின்றது. இதன்பிரகாரம் கிளிநொச்சி மாவட்ட மீனவர்களின் படகுகளின் பதிவுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 40 படகுகளுக்கு கடற்றொழிலாளர்கள் மேலதிகமாக பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2015ஆம் ஆண்டில் 891 படகுகள் பதிவில் உள்ளன . இந்த ஆண்டு இதுவரையில் 931 படகுகள் பதியப்பட்டுள்ளன. இருப்பினும் இன்னும் ஒரு சில படகு உரிமையாளர்கள் தமது பதிவை இதுவரையில் பதியவில்லை என்றார் கிளிநொச்சி கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர். (வ-101)

## உப அலுவலகமாக மாற்றுவதில் சிக்கல் நிலை

யாழ்ப்பாணம், ஒக்.3

வலி.கிழக்கு கோப்பாய் சந்தைக் கட்டடத் தொகுதியை உப அலுவலகமாக மாற்றியமைக்கும் நடவடிக்கை பெரும் இழுபறியில் உள்ளதாகவும், இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் வலி. கிழக்கு பிரதேச சபைச் செயலர் தெரிவித்தார்.

இந்தக் கட்டடத் தொகுதியை சபையின் கோப்பாய் உப அலுவலக மாக மாற்றியமைப்பதற்கு பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டது. எனினும் இந்தக் கட்டடத் தொகுதி ஏற்கனவே தனியார் ஒருவருக்கு சபையால் நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டதால் அவர் தனக்கு இந்தக் கட்டடத் தொகுதியில் உரிமை உள்ளதாக தெரிவித்துள்ளார்.

10 பிரிவுகளை உள்ளடக்கிய இந்தக் கட்டடத் தொகுதியில் தற்போது வர்த்தக நிலையங்கள், சந்தை என்பன இயங்காத நிலையில் உள்ளன.

இதனைப் பயன்படுத்தி சபை இந்தக் கட்டடத்தை மீளப் புனரமைத்து கோப்பாய்ப் பிரதேச உப அலுவலகமாக மாற்றியமைப்பதற்குத் திட்டமிட்டது.

எனினும் தற்போது அலுவலகமாக மாற்றியமைக்கும் நடவடிக்கைகள் இழுபறியில் உள்ளன. இது தொடர்பாக கடந்த 2 வாரங்களுக்க முன்னர் உள்ளூராட்சி ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பான சரியான முடிவை எதிர்பார்த்துள்ளதாக வலி.கிழக்கு பிரதேச சபைச் செயலர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி-,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோதவிட்டு வேடிக்கை பார்க்கின்றன ஊடகங்கள்

## கிழக்கு ஆளுநர் ஒஸ்ரின் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 3
இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதை விடுத்து, மோதல்களை தூண்டிவிடுவதை ஊடகங்கள் விரும்புவதாக கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ குற்றம் சுமத்தினார்.
திருகோணமலை பிராந்திய செய்தியாளர்களுக்கு நேற்று முன்தினம் நடத்தப்பட்ட செயலமர்வில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டினார்.
இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஊடகங்கள் தமது பிரபல்யத்துக்காக ஒருவரையொருவர் மோதவிட்டு வேடிக்கை பார்க்கின்றன. மோதல்களைத் தூண்டிவிடுவதை விடுத்து நல்லிணக்கம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் ஊக்கத்துடன் செயற்பட்டால் மிகவும் சிறந்து.
நல்லிணக்கம் தொடர்பிலான விருப்பத்தை வெளிப்படுத்த ஊடகங்கள் பின் நிற்கின்றன.
கடற்படையினருக்கும் முதலமைச்சருக்கும் இடையில் கடந்த மே மாதம் 20ஆம் திகதி சம்பூரில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் பொறுப்பற்ற முறையில் செய்திகளை வெளியிட்டிருந்தன.
இந்தச் சம்பவம் இடம்பெற்று இரண்டு மாதங்களின் பின்னர் முதலமைச்சர், ஜனாதிபதி ஆகியோருடன் நானும் மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வுக்குச் சென்றோம். முதலமைச்சரும் நானும் அருகருகே இருந்தோம். அதனை அறிக்கையிட எந்தவொரு பத்திரிகைக்கும் தொலைக்காட்சிக்கும் முடியாமல் போயுள்ளது.
பேரணிகளின்போது எனக்கு எதிராக முதலமைச்சர் கருத்துக்களை வெளியிடுகின்ற போதிலும், அது தொடர்பில் பெரிதுபடுத்தும் ஊடகங்கள், என்னிடமும் வினவி, மோதல்களை ஏற்படுத்த பகீரத பிரயத்தனம் செய்கின்றன.
இருவருக்கும் இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பதிலாக மோதல்களை ஏற்படுத்துவதற்கே தொலைக்காட்சிகள் முயல்கின்றன – என்றார். (வ-5)

# பாடசாலைக்குள் வரும் பெற்றோருக்கு ஆடைக்கட்டுப்பாடு விதிக்க முடியாது

## கல்வி அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3
பாடசாலைக்குள் வரும் பெற்றோருக்கு எந்தச் ச்ந்தர்ப்பத்திலும் பாடசாலை நிர்வாகங்கள் ஆடைக் கூட்டுப்பாடு விதிக்க முடியாது.
இவ்வாறு கொழும்பு அரசின் கல்வி அமைச்சுச் செயலாளர் சுனில் கெட்டியாராச்சி சகல மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு கடிதம் அனுப்பி வைத்தார்.
இது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளரின் செப்ரெம்பர் 22 திகதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
சகல பாடசாலைகளிலும் பிள்ளைகளை அழைத்துச் செல்ல வரும் பெற்றோர் மற்றும் பிள்ளைகள் தொடர்பான விடயங்களுக்காக நிர்வாகத்தை நாடும் பெற்றோருக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் பாடசாலை நிர்வாகங்கள் ஆடைக் கட்டுப்பாடு விதிக்க முடியாது. இதே போன்று கலந்துரையாடலுக்கு அழைக்கப்படும் பெற்றோருக்கும் இந்த விதிமுறை பொருத்தமாகும்.
கடந்த காலங்களில் பாடசாலைகளில் பிள்ளைகளின் விடயத்துக்காக பாடசாலை அதிபர் அல்லது நிர்வாகத்தை நாடினால், சில பெற்றோர்களின் ஆடை அலங்காரத்தைக் காரணம் காட்டி திருப்பி அனுப்புவதாக முறையிடப்பட்டது. அதனை ஆராய்ந்தபின்பே குறித்த விடயம் அறிவிக்கப்படுவதாக அறிவுறுத்தப்படுகின்றது – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ -101)

# வவுனியா தமிழ்க் கிராமத்துக்கு சிங்களக் கிராமஅலுவலர்

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் சிங்கள மக்கள் வசிக்காத தமிழ்ப் பகுதிக்கு சிங்களக் கிராமஅலுவலர் நியமிக்கப்பட்டுள்ளதாக கிராம மக்களினால் தெரிவிக்கப்பட்டது.
வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் சிங்கள மக்கள் ஒருவரேனும் வசிக்காத மாமடு கிராமத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள கிராம அலுவலர் ஒரு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர். அவர் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் ஒலுமடு கிராமத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார். குறித்த கிராம அலுவலர் தமிழ் மொழியில் போதிய பரிச்சயம் அற்றவர்.
எவ்வளவுதான் சேவை அர்ப்பணிப்பு மிக்க ஒரு உத்தியோகத்தராக இருப்பினும் முதலில் தொடர்பாடல் மொழியே முக்கியம் என்ற வகையில் எமது கிராமத்துக்குத் தமிழ் பேசும் ஒருவரை நியமிக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.
இது தொடர்பில் பிரதேச செயலக அதிகாரிகளைத் தொடர்புகொண்டு கேட்டபோது, குறித்த கிராம அலுவலர் கடந்த 2013 முதல் அங்கு பணிபுரிகின்றார் எனவும் தற்போது ஓரளவு தமிழ் மொழியைக் கற்றுள்ளார் எனவும் பதிலளிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ரி-101)

# சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூ.ச.விவகாரம் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் ஆணையர்

யாழ்ப்பாணம், ஒக். 3
சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தை தமது சொந்தத் தேவைக்காகப் பயன்படுத்தியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் அத்துடன் பல லட்சம் ரூபா நிதிக்கு என்ன நடந்துள்ளது என்பது தொடர்பில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாறு யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன் தெரிவித்தார்.
சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான பொதுக்கூட்டம் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவி ஆணையாளர் பொ.மோகன் தலைமையில் இடம்பெற்றது.
இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த ஆறு மாதங்களாக மக்களுக்கு பயன்பாடின்றி இருந்த சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் மீண் டும் எழுச்சி பெற்றுள்ளது.
எனினும் சங்கத்துக்குச் சொந்தமான ஆவணங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் முழுமையாக ஆய்வு செய்து இருப்புகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். சங் கம் தற்போது ஆரம்பிக்கப்பட் டுள்ள போதிலும் சங்கத்தை முடி வுறு நிலைக்கு – சோர்வு நிலைக்கு கொண்டுவந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.
தற்போது வெளிநாட்டு நிறுவனங்கள் சங்கத்துக்கு உதவ முன் வந்துள்ளன.
இந்தச் சங்கத்தை மீளக் கட்டியெழுப்பி நலிவடைந்த மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த புதிய நிர்வாகம் முன்வர வேண்டும் – என்றார். (ரி-4,50)

### யாழ்.தபால் நிலையங்களுக்கு

# மக்கள் காணிகளை வழங்கினாலும் கட்டடங்களை அமைக்க நிதியில்லை

யாழ்ப்பாணம், ஒக்.3
யாழ். குடாநாட்டில் 8 தபாலகங்களை அமைப்பதற்கான காணிகளை இலவசமாக வழங்க மக்கள் முன் வந்தபோதிலும் ஒரேயொரு தபாலகம் அமைப்பதற்கான நிதியே கிடைத் துள்ளதாக தபால் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.
குடாநாட்டில் இயங்கும் பல தபாலகங்களின் தரத்தை உயர்த்தி அவற்றுக்கு உரிய கட்டடங்களை அமைக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. எனினும் தபால் திணைக்களம் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என கடந்த வாரம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.
இந்தக் கூற்றுக்குப் பதிலளித்து உரையாற்றிய தபால் திணைக்கள அதிகாரியே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"யாழ். குடாநாட்டில் உள்ள 8 தபாலகங்களைப் புதிதாக அமைப்பதற்கான காணிகளை இலவசமாக வழங்க மக்கள் முன்வந்த போதிலும் ஒரேயொரு தபாலகம் அமைப்பதற்கான நிதியே இந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டது.
குறிப்பாக இவ்வாறு அனுமதி கோரிய தபாலகங்களில் அளவெட்டித் தபாலகத்துக்கான நிதி தற்போது கிடைத்துள்ளது. அதன் பணிக்காக 10 மில்லியன் ரூபா கிடைத்ததும் பணி நிறைவு செய்யப்படும்.
அதேபோன்றே ஒவ்வொரு தபாலக நிர்மாணப்பணிக்கும் 10 மில்லியன் ரூபா நிதி தேவையாகவுள்ளது. அதற்கான பரிந்துரைகளை அனுப்பியுள்ளோம். அவை கிடைக்கும் பட்சத்தில் தபாலகங்கள் அமைக்கும் பணிகள் இடம்பெறும்" என தபால் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (ரி-101)

# கோத்தபாய சீனா செல்ல அனுமதி கிடைக்குமா?

## முடிவை இன்று அறிவிப்பார் நீதிவான்

கொழும்பு, ஒக். 3
முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச சீனாவுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவது தொடர்பில் நீதிமன்றம் இன்று முடிவை அறிவிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.
இலங்கை அரசுக்குக் கிடைத்திருக்க வேண்டிய சுமார் 11.4 பில்லியன் வருமானத்தை அவன்ட் கார்ட் நிறுவனத்தின் மூலம், இழப்பு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக கொழும்பு தலைமை நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட 8 பேரையும் பிணையில் செல்வதற்கு அனுமதித்த நீதிவான், இவர்களை வெளிநாடு செல்வதற்குத் தடைவிதித்து உத்தரவிட்டார்.
எனினும், சீன அரசின் அழைப்பின் பேரில், பாதுகாப்புக் கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்க நாளைமறுதினம் புதன்கிழமை சீனாவுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு கோத்தபாய ராஜபக்ச திட்டமிட்டுள்ளதாகவும், அதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்றும் அவரது சட்டவாளர் கோரிக்கை விடுத்தார்.
இந்தக் கோரிக்கை குறித்த முடிவு இன்று எடுக்கப்படும் என்று நீதிவான் அறிவித்திருந்தார். நாளை மறுதினம் புதன்கிழமை தொடக்கம் இரண்டு வார காலம் சீனாவுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு கோத்தபாய ராஜபக்ச திட்டமிட்டிருந்தார்.
ஏழாவது ஷியாங்சான் அமைப்பின் பாதுகாப்பு மாநாடு எதிர்வரும் 10ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை சீனத் தலைநகர் பீஜிங்கில் உள்ள ஷியாங்சான் யிஹோ விடுதியில் நடைபெறவுள்ளது.
சுமார் 60 நாடுகள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகளும், 100 இற்கு மேற்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு புலமையாளர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.
இந்த மாநாட்டில் பங்கேற்கவே கோத்தபாய ராஜபக்ச சீனா செல்லத் திட்டமிட்டிருந்தார். எனினும், சீனாவுக்கான அவரின் பயணத்திட்டம் சாத்தியமாகுமா என்பது இன்று தெரிய வரும். (வ-5)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
02.10.2016 | 2038 | ஊதா
14 17 20 36
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 4,217,100 /-
1919

Galaxy Star
வெற்றி வாரம் 097
திகதி 02.10.2016
07 15 21 32 56
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,853,560/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், முஸ்லிம் உறவுப் பாலமாக திகழ்ந்தவர் அன்ரனி ஜெகநாதன்

## அமைச்சர் ரிஷாத் இரங்கல்

மன்னார், ஒக். 3
தமிழ், முஸ்லிம் உறவுக்கு பாலமாகத் திகழ்ந்த வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் அண்ணன் அன்ரனி ஜெகநாதனின் அகால மரணம் எனக்கு அதிர்ச்சியையும், ஆறாத துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

பிரதி அவைத் தலைவரின் மறைவு குறித்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அதில் உள்ளதாவது:

அன்ரனி ஜெகநாதன் மாகாண சபைத் தேர்தலில் அவர் போட்டியிட்டு-வெற்றி பெற்று, பிரதி அவை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தனக்கு கிடைத்த பதவியை அவர் மிகவும் நேரிய முறையில், நடுநிலை நின்று மேற்கொண்டார். தமிழ், முஸ்லிம் உறவை என்றுமே விரும்பிய அவர், முஸ்லிம்களுடன் மிகவும் நெருக்கமான உறவைப் பேணி வந்தார்.

1990ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மீண்டும் அந்தப் பிரதேசத்தில் குடியேற்றுவதற்கு, நாங்கள் மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு அவர் உறுதுணையாக இருந்தார். கடந்த வாரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய், புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலகங்களில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இணைத் தலைவர்களில் ஒருவராக இருந்து அவர், சபையை வழிநடத்திய விதமும் அவரது ஆழமான கருத்துக்களும் இன்றும் என் மனதிலிருந்து நீங்கவில்லை.

முல்லைத்தீவு மக்களின் தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவர் அரசியல் பேதங்களுக்கு அப்பால் உழைத்தவர் என்பதை நான் நன்கறிவேன். என்னுடன் மிகவும் நெருக்கமாகப் பழகிய ஒரு பண்பாளர். வாழ்க்கையில் அவர் பல்வேறு வலிகளைச் சுமந்து வாழ்ந்த போதும், மக்கள் பணிக்கு முன்னுரிமை வழங்கியவர். அன்னாரின் இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு, நான் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (ற-21,56)

# இலங்கையின் கடன் நெருக்கடி 64.9 பில்லியன் அமெரிக்க டொலர்

## போர்ப்ஸ் சஞ்சிகை தகவல்

கொழும்பு, ஒக்.3
இலங்கையின்கடன்நெருக்கடியின் தீவிரம் குறித்து, ஆய்வு பதிவொன்றை சர்வதேச புகழ்பெற்ற போர்ப்ஸ் சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

இலங்கையின்கடன்நெருக்கடியின் அளவு குறித்து யாருக்கும் தெரியாது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைக்கு அமைய, இலங்கையின் கடன் நெருக்கடி 64.9 பில்லியன்அமெரிக்கடொலராகும். அதில் 8 பில்லியன் டொலரை சீனாவுக்கு வழங்க வேண்டும். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 75% கடனுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. நாட்டின் வருமானத்தில் 95.4 % வீதம் கடன் பணத்தை செலுத்துவதற்காக ஒதுக்கப்படுகின்றது.

கடந்த அரசின் செயற்பாட்டுகளைச் சுட்டிக்காட்டியுள்ள இந்த அறிக்கை மகிந்த அரசு கடன் பெறும் போது அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

நிதி அமைச்சு வட்டாரங்களை அடிப்படையாக கொண்டு, இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

இவ்வாறான கடன்பெறும் நடவடிக்கை எவ்வளவு தூரம் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெளிவுபடுத்த முடியாது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தலைமைத்துவத்தில் நிர்மாணிக்கப்பட்ட அதிக செலவிலான பெரும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களுக்கு அதிக கடன் பெறப்பட்டுள்ளது.

2009 மற்றும் 2014ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் அரசின் கடன் பெறுமதி இரட்டிப்பாகியிருந்த நிலையில், உபயோகமில்லாத திட்டங்களுக்காக பணம் செலவிடப்பட்டமையேவெளிப்புற கடன்கள் இரட்டிப்பாகுவதற்கு காரணம்.

இந்த செலவுகளுக்குள் அதிக செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் 42 மில்லியன் டொலர் செலவிட்டு ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிலத்தடி கல் ஒன்றை நீக்கியமை போன்றவை காணப்படுகின்றன.

இந்த வருடத்தில் மாத்திரம் இலங்கை 4.5 பில்லியன் டொலர் கடனாக செலுத்த வேண்டும். அடுத்த வருடம் 4 பில்லியன் டொலர் செலுத்த வேண்டும் - என்றுள்ளது. (ற)

# வறட்சியான காலநிலையால் சுமார் ஒரு லட்சம் பேர் பாதிப்பு

கொழும்பு, ஒக்.3
நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலையால் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

திருகோணமலை, பொலன்னறுவை, அம்பாறை, குருநாகல், மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலேயே வறட்சியால் அதிக எண்ணிக்கையானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று-இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

அதேவேளை, குடிதண்ணீர் தட்டுப்பாடுக்கான தீர்வை நடை முறைப்படுத்தும் போது, முழு நாட்டையும் உள்ளடக்கிய தீர்வு ஒன்றை நடை முறைப்படுத்த வேண்டும் என்று-ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணித்துள்ளார்.

வறட்சியான கால நிலையால் ஏற்பட்டுள்ள சிக்கல் மற்றும்அதற்கான தீர்வு தொட ர்பில் கலந்துரையாடுவதற்கு கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட அவசரக் கலந்துரையாடலில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (ற)

**வீடு காணி விற்பனைக்கு**
தெல்லிப்பழை கொல்லங்கலட்டியில் 6½ பரப்புக் காணியில் அமைந்துள்ள 6அறை வீடு விற்பனைக்கு உண்டு. கீரிமலை மற்றும் காங்கேசன்துறை வீதியிலிருந்து 600m தூரத்தில் (திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் பார்வையிடலாம்)
077 100 1390

**சுத்தம் செய்யப்படும்**
உங்களின் வீடுகள், கடைகள், நிறுவனங்கள், கம்பனிகளில் உள்ள மலசலகூடங்கள் நிறைந்து விட்டதா குறைந்த செலவில் மிகச் சிறந்த முறையில் சுத்தம் செய்து தரப்படும்.
தொடர்பு: 076 562 8137

**பணியாளர்கள் தேவை**
யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்க இருக்கும் புடைவை காட்சியறைக்கு புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள ஆண்/ பெண் பணியாளர்களும் பழக விரும்புபவர்களும் உடன் தேவை.
077 074 8999

**காணி விற்பனைக்கு**
யாழ். மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி பள்ளிக்குப் பின் உள்ள காணி (3 பரப்பு) கொல் ஒழுங்கை (BLACK Smith Lane)
நன்னீர் கிணறு உள்ளது
விலை பேசித் தீர்மானிக்கலாம்
தொ.பே. 077 349 0642

**For the information of Medical Profession**
வைத்திய (உடல்நல) உபகரணங்கள்
TRACHIOSTOMY TUBES
BIOPSY GUN
J J STENTS
PEG TUBE SETS
ELECTRIC BREAST PUMPS
AUTOCLAVES
PHLEGM SUCTION UNITS
ALL KINDS OF CATHETERS
வனிக்கா சேஜிக்கல்ஸ்
203, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 2220077 077 4422367

**வீடு வாடகைக்கு உண்டு**
பரந்தன் தபால் நிலையத்திற்கு அருகில் A9 வீதியில் மூன்றுஅறைகளுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. வாகனத் தரிப்பிட வசதி உண்டு.
தொடர்பு: பாலா - 077 946 2753
வதனா - 077 363 8341

**நாஹறா மருத்துவ நிலையம்**
பேச முடியாது அவதியுறும் பாரிசவாதம், எலும்புகள் பாதிப்படையும் வாதம், ஆஸ்மா, தீராத புண்கள் குணப்படல்.
வங்கி முன் லேன்,
சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவீடு), மானிப்பாய்.
077 321 2740

சீட்டிழுப்பு வாரம்: 50
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 30.09.2016
அடுத்த செவ்வாய்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 96,189,900/=
B 13 37 67 74

வெள்ளிக்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 501
சீட்டிழுப்பு திகதி 2016.09.30
வெற்றி இலக்கங்கள்
28 36 47 53 H
அடுத்த செவ்வாய்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 14,492,760/=

**SARUKAYA CONSTRUCTION (pvt) Ltd**

Sarukaya Construction (pvt)Ltd is a CIDA C4 Graded Construction Company which Incorporated 7 years ago in construction of building, Water supply, irrigation and roads work.

Due to rapid expansion and growth the company is currently inviting application from dynamic result oriented personnel with the proven track record and knack for team work, to join our team of professionals in the above capacity to work on our ongoing and new construction projects.



**VACANCY**

- **Technical Officer**
  - Should possess a HND in Civil Engineering or NCT (Civil) or Equivalent
  - At least 1 year experience in construction industries.
  - Attractive Salary and relevant allowances will be paid.
- **Purchasing Officer** - A/L qualification with construction materials knowledge.
- **Store Keeper** - A/L qualification with computer knowledge.

Please forward your CV to *vacancynsc@gmail.com* or
No 207, Navalar Road, Jaffna - (021) 221 3663

**ஸ்ரீ சீரடி சாயி பாபாவின் 8 ஆவது வருட மஹோற்ஷவப் பெருவிழா 2016**



அன்பான அடியார்களே!
03.10.2016 மாலை 5 மணிக்கு-கொடியேற்றம்
11.10.2016 மாலை 2 மணி (பாபா சமாதி தினம்) விஜயதசமி
12.10.2016 மாலை 5.30 மணிக்கு வேட்டைத்திருவிழா
13.10.2016 மாலை 6 மணிக்கு சப்பைரதம்
14.10.2016 மாலை 5 மணிக்கு தேர்த்திருவிழா
15.10.2016 மாலை 4 மணிக்கு தீர்த்த உற்சவம்
16.10.2016 மாலை 5 மணிக்கு லேண்டித் தோட்ட உற்சவம்
அனைவரும் வருக! பாபா அருள் பெறுக
"சீரடி சாயி மந்திர்"
வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 077 722 2568

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர், பெண்கள் துஷ்பிரயோகங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரிப்பு

## உதவி மாவட்டச் செயலாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக்.3

கடந்த காலங்களை விட மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர் பெண்கள் துர்நடத்தை ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ளது என்று தெரிவித்தார் உதவி மாவட்டச் செயலாளர் எஸ். ரங்கநாதன்.

நேற்றுமுன்தினம் பாலியல்துர்நடத்தைச் சம்பவங்களின் போது கிடைக்கக் கூடிய ஆதாரங்களை சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பாக பொலிஸ் நிலையங்களின் சிறுவர் பெண்கள் பிரிவில் கடமையாற்றும் பெண் பொலிஸ் அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாலியல் துர்நடத்தை அல்லது வன்முறை அதிகரித்துள்ளமைக்கு பதிவுகள் செய்யும் முறைமை சிறந்ததாக உள்ளமையா அல்லது முன்னரை விட துர்நடத்தை வன்முறை வீதம் அதிகரித்துள்ளதா என்பது புரியவில்லை. இதுபற்றியும் ஆய்வு செய்து கண்டறிய வேண்டியுள்ளது.

எப்படியிருந்தாலும் சிறுவர் பெண்களுக்கெதிரான வன்முறைகள் இடம்பெறுகின்றது அல்லது அதிகரித்திருக்கின்றது என்பது ஒரு சிறந்த சமூகக் கட்டமைப்புக்கு ஆரோக்கியமானதல்ல.

கடந்த மூன்று மாதங்களுக்குரிய பால் நிலை சம்பந்தமான பதிவுகளை உற்றுக் கவனித்தால், அறிக்கையிடப்பட்டதன் அடிப்படையில் சுமார் 250 வன்முறைப் பதிவுகள் கிடைத்திருக்கின்றன.

பால்நிலை அடிப்படையில் நோக்கினால் ஆண்கள் பாதிக்கப்படுவதை விட இரண்டரை மடங்கு அதிகமாக பெண்கள் பாதிக்கப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

இவை வெளிப்படையாக பதிவுகளுக்கு வந்த வன்முறைச் சம்பவம்தான், இவை தவிர வெளியில் வராத பிரச்சினைகள் இன்னும் இருக்கக் கூடும்.

பாதிக்கப்படுபவர்களுக்கு சரியான நிவாரணங்கள், சட்ட உதவிகள் கிடைக்கின்றதா என்பதும் பாதிக்கப்பட்டவரை சமூக நீரோட்டத்தோடு மீண்டும் இணைப்பதற்கு தற்போதுள்ளவழிமுறைகள்போதுமானதாக இருக்கின்றதா என்பதும் ஒரு கேள்விக்குறியாகவுள்ளது.

பால்நிலை சார்ந்த வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சேவை வழங்கும் இடங்களான பிரதேச செயலகங்கள், பொலிஸ் நிலையங்கள், வைத்தியசாலைகள் என்பனவற்றில் நிவாரணங்கள் எந்தளவு கிடைக்கின்றன அவை நீடித்து நிலைக்கக் கூடிய தீர்வாக இருக்கின்றதா என்றும் கண்டறியப்பட வேண்டும் - என்றார். (ற)



ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்) அரசியல் பணிமனை நேற்று வவுனியாவில் திறக்கப்பட்டது. வவுனியா, தேக்கவத்தையில் நேற்று மு.ப. 10 மணியளவில் இடம் பெற்ற நிகழ்வில் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் திறந்தார். நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட கட்சியின் அமைப்பாளர்கள், வவுனியா மாவட்ட கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ற-21)

## கஞ்சா புகைத்த நோயாளி வாகனத்தில் தப்பி ஓட்டம்

சாவகச்சேரி, ஒக்.3

தென்மராட்சிப் பிரதேச வைத்தியசாலையில் தங்கி இருந்த தென்பகுதி நோயாளி ஒருவர் தண்ணீர் வாங்குவதற்குச் செல்வதாகக் கூறிவிட்டு, அங்கு நின்ற வாகனத்தினுள் புகுந்து கஞ்சா புகைத்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

கன்ரீனுக்குச் சென்ற நோயாளி திரும்பிவராத நிலையில், அவரைத் தேடிச் சென்ற பாதுகாப்பு ஊழியர் அங்கு நின்ற வாகனம் ஒன்றில் இருந்து புகை வருவதை அவதானித்து, அருகில் சென்று பார்த்த போதே இந்த விடயம் அம்பலத்துக்கு வந்தது. தனக்கு கஞ்சா புகைக்கும் பழக்கம் உள்ளதால், குறித்த வாகனச் சாரதியிடம் கூறி கஞ்சா வாங்கிப் புகைப்பதாகவும், இது தொடர்பில் எவருக்கும் சொல்ல வேண்டாம் என்றும் அவர் பாதுகாப்பு ஊழியரிடம் கேட்டுள்ளார். எனினும் பாதுகாப்பு ஊழியர் இது தொடர்பில் வைத்தியசாலைப் பொலிஸாரிடம் சென்று முறைப்பாடு செய்ததாகவும், பொலிஸார் வருவதற்கு இடையில் அந்த நோயாளி வாகனத்தில் ஏறி தலைமறைவானதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறான சம்பவங்களுக்கு வைத்தியசாலையில் நிலவும் குடிதண்ணீர்பிரச்சினையும் முக்கிய காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9)

## விஞ்ஞான ஆய்வு கூடமின்றி இயங்கும் ரொட்டவெவ முஸ்லிம் வித்தியாலயம்

### நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோர், மாணவர் கோரிக்கை

திருகோணமலை, ஒக். 3

திருகோணமலை வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட ரொட்டவெவ முஸ்லிம் வித்தியாலயத்தில் தரம் 1 தொடக்கம் 13 வரை வகுப்புக்கள் காணப்படுகின்ற போதும், விஞ்ஞான ஆய்வு கூடம் மற்றும் பாட ரீதியான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது என்று பெற்றோர்களும், மாணவர்களும் குற்றஞ்சாட்டினர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

சுமார் 270 மாணவர்கள் கல்வி பயிலும் இந்தப் பாடசாலையில் 18 ஆசிரியர்கள் தேவை. 12 ஆசிரியர்களே உள்ளனர். நகர்ப்புற பாடசாலைகளில் கல்வி அபிவிருத்தி விடயத்தில் அக்கறை காட்டுகின்ற கல்வி அமைச்சும், கல்வித் திணைக்கள உயரதிகாரிகளும் அதிகஷ்ட பாடசாலைகளாக இனங்காணப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்தியில் அக்கறை காட்டுவதில்லை. விஞ்ஞான ஆய்வு கூடம் 6ஆம் ஆண்டு தொடக்கம் 11ஆம் ஆண்டு வரை தேவைப்படுகின்ற போதும், கவனக்குறைவாக அதிகாரிகள் செயற்படுகின்றனர். இது தொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ற-28)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சங்கரன் பூலோகராஜா
திதி: 03.10.2016

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த
எமது அப்பாவே!
இன்றுடன் ஓராண்டு முடிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு
மறையாது அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைப்
பிரார்த்திக்கின்றோம்

தோற்றம் 30.09.1957 மறைவு 15.10.2015

என்றும் நினைவில்
குடும்பத்தினர்,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.



16ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
சுந்தரம் யோகானந்தா
திதி: திருதிகை (03.10.2016)

மலர்வு 20.10.1954 உதிர்வு 30.09.2000

ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறவில்லை எம் மனங்கள்



நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
மனைவி, மக்கள்,
மருமகள், பேரன்



31ஆம் நாள் பிரார்த்தனை

எமது பாடசாலை ஆசிரியர்
இ. விக்னராஜ் அவர்களின்
அன்பு மாமனார்
அமரர் சுந்தரம்பிள்ளை
விக்கினேஸ்வரன்
அவர்களின் ஆத்மா சாந்தியடைய
வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



ஆசிரியர் நலன்புரிகழகம்,
யா/கைதடி குருசாமி வித்தியாலயம்.



16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 . 11 . 1937



மறைவு 30 . 09 . 2000

அமரர் பொன்னையா குகதாசன்
(பிரபல கட்டடக் கலைஞர்)
திதி: திருதியை

அகல் விளக்காய் ஒளிதந்து ஆலமரம் போல் தழைத்தோங்கி
இகமதில் செழிப்புடன் வாழ்வதற்கு அன்பின் வழிகாட்டிய
எம் தெய்வத்துக்கு பதினாறு ஆண்டு நிறைவதனில் அஞ்சலிகள் பல

கோமாலயம்
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

என்றும் நினைவில்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



15ஆம் ஆண்டு பிரிவின் நினைவலைகள்
03.10.2016

திரு முகிழ்ப்பு 01 . 03 . 1939



திரு அவிழ்ப்பு 03 . 10 . 2001

வட இலங்கை சர்வோதய ஸ்தாபகரும் ஜீவதானியும் சமூக சேவையாளருமாகிய தொண்டர்

கந்தையா திருநாவுக்கரசு

"என் கடன் பணி செய்து கிடப்பதே"
"எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் - மக்கள்
இனமீன்ற தமிழ் நாடு தனக்கும் -என்னால்
தினையளவு பயனேனும் கிடைக்குமென்றால்
செத் தொழியும் நாளெனக்குத் திருநாளாகும்"

இறுதிமூச்சு வரை வாழ்ந்து காட்டி விட்டுச் சென்ற எம் தந்தையே!
நீங்கள் மறைந்து ஆண்டுகள் பதினைந்து சென்றாலும் உங்கள்
ஆத்மா சிவயோக சுவாமிகளின் திருவடி நிழல் நிற்கப்
பிரார்த்திக்கின்றோம்.

03.10.2016 பிற்பகல் 3.00 மணிக்கு வட இலங்கை சர்வோதய புஸ்பா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ள தொண்டரின் நினைவு தின நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சர்வோதய சேவை வளாகம்,
புங்குடுதீவு -03

வட இலங்கை சர்வோதய
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அபிவிருத்திச் சங்க கட்டட சீரமைப்பு குறித்து குற்றச்சாட்டு

வலி.தென்மேற்கு, ஒக்.3
சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடச் சீரமைப்பு வேலைகள் தற்போது நடைபெறுகின்றன. சீரமைப்பில் சுமார் 75 வருடங்களுக்கு மேலான பழைமை வாய்ந்த - தரமற்றதாகக் கருதப்படும் தூண்கள் பயன்படுத் தப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இது குறித்து அவர்கள் தெரிவித்ததாவது:

சுதுமலை வடக்கு ஜே/129 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இந்தக் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் அமைந்துள்ளது.

அரசால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட்டத்தின் கீழ் இந்தக் கட்டடம் தற்போது சீரமைக் கப்படுகின்றது. கட்டடத்தில் உள்ள பழைமைவாய்ந்த 12 தூண்களையும் பயன்படுத்தி கட்டடத்தின் மீதி வேலைகள் நடைபெறுகின்றன. போர் காரணமாகக் கூரையின்றி மழையிலும் வெயிலிலும் சேதமடைந்த நிலையில் இந்தக் கட்டடம் இருந்தது. தூண்கள் உறுதியாக இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்காது. அதைப் பொருட்படுத்தாது தரம் குறைந்த - பழைமை வாய்ந்த தூண்களைப் பயன்படுத்தி, கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றனர்.

இது தொடர்பான பல முறைப்பாடுகள் எமக்கு கிடைத்துள்ளன. தொழில்நுட்ப உத்தியோகத்தரின் கண்காணிப்பில் இந்தக் கட்டட வேலைகள் நடைபெறுகின்றன. இருதூண்களைத் தவிர, ஏனைய தூண்கள் பலம் வாய்ந்தனவாக உள்ளன என்று அவர் உறுதிப்படுத்தியுள்ளார். பழுதடைந்த இரு தூண்கள் மாற்றப்பட்டு, சீரமைப்பு நடைபெறுகின்றது- என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தெரிவித்தார். (ற-ரி,115)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
20 . 08 . 1945



ஆண்டவன் அடியில்
07 . 10 . 2013

அமரர் சின்னத்தம்பி ஆனந்தவேல்

ஆண்டுகள் மூன்று ஆனதேவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் பண்பும் நிறைந்த பொக்கிஷம்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர் என்றும் உங்கள்
நினைவுகளுடன் உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

குறிப்பு: 03.10.2016 வீட்டில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

7ஆம் கட்டையடி,
தொண்டமானாறு.

குடும்பத்தினர்.


# அன்புவழிபுர கலைமகள் ம.வியில் பதில் ஆசிரியர் இன்றி இடமாற்றம்

## மாணவர்களில் கற்கைக்கு பாதிப்பு எனப் பெற்றோர்கள் குற்றச்சாட்டு

மூதூர், ஒக். 3
திருகோணமலை கல்வி வலயத்துக்கு உட்பட்ட அன்புவழிபுரம் கலைமகள் மகா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர் தரம் மற்றும் சாதாரணத்தில் கல்வி கற்பித்த இரண்டு முக்கிய பாடத்துக்கான ஆசிரியர்கள், பதில் ஆசிரியர்கள் இன்றி இடமாற்றப்பட்டுள்ளனர். இதனால் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது.

இவ்வாறு பெற்றோர் குற்றஞ்சாட்டினர்.

இதுகுறித்து தெரிவிக்கப்பட்டதாவது:

க.பொ.த. உயர்தரத்தில் புவியியல் பாடம் கற்பித்து வந்து ஆசிரியரும், க.பொத.சாதாரண தர கணிதபாட ஆசிரியரும் பதில் ஆசிரியர் நியமிக்காது இடமாற்றப்பட்டுள்ளனர். அவர்கள் மாற்றப்பட்டு, இரண்டு மாதங்களாகியுள்ளன. புறநகர் பகுதியில் உள்ள மாணவர்கள் நகருக்குச் சென்று-தனியார் வகுப்புக்களிலோ ஏனைய வழிகளிலோ கற்கையைத் தொடர முடியாதுள்ளது.

இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் குறித்த பாடங்களுக்கென இடமாற்றம் செய்யப்பட்டு, மாற்றப்பட்ட பாடசாலைகளில் வேறு பாடங்களுக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்தப் பாடசாலைக்கு பதில் அசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று அவர்கள் தெரிவித்தனர். (ற-40)

## டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு சிரமதானங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.3
தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.நகரப் பகுதியில் சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

நகரில் முற்றவெளி, பண்ணை, தனியார் பஸ்தரிப்பு நிலையவளாகம், கொட்டடி போன்ற பகுதிகளில் இந்த சிரமதானப் பணி கள் நடைபெற்றன. மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் இவை முன்னெடுக்கப்பட்டன.

யாழ்.நகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆறுமுகதாசன் தலைமையில் இடம்பெற்ற சிரமதானப் பணிகளில், மாநகர சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள், பொதுமக்கள் போன்றோர் ஈடுபட்டனர். சிரமதானப் பணிகளில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இதில் கலந்து கொண்டனர். (ற-17)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு மண்ணுக்கு ஏற்றவாறு விதைகளை இங்கு உற்பத்தி செய்க

## உ. கிழங்கு உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக்.3

யாழ். குடாநாட்டின் மண்ணுக்கு ஏற்றவாறு மரக்கறி விதைகளை இங்கேயே உற்பத்தி செய்ய வேண்டும். இங்கு உற்பத்தி செய்யப்படும் மரக்கறி விதைகள் மூலம் மரக்கறிச் செய்கையை மேலும் அதிகரிக்க முடியும்.

இவ்வாறு உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் இ.தெய்வேந்திரம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அண்மையில் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை முன்வைத்தேன். குடா நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி விதைகளை ஆராய்ச்சிக்கு உட்படுத்தி, அவை முளை திறன் கொண்டதை உறுதிப்படுத்திய பின்னரே விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். குடாநாட்டின் மண்வளத்துக்கு ஏற்ற வகையில் சகல மரக்கறி இனங்களையும் இங்கே போதியளவு உற்பத்தி செய்ய வேண்டும். வெளியிடங்களில் இருந்து தருவிக்கப்படும் மரக்கறி விதைகளை இங்கே விவசாயிகள் பயிரிடும்போது அவை அதிக முளை திறன் அற்றுகாணப்படுகின்றன. அவற்றின் காய்க்கும் தன்மையும் குறைவாகவே காணப்படுகின்றது. மரக்கறி விதைகளை இந்த மண்ணுக்கு ஏற்றவாறு இங்கே உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.- என்றார். (ற-17)

# 30 அடி நீர் தேக்கும் நிலையை அடைந்தது இரணைமடுக் குளம்

யாழ்ப்பாணம், ஒக். 3

இரணைமடுக் குள சிரமைப்பின் தற்போதைய நிலையின்படி 30 அடி நீர் தேக்கும் நிலையை அடைந்துள்ளது என்று விவசாய சம்மேளனம் வடமாகாண ஆளுநருக்கு எழுத்து மூலம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப்பெரும் அபிவிருத்தியாக இடம்பெறுகின்ற இரணைமடுக் குளத்தின் பணிக்கான மண் அகழ்வில் ஏற்பட்ட தாமதம் காரணமாகத் தடைப்பட்டது. குளக்கட்டின் சீரமைப்புப் பணிகள் முழுமையாக நிறுத்தப்பட்ட நிலையில், இந்த விடயம் கடந்த மாதம் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

அதையடுத்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் தற்போது நாள் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 500 கியூப் மண் பெறப்பட்டு பணிகள் மிகத் துரிதமாக இடம்பெறுகின்றன.

தற்போது நிலவும் காலநிலை இன்னும் இரண்டு வாரங்கள் நீடிக்குமானால் எதிர்வரும் 14ஆம் திகதியளவில் 34 அடி நீர் சேமிக்கக் கூடிய அளவிலான பணிகள் நிறைவுறும் என்று என பொறியியலாளர்களும் கூறுகின்றனர். குறித்த பணிகளுடன் துரிசு , வெளி வாய்க்கால் உள்ளிட்ட பணிகளும் மிக வேகமாக இடம்பெறுகின்றது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-10)

# இத்தாவில் — முகமாலை இடையே பஸ் தரிப்பிடம் அமைக்க கோரிக்கை

சாவகச்சேரி, ஒக்.3

பச்சிலைப்பள்ளி மேற்கு இத்தாவில் தொடக்கம் முகமாலை வரையான ஏ - 9 வீதியில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்துக்கு பஸ் தரிப்பிடங்கள் அமைக்கப்படவில்லை. வீதியின் இரு மருங்கிலும் குறைந்தது இரண்டு பஸ் தரிப்பிடங்கள் அமைத்துத் தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் வீதியின் வடக்குப் புறமாக வெடிப் பொருள்கள் அகற்றப்பட்டு, மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டனர். முகமாலைக்கும் இத்தாவிலுக்குமிடையில் பயணிகள் வாகனத் தரிப்பிடம் இல்லை. பஸ்களை நிறுத்த சாரதிகள் பொலிஸாருக்கு அஞ்சி மறுப்பதால் இத்தாவிலில் அல்லது முகமாலையில் இறங்கி நடந்து வர வேண்டிய நிலை உள்ளது என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

ஏற்கனவே இந்திராபுரம் சந்தியில் இரு பக்கமும் வாகனத் தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டிருந்தது. இந்திராபுரம் சந்தி மற்றும் முகமாலைக்கு இடையில் ஒரு இடத்திலும் வீதியின் இரு பக்கமும் தரிப்பிடங்களை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-9)

# பாலிநகர் மக்களின் எதிர்ப்பால் விருந்தினர் விடுதிக்குத் தடை

## அனுமதி வழங்க மறுத்தனர் இணைத் தலைவர்கள்

முல்லைத்தீவு, ஒக்.3

முல்லைத்தீவு, பாலிநகர் கிராம மக்களின் கடும் எதிர்ப்பால் குறித்த பகுதியில் தனியார் ஒருவரால் அமைக்கப்படவிருந்த விருந்தினர் விடுதிக்கான அனுமதி பிரதேச ஒருங்கிணைப்பு இணைத்தலைவர்களால் மறுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் கடந்த வாரம் நடத்தப்பட்ட பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இணைத் தலைவர்கள் விடுத்திக்கு அனுமதி மறுத்தனர்.

கடந்த மாதம் 26ஆம் திகதி மாந்தை கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் பிரதேச செயலாளர் தலைமையில் நடத்தப்பட்டது. அதில் மீள்குடியேற்ற அமைச்சரின் நிதியுதவியில் கிராமங்களில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி சார்ந்த வேலைத்திட்டங்கள், ஒட்டறுத்தகுள கிராமத்தின் மாதிரிக் கிராமத்துக்கான அனுமதிகள் , பாலிநகர் கிராமத்தில் தனியார் ஒருவரால் அமைக்கப்பட உள்ள விருந்தினர் விடுதிக்கான அனுமதி என்பவற்றை பிரதேச செயலகம் இணைத்தலைவர்களின் அனுமதிக்காகச் சமர்ப்பித்தது.

குறித்த விருந்தினர் விடுதிக்கான அனுமதி தொடர்பாக கூட்டத்தில் கலந்துகொண்ட சமூக அமைப்புக்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர். சமூக அமைப்பின் சார்பாக கலந்து கொண்ட பெண்கள் விருந்தினர் விடுதிக்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

இந்த தனியார் விருந்தினர் விடுதி எங்கள் கிராமத்தில் அமைக்கப்படுவது போரால் பாதிக்கப்பட்ட எங்கள் பகுதியில் உள்ள இளம் சமுதாயத்தை தீய வழிக்கு இட்டுச் செல்வதாக அமைந்துவிடும். விருந்தினர் விடுதியாக அமைக்கப்படும் இந்த விடுதி காலப்போக்கில் மதுபான விற்பனை நிலையமாகவும் மாறலாம். இங்குள்ள இளைஞர்கள் இங்கு சென்று மது அருந்தும் சந்தர்ப்பங்களும் உருவாக்கப்படும். எங்கள் பகுதிக்கு இவ்வாறான திட்டங்கள் ஒரு காலமும் அனுமதிக்க வேண்டாம். இது கிராமத்தை மட்டுமல்லாது பிரதேசத்தையும் பாதிக் கும்- என்று அவர்கள் தெரிவித்தனர்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தால் முன்மொழியப்பட்ட திட்டங்களுக்கு அனுமதிகளை வழங்கிய இணைத்தலைவர்கள் விருந்தினர் விடுதி தொடர்பாக கலந்தாலோசித்த பின்னர் இந்தப் பகுதி வாழ் மக்கள் விரும்பாத எந்த திட்டத்தையும் அமைப்பதற்கு நாங்கள் தயாராக இல்லை. குறித்த விடுதிக்கான அனுமதி வழங்கமுடியாது - என்றனர். (ற-21,ரி7)



தென்மராட்சி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும், தேசிய டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு நடத் தப்படும் சோதனைகளில், டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய இடங்கள் பொலிஸார் மற்றும் சுகாதாரப் பகுதியினரால் கண்டு பிடிக்கப்பட்டன. அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். (ற-9)

# நூல்கள் அன்பளிப்பு

தென்மராட்சி, ஒக். 3

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கைதடி பொது நூலகத்திற்கு பாடசாலை மாணவர்களுக்கான பாடப் புத்தகங்கள் அடங்கிய ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பாக இன்று வழங்கப்படவுள்ளன.

அந்தப் பகுதியை சேர்ந்த குடும்பத்தினர் தமது தாயாரின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு நூல்களை அன்பளிப்பாக வழங்கவுள்ளனர் என பொது நூலக நூலகர் தெரிவித்தார். (ற-9)

# அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.3

மானிப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கான புதிய உட்கட்டுமானங்களுக்கான அடிக்கல் நடும் வைபவம் இன்று திங்கட்கிழமைகாலை9மணிக்கு பிரதேச வைத்திய அதிகாரி மருத்துவர் ஆ.காந்தநேசன் தலைமையில் இடம்பெறும்.

பிரதேச வைத்தியசாலைக்கான நவீன மருத்துவ ஆய்வுகூடம், வாகனங்கள் தரிப்பிடம் ஆகிய இரு உட்கட்டுமானங்களே அமைக்கப்படவுள்ளன.

நிகழ்வுக்கு வடமாகாண சபை உறுப்பினர், அரச அலுவலர்கள், பொது அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் வலி.தென் மேற்கு பொது மக்களை கலந்து சிறப்பிக்குமாறு நோயாளர் நலன்புரி சங்க செயலாளர் இ.மனோகரன், பொருளாளர் பொன்.கனகரத்தினம் ஆகியோர் கேட்டுள்ளனர். (ற-50)

# கற்பானைக்குள கிராமத்துக்கு குடிதண்ணீர் விநியோகிக்க பணிப்பு

மட்டக்களப்பு, ஒக்.3

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரடியனாறு கற்பானைக்குள கிராம குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தின் குறைபாடுகளை ஆராய்ந்து, உடனடியாக கிராம மக்களுக்கு குடி தண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ளுமாறு மாவட்ட செயலாளர் உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

400 குடும்பங்களுக்கு குடி தண்ணீர் வழங்கும் வகையில் 7 கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட விநியோக வேலைத்திட்டம் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

அந்த வேலைத்திட்டம் குறித்து பார்வையிட சென்ற மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன் உள்ளிட்டோர் அடங்கிய குழுவினரது அறிக்கைக்கு அமைவாக மாவட்ட செயலாளர் நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் கிணறுகள் அமைக்கப்பட்டு இரண்டு நீர்த் தாங்கிகளும் அமைக்கப்பட்டுள்ளன. வீடுகளுக்கான குடிதண்ணீர் விநியோகத்துக்கான இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஒவ்வொரு தாங்கிகளும் 40 ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்டவைகளாக மாகாண நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் மேற்பார்வையில் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் எதிர்வரும் புதன்கிழமை மாவட்டச் செயலகத்தில் மாவட்ட செயலாளர் தலைமையில் கலந்துரையாடப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவருக்கு சிகரெட் விற்றோர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 3
யாழ். நகரப்பகுதியில் உள்ள தேநீர்ச் சாலையில் 21 வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த இரு வர்த்தகர்கள் பொலிஸாரிடம் மாட்டினர். அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். குறித்த வர்த்தகர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.
21வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்கு புகையிலை பொருள்கள், சிகரெட் என்பன விற்பனை செய்யப்படுகின்றன என்று தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத் ததை அடுத்து குறித்த இரு கடைகளையும் முற்றுகையிட்ட பொலிஸார், சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்யும்போது கையும் மெய்யுமாகப் பிடித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. கைதான சிறுவர்கள் எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டனர். விற்பனையாளர்கள் இருவருக்கும் எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4,107)

## வடக்கில் ஆறு உபதபாலகங்கள் தற்போதும் மூடப்பட்ட நிலையில்

யாழ்ப்பாணம், ஒக்.3
வடக்கு மாகாணத்தில் போரால் மூடப்பட்ட உப தபாலகங்களில் 6 தபாலகங்கள் இன்னமும் திறக்கப்படவில்லை. இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண உதவி தபால்மா அதிபர் என். ரட்ணசிங்கம். அவர் தெரிவித்ததாவது:
90 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட உள்நாட்டுப் போர் காரணமாக பல அரச, மற்றும் தனியார் நிறுவனங்கள், திணைக்களங்கள் மூடப்பட்டன. அதுபோலவே தபால் திணைக்களத்திலும் பல உப தபாலகங்கள் மூடப்பட்டன. தற்போது மீளவும் பல திறக்கப்பட்டாலும் வடக்கு மாகாணத்தில் இன்னும் 6 உப தபாலங்கள் திறக்கப்படாத நிலையில் உள்ளன. யாழ்.மாவட்டத்தில் இரு உபதபாலகங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு உபதபாலகமும், மன்னார் மாவட்டத்தில் இரு உபதபாலகங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு உபதபாலகமும் திறக்கப்படாதுள்ளன.
கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் விடுவிக்கப்பட்ட பகுதியில் இயங்கி வந்த உபதபாலகங்களை மீள இயங்குவதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. கொக்குத்தொடுவாய் மற்றும் முகமாலையில் உள்ள உபதபாலகங்களுக்கே அனுமதி கோரப்பட்டுள்ளது. விரைவில் அதற்கான அனுமதி கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம் – என்றார். (ற-ரி)



1991ஆம் ஆண்டு விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவன் கனகசிங்கம் சத்தியமூர்த்தியின் நினைவாக கடந்த 28ஆம் திகதி குருதிக்கொடை முகாம் அந்தக் கல்லூரியில் நடத்தப்பட்டது. பன்னாட்டு சிறுவர் தினத்தை முன்னிட்டு இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. கல்லூரியின் உயர்தரப் பிரிவு மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட முகாமில் மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு குருதிக் கொடையளித்தனர். (ற-21)

## அபிவிருத்தித் திட்டங்களின் வெற்றி அதிகாரிகள் கைகளிலேயே உள்ளன

### இதயசுத்தியுடன் நிறைவேற்ற வேண்டும் என வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஒக். 3
மக்களைப் பொருளாதார நிலையில் மேம்படச் செய்வதற்கு கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் எவ்வளவு திட்டங்கள் வகுக்கப்பட்டாலும், திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற அரச உத்தியோகத்தர்கள் கீழ் மட்டத்துக்கு இறங்கிச் சென்று இதயசுத்தியுடன் நிறைவேற்ற முயலாதவிடத்து அந்தத் திட்டங்கள் அர்த்தமற்றவையே.
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன்.
முயற்சியே எமது மூலதனம் எனும் தொனிப்பொருளில் வடக்குத் திணைக்களத்தால் நேற்று கிளிநொச்சியில் கண்காட்சி நடத்தப்பட்டது. அதன் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும்போதே முதலமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
1948ஆம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் ஜனநாயக அரசியல் முறைமைகள் வளர்ச்சி பெறத்தொடங்கிய போது ஜனநாயக முறைமைகளை மக்களிடையே அறிமுகப்படுத்தவும், கிராமிய மட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் உருவாவதை உறுதிப்படுத்தவும் கிராமஅபிவிருத்தி என்ற கருப்பொருள் உருவாக்கம் பெற்றது.
இலங்கையிலும் சமகாலத்தில் இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மக்களுக்கான கிராம அபிவிருத்திப் பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன. கீழ் மட்ட நிலையிலிருந்து அறிமுகமான அரசியல் அறிமுகம் கீழிருந்து மேல் நோக்கியதாக வளர்ச்சியுறத்தக்க வகையில் ஜனநாயக அமைப்பு முறை உருவாக்கப்பட்டது. அரச நிதிகளும் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஊடாகவே அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டன.
இது காலப்போக்கில் பன்முகப்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகளாக மாறி மக்கள் பிரதிநிதிகளூடாக, அவையும் கிராமங்களில் உள்ள அபிவிருத்தி வேலைகளுக்கும் மற்றும் உட்கட்டுமானப் பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டன. கிராமங்கள் தோறும் வாழ்வாதார படிநிலையை உயர்த்துவதற்கும், அதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படச் செய்வதற்கும் கிராம அபிவிருத்தித் திணைக்களம் பல்வேறு திட்டங்களைத் தயாரித்துச் செயற்படுத்தி வருகின்றமை மகிழ்வைத் தருகின்றது.
வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் ஏனைய மாகாணங்களின் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக விசேட தேவையுடையவர்கள் போரால் பாதிக்கப்பட்ட போராளிகள், அவர்களின் குடும்பங்கள், புனர்வாழ்வு அளிக்கப்பட்ட போராளிகள், அவர்களின் குடும்பங்கள் ஆகியோரின் வாழ்வாதாரங்களையும் ஊக்குவிக்க வேண்டிய அத்தியாவசிய தேவை எமக்கு இருக்கின்றது.
இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருள்கள் அனைத்தும் எவ்வாறான தயாரிப்புக்கள் மூலமாகத் தயாரிக்கப்பட்டவை எனத் தெரிவிக்கப்பட்டது. மேலதிகமாக சுயதொழில் வேலை வாய்ப்புகளுக்கு ஏற்ற உதவிகளும் திணைக்களத்தால் வழங்கப்படுகின்றது. வாழ்வாதார நிலைகளை உயர்த்தக் கூடிய வகையில் குடிசைக் கைத்தொழில்கள் அல்லது சிறு கைத்தொழில்கள் போன்ற இன்னோரன்ன தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்குரிய நிதி வளங்களையும் உதவுவதற்கு திணைக் களத்தினூடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மக்களைப் பொருளாதார நிலையில் மேம்படச் செய்வதற்கு எவ்வளவு திட்டங்கள் வகுக்கப்பட்டாலும் அந்தத் திட்டங்கள் முறையாகப் பயனாளிகளால் பின்பற்றப்படாதவிடத்து அவை பயனற்றதாகிவிடும். இவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற அரச உத்தியோகத்தர்களும் கீழ் மட்டத்துக்கு இறங்கிச் சென்று அந்தத் திட்டங்களை இதயசுத்தியுடன் நிறைவேற்ற முயலாத விடத்து அவையும் அர்த்தமற்றவையே – என்றார். (ற-21)

## போதையில் சாரத்தியம் 15,000 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஒக். 3
மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு 15ஆயிரம், ரூபா தண்டம் விதித்தது பருத்தித்துறை நீதிமன்று. 50 மணித்தியாலம் சமுதாய சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்துமாறும் சீர்திருத்த திணைக்கள அதிகாரிக்கு உத்தரவிட்டது.
நெல்லியடி பொலிஸார் தாக்கல் செய்த இரண்டு வழக்குகளுக்கே இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டது.
(ற-4,107)

## சிறுவர் முதியோர் கௌரவிப்பு

பளை, ஒக்.3
பன்னாட்டு சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேச சிறுவர்கள் முதியோர்கள் கௌரவிப்பு நிகழ்வு இன்று மு.ப. 11 மணிக்கு இத்தாவில் வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
பாடசாலை அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் இத்தாவில், வேம்பொடுகேணி, செல்வபுரம், கச்சார்வெளி, அரசர்கேணி, முகமாலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சிறுவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர் என்றும், இந்தக் கிராமங்களில் வாழும் 80 வயதுக்கு மேற்பட்ட 16 முதியவர்கள் கௌரவித்து பரிசில்கள் வழங்கப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரன் கலந்து கொள்வார். (ற-9)

## துரித கதியில் வீதி சீரமைப்பு பணிகள்

யாழ்ப்பாணம், ஒக்.3
யாழ். மாநகரப் பகுதியில் வீதி சீரமைப்புப் பணிகளை விரைவுபடுத்தி மழை ஆரம்பிப்பதற்கு முன்பாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.
மாநகரப் பதுதியில் தற்போது சேதமடைந்திருக்கும் மற்றும் அண்மைக்காலமாகப் புனரமைப்பு இன்றிய வீதிகள் இனம் காணப்பட்டு சீரமைக்கப்படுகின்றன. கொழும்புத்துறையில் துண்டி ஐயனார் வீதி, துண்டி இந்து மயான வீதி இலந்தைக்குளம் வீதி என்பனவற்றின் சீரமைப்புப் பணிகள் முடிவுற்றுள்ளன. –என்றும் அவர் குறிப்பிட்டார்.
(ற-17)

## கைத்தொழில் முயற்சி மூலம் அதிக இலாபத்தை ஈட்டலாம்

### வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக்.3
கைத்தொழில் முயற்சி மூலம் முழங்காவிலை சேர்ந்த முதியவர் ஒருவர் 2 லட்சம் ரூபா லாபம் பெறுகின்றார் எனில் இளைஞர்கள் அதைவிடக் கூடிய லாபம் பெறமுடியும்.
இவ்வாறு வடமாகாண போக்குவரத்து மற்று கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.
நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் ஆரம்பமான முயற்சியே எமது மூலதனம் எனும் தொனிப்பொருளிலான கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தெரிவித்ததாவது:
இளைஞர், யுவதிகள் அரச வேலை வாய்ப்பை எதிர்பார்த்துள்ளனர். கிராமங்களில் மேற்கொள்ளும் கைதொழில் அபிவிருத்திகள் மூலம் அதிக லாபத்தைப் பெற முடியும் என முழங்காவிலில் உள்ள ஒருவர் வெளிப்படுத்தியுள்ளார். மாதம் 2 லட்சம் ரூபாவை அவரால் பெற்றுக் கொள்ள முடிகின்றது என்று என்னிடம் தெரிவித்தார்.
எமது விடிவுக்காக உயிர்த் தியாகம் செய்தவர்களை மறந்துவிடக் கூடாது. முன்னாள் போராளிகள், மாற்று திறனாளிகள், அரசியல் கைதிகளின் விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன. இதுவரை 16 ஆயிரம் பேரின் விவரங்கள் கிடைத்துள்ளன. வடக்கில் மாத்திரம் 9 ஆயிரம் பேர் புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகளாக உள்ளனர். அவர்களுக்கான சுயதொழில் வாய்ப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க உள்ளோம் – என்றார்.
நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், அமைச்சின் செயலாளர், வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் கிளிநொச்சி மாவட்டச் செயலர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற-ரி3,34)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஒக்.3
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கட்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் வறுத்தலைவிளான், டச்சு வீதி தெல்லிப்பழை, அச்செழு, காங்கேசன்துறை கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல்படைமுகம், பலாலி இலங்கை விமானப்படைமுகாம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல்படைமுகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வு காலவிடுதி ஆகிய இடங்களிலும் – வவுனியாவில் தோணிக்கல் சிவன்கோயில் பிரதேசம், குட்செட் வீதி, சாம்பல் தோட்டம் கிராமம் ஆகிய இடங்களிலும் மின் தடைப்படும். (ற-ரி)



இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை, மின் சக்தி மற்றும் மீள்சக்தி அமைச்சு, கல்வியமைச்சின் விஞ்ஞான பிரிவு, வடக்குமாகாண கல்வித் திணைக்களம் என்பன இணைந்து நடத்தும், மாணவர் கண்காட்சி வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் நேற்று ஆரம்பமானது. கண்காட்சியை வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் ஆரம்பித்து வைத்தார். வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களின் கண்டுபிடிப்புக்கள், புத்தாக்க நாடகங்கள், பயிற்சி பட்டறைகள், பயிர்ச் செய்கை முறைகள், உற்பத்தி உணவுப் பொருள்கள் எனப் பல்வேறு அம்சங்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. கண்காட்சி இன்று மாலை நிறைவடையும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ற-402)

## சைக்கிள்களை பொறுப்பேற்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்.3
நெல்லியடி பொலிஸாரால் அநாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்ட இரு சைக்கிள்கள் பருத்தித்துறை நீதிவான் மன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றின் உரிமையாளர்கள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ள முடியும் என்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற பதிவாளர் கேட்டுள்ளார்.

55761044, 69317726 இலக்கமுடைய பெண்களுக்கான இரு லுமாலா சைக்கிள்களின் உரிமையாளர்கள், மன்றின் அலுவலகத்தில் அதற்குரிய மூல ஆவணங்களை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும். தவறின் 6 மாதங்களுக்குபின் அரசுடமையாக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (ற-ரி7)

# பெற்றோருக்கு இடையேயான பிணக்குகள் சிறாரை வன்முறையாளராக மாற்றும்

### முதியோர், சிறுவர் தின நிகழ்வில் வவு. உதவி பிரதேச செயலாளர் சுட்டிக்காட்டு

வவுனியா, ஒக்.3
சிறுவர்களும் பெற்றோர்களும் சந்தோசமாக வாழும் சூழல் மிகவும் அரிதாகவிட்டது. பெற்றோர்கள் எப்படியிருக்கிறார்களோ அப்படியேதான் சிறுவர்களும் இருப்பார்கள். பெற்றோர்கள் தங்களுக்கிடையே இருக்கின்ற பிணக்குகளால் சிறுவர்களை வன்முறை சார்ந்த உலகுக்கு அழைத்து செல்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும்.

இவ்வாறு வவுனியா உதவி பிரதேச செயலாளர் திருமதி சாரதாஞ்சலி கர்ணன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் 3க்கும் மேற்பட்ட இடங்களில் சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் நடத்தப்பட்டன. ஓமந்தை கிராமசேவகர் அலுவலகத்தில் ஓமந்தை கிராம சேவகர் திருமதி செ.அனுசியா தலைமையில் முதியோர் தின நிகழ்வுகள் நடத்தப்பட்டன. அதில் முதன்மை விருந்தினராக சாரதாஞ்சலி கர்ணன் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:
சிறுவர்கள் பயத்திலிருந்து தெளிந்தவர்களாக இருக்கவேண்டும். பாதுகாப்பான சூழல் அவர்களுக்கு இருக்கவேண்டும். அவர்களுடைய இளமைக் காலம் முழுவதும் சந்தோசமாக இருக்கவேண்டும. பெற்றோர்களாலேயே முதலில் சிறுவர்களுக்கான பாதுகாப்பான சூழலை தோற்றுவிக்க முடியும். அம்மா, அப்பாதான் சிறுவர்களுக்கு இருக்கின்ற மாதிரி உலகம். அம்மா, அப்பா எப்படியிருக்கிறார்களோ அதுபோல் தான் தாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று சிறுவர்கள் தீர்மானிக்கிறார்கள். அம்மா, அப்பா நேர்மையாக இருந்தாலே பிள்ளைகள் நேர்மையாக இருப்பார்கள். அம்மா, அப்பா பொய் கூறி வளர்ந்தால் பிள்ளையும் பொய் சொல்லும். பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு சிறந்த பாதுகாப்பான சூழலை வழங்கவேண்டும். இன்று கூட்டுக் குடும்பமாக இருக்க விரும்புவதில்லை. தனிக் குடும்பமாகவே இருக்க விரும்புகிறார்கள். பேரன், பேர்த்தி என்ற உறவை அனுபவிக்க பெற்றோர்கள் வயோதிபர்களுக்கு அனுமதிப்பதில்லை. வீட்டுத் திட்டம் உள்ளிட்ட பல உதவிகளைப் பெறவேண்டும் என்ற நோக்கிலே தனிக் குடும்பமாக போகிறார்கள். பேரன், பேர்த்தியுடன் வாழும் சூழல் உருவாகும்போது பிள்ளைகளுக்குப் பாதுகாப்பான சூழல் தானாகவே உருவாகும். முதியோர் பிள்ளைகளுக்கு கதைகள் மூலம் பல்வேறு பண்பாட்டு கருத்துக்கள், பழமொழிகள் ஊடாகப் பாதுகாப்பான சூழலை சொல்லிக் கொடுப்பார்கள். வெளிநாடுகளுக்குக் குழந்தைகளை விட்டு செல்லாதீர்கள்– என்றார்.



நிகழ்வில் ஓமந்தை மத்திய கல்லூரி அதிபர் திருஞானசம்பந்தமூர்த்தி, ஓமந்தை பிரதேச வைத்தியசாலையின் மருத்துவர் மதுரகன், தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் தலைவர் காண்டீபன், செயலாளர் கேசவன், உறுப்பினர் கெர்சோன், அஸ்திரம் நற்பணி மன்றத்தின் தலைவர் [illegible] மற்றும் உறுப்பினர்கள், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் ச. கண்ணன், கலைமகள் நற்பணி மன்றத்தின் தலைவர் சிந்துஜன், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், பெரியோர்கள் சிறுவர்கள் என பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வுகளுக்கான அனுசரணையை பாக்கியம் அறக்கட்டளை வழங்கியது. பாக்கியம் அறக்கட்டளையின் சார்பில் முதியவர்களுக்கான உடுபுடைவைகள், சிறுவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. முதியோர் முட்டி உடைத்தல் விளையாட்டு நிகழ்வில் பங்கெடுத்தனர். வயது கூடிய முதியவர்கள் பொன்னாடைபோர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

வவுனியா கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் கிராம அபிவிருத்திச் சங்கம், முதியோர் சங்கம் என்பன இணைந்து, சர்வதேச முதியோர் தின நிகழ்வுகளை நடத்தின. நிகழ்வுகள் கூமாங்குளம் கிராம அலுவலர் சா.கம்ஜகன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கே. கே. மஸ்தான் ஆகியோரும், சிறப்பு விருந்தினராக சித்திவிநாயகர் வித்தியாலய அதிபர் பாலச் சந்திரன், எஸ். கபிலன் வாழ்வின் எழுச்சித்திட்டம் கூமாங்குளம், இ. இராமச்சந்திரன் மாவட்ட முதியோர் சங்கத் தலைவர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

70 வயதுக்கு மேற்பட்ட 5 முதியவர்கள் பொன்னாடைபோர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். முதியோர் சங்கத்திலுள்ள 175 உறுப்பினர்களுக்கு நினைவு பரிசில்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் அந்தப் பகுதி பொதுமக்கள் அரச. அரச சார்பற்ற நிறுவனங்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வவுனியா திருநாவற்குளம் உமாமகேஸ்வரன் முன்பள்ளியின் சிறுவர்தின நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வு முன்பள்ளியின் அதிபர் திருமதி மீரா குணசீலனின் தலைமையில் நடைபெற்றது.

விழாவின் சிறப்பு விருந்தினராக தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் தலைவர் சு.காண்டீபன் (திருநாவற்குளம் கிராம அபிவிருத்திச் சங்க பொருளாளரும் வவுனியா மாவட்ட சாரணிய உதவி ஆணையாளர்) கலந்து கொண்டார்.

நிகழ்வுக்கு புளொட் அமைப்பின் பிரித்தானியா கிளை உறுப்பினர் தர்மலிங்கம் நாகராஜா (பொக்கன்) நிதி அனுசரணை வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4,402)

## வாய்க்கால்களை துப்புரவு செய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.3
மழை காலத்துக்கு முன்னதாக வலி. கிழக்கு பிரதேசத்தில் உள்ள வெள்ள வாய்க்கால்களை துப்புரவு செய்வதற்கான நடவடிக்கைகளை பிரதேச சபை எடுத்துள்ளது.

மாரி காலத்தில் மழை வெள்ளம், வாய்க்கால்கள் ஊடாக வழிந்தோடமுடியாது மக்களின் குடிமனைகள் மற்றும் சுற்றாடல்களில் தேங்கும் நிலை ஏற்படலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டது. தற்போது அநேக வாய்க்கால்களை துப்புரவு செய்வதற்கும் வலி. கிழக்குப் பிரதேச சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-17)

## பாதசாரிகளுக்கு இடையூறு விளைவித்த சாரதி மீது வழக்கு

பாதசாரிகள் கடவையில் பொது மக்கள் வீதியைக் கடந்தபோது அவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வாகனத்தைச் செலுத்திய சாரதிக்கு எதிராக கொடிகாமம் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

கொடிகாமத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கடந்த வாரம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குறித்த சாரதி நீதிமன்றுக்கு வராததால் அவருக்கு எதிராக நீதிமன்று பிடியாணை பிறப்பித்தது.

சாரதியைக் கைது செய்த பொலிஸார் நேற்றுமுன்தினம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் சாரதியை எச்சரிக்கை செய்து பிணையில் செல்ல அனுமதித்தார். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் ஜனவரியில் அரசியல் மாற்றமாம்

## குமார் வெல்கம கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.3
எதிர்வரும் ஜனவரி மாதம் நாட்டில் அரசியல் மாற்றம் ஏற்படும்.
இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் அமைச்சர் குமார் வெல்கம. யட்டியாந்தோட்டையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் கெட்டகாலம் தற்போது நிறைவடைந்துள்ளது. எம்மால் இன்னும் 5 ஆண்டுகள் ஆட்சியில் இருந்திருக்க முடியும். கெட்ட காலத்தால் அது நடக்கவில்லை. 19ஆம் திருத்தத்தில் என்ன திருத்தங்கள் கொண்டு வந்தாலும், ஜனவரியில் அரசியல் மாற்றம் கட்டாயம் ஏற்படும் – என்றார். (ற)

# கூட்டு எதிரணிக்கிடையில் பெரும் கருத்து முரண்பாடு

கொழும்பு, ஒக்.3
எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலுக்கு எவ்வாறு முகம் கொடுப்பதென்பது தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சி குழுவினருக்கு இடையில் பெரும் கருத்து முரண்பாடு ஒன்று ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
முன்னாள் அமைச்சர் பசில்ராஜபக்சவின்செயற்பாடுகளே அதற்கு பிரதான காரணம் என்றும் கூறப்படுகின்றது.
கூட்டு எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மையினர் புதிதாக கட்டியெழுப்பப்படவுள்ள முன்னணிக்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தவாறு ஆதரவு வழங்க வேண்டும் என தீர்மானித்துள்ளனர். தினேஷ், வாசு போன்ற கட்சி தலைவர்களும் அந்த கருத்துக்கு இணக்கம் வெளியிட்டுள்ளனர். ஆயினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து விலகி, புதிய முன்னணிக்கு ஆதரவு வழங்க வேண்டும் என பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார். பிரசன்ன ரணதுங்க உட்பட சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர், பசில் ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்கியுள்ளனர். இந்தக் கருத்துகளின் காரணமாக கூட்டு எதிர்க்கட்சியினுள் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

> கூட்டு எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும் பான்மையினர் புதிதாக கட்டியெழுப்பப்படவுள்ள முன்னணிக்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தவாறு ஆதரவு வழங்க வேண்டும் என தீர்மானித்துள்ளனர்.

கூட்டு எதிர்க்கட்சியின் நடவடிக்கைகளுக்கு பசில் ராஜபக்ச ஆதரவு வழங்குவதை பலர் ஆரம்பத்தில் இருந்தே, விரும்பாத நிலையில் தற்போது தங்களின் விருப்பமின்மையை வெளிப்படையாகக் கூறும் சூழல் ஒன்று உருவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
மகிந்த ராஜபக்சவின் தோல்விக்கு பசில் ராஜபக்ச முக்கிய காரணம் எனப் பலர் நம்புகின்ற நிலையில், தொடர்ந்து புதிய முன்னணி கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கு பசில் ராஜபக்ச முன்வந்தால் அந்த நடவடிக்கையும் தோல்வியடையும் என தெரிவித்துள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)

# போராட்டங்களால் சாதிக்க முடியாது

## பெருந்தோட்டக் கைத்தொழில்துறை அமைச்சர் நவீன் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.3
போராட்டங்களால் எதனையும் சாதிக்க முடியாது. பேச்சு மூலமே இறுதித் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.
இவ்வாறு தெரிவித்தார் பெருந்தோட்டக் கைத்தொழில்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க.
ஆயிரம் ரூபா சம்பள உயர்வுகோரி தோட்டத் தொழிலாளர்கள் மலையகம் முழுவதும் தொடர்ச்சியாக போராட்டம் நடத்தி வருகின்றனர். அது குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்தின் பின்னணியில் தொழிற்சங்கம் ஒன்றே காணப்படுகின்றது. இந்தப் பிரச்சினை தொடர்பில் பேச்சு நடத்தப்பட்டு விரைவில் தீர்வு வழங்கப்படும் – என்றார். (ற)

# நாட்டின் பண வீக்கம் அதிகரிப்பதால் சம்பள உயர்வுக் கோரிக்கை வலுவாகும்

## பொருளியல் ஆய்வாளர் அசந்த சிறிமான்ன சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.3
டொலரின் பெறுமதி அதிகரித்துச் செல்லும்போது, நாட்டில் பண வீக்கம் ஏற்பட்டு, சம்பள உயர்வுக்கான கோரிக்கைகள் வலுப்பெறும்.
இவ்வாறு பொருளியல் ஆய்வாளர் அசந்த சிறிமான்ன தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கடந்த சில தினங்களில் டொலரின் பெறுமானம் ரூபாவுடன் ஒப்பிடும்போது அதிகரித்துச் செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.
நேற்றுமுன்தினம் ஒரு டொலருக்கான கொள்விலை 144 ரூபா 66 சதமாக காணப்பட்டது. விற்பனை விலை 148 ரூபா 46 சதம் வரை சென்றுள்ளது. நாட்டின் பொருளாதார நிலைமை உட்பட மத்திய வங்கியின் நடவடிக்கைகளுக்கும் இந்த டொலர் விலை அதிகரிப்பு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.
ரூபாயின் மதிப்பு குறையும்போது இலங்கையின் ஏற்றுமதி அதிகரிக்கும் என நம்புகின்றனர். உண்மையில் அப்படி நடக்கும். ஆனால், அது ஒரு தற்காலிக நடவடிக்கை மட்டுமே. இந்த டொலர் அதிகரிப்பால் நாட்டு மக்களின் சம்பளத்தின் மூலப் பெறுமானம் குறைவடைகின்றது, பணவீக்கம் அதிகரிக்கின்றது. மீண்டும் மக்கள் சம்பள அதிகரிப்பு கோரி பாதையில் இறங்குவார்கள்.
பன்னாட்டு நாணய நிதியம் வழங்கியுள்ள இலக்கை நோக்கி செல்லும்போது, இவ்வாறான ஒரு நிலை ஏற்படும் – என்றார். (ற)

# ஆயுள்வேதக் கூட்டுத்தாபனம் மூடப்பட்ட ஐந்து நாள்களில் 60 லட்சம் ரூபா மருந்து நாசம்

கொழும்பு, ஒக். 3
இலங்கை ஆயுள்வேதக் கூட்டுத்தாபனம் ஐந்து நாள்களாகத் தொடர்ந்து மூடப்பட்டிருந்ததால் அங்கு வைக்கப்பட்டிருந்த மூலப்பொருள்களில் பெருமளவு சேதமடைந்து, பாவனைக்குதவாமல் போயிருப்பதாகவும், அந்தப் பொருள்களின் உத்தேசப் பெறுமதி சுமார் 60 இலட்சம் ரூபாவுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டிருப்பதாகவும் கூட்டுத்தாபனத்தின் தொழிற் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.
சுகாதார அமைச்சரின் உத்தரவின்பேரில் இந்தக் கூட்டுத்தாபனம் கடந்த 14ஆம் திகதி நள்ளிரவு முதல் 20ஆம் திகதி வரை மூடப்பட்டிருந்ததால் உற்பத்திக்காக வைக்கப்பட்டிருந்த மூலப்பொருள்கள் சேதமடைந்து பாவனைக்குதவாத நிலைக்குப் போயிருப்பதாகவும், இந்தச் சேதம் பற்றி கூட்டுத்தாபனப் பொது முகாமையாளருக்கு மருத்துவர்கள் அறிக்கை சமர்ப்பித்திருப்பதாகவும் தொழிற்சங்க சம்மேளனத்தின் பேச்சாளர் லக்மால் ஜயசிங்க தெரிவித்திருக்கிறார்.
அத்துடன், பகுதி நிலையில் உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்த மருந்துகள், எண்ணெய்கள், சான்றுகள் போன்றவற்றிலும் குளிரூட்டிகளில் வைக்கப்பட்டிருந்த பொருள்களிலும் பூஞ்சணம்பிடித்திருப்பதால், அவற்றையும் பயன்படுத்த முடியாது எனவும் அவர் கூறினார்.
இது தொடர்பில் அக்கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் எம்.கே.மாரசிங்க கருத்து தெரிவித்தபோது, பெருமளவு மருந்துகளும் மூலப்பொருள்களும் சேதமடைந்திருப்பது உண்மையே எனவும், அவற்றின் பெறுமதியைத் துல்லியமாகக் கணிக்க குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். (தி)

# பாதுகாக்கப்பட்ட வனத்தில் தீ

கொழும்பு, ஒக்.3
பதுளை, கந்தகெடிய, வாசனாகம பிரதேசத்தில் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை தீ பரவியது. 50 ஆயிரம் ஏக்கர் நிலம் பாதிப்படைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
நேற்றுமுன்தினம் இரவு பொலிஸார் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

# மோசடி தவிர்ப்பு விடயங்களை பாடவிதானத்தில் சேர்க்க முடிவு

கொழும்பு, ஒக்.3
பாடசாலை பாட விதானங்களில் மோசடி தவிர்ப்புத் தொடர்பான விடயங்களைச் சேர்ப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.
இவ்வாறு தெரிவித்தார் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம்.
கொழும்பில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இந்த மாதம் முழுவதும் கையூட்டல் மற்றும் மோசடி தொடர்பில் மாணவர்களுக்கு விளக்கமளிக்கும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ற)

# ஆபாசப் படம் தயாரித்த இயக்குநர் உட்பட நால்வருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஒக். 3
ஆபாசப் படத்தயாரிப்பில் ஈடுபட்டிருந்த இயக்குநர், நடிகர், நடிகை, உதவியாளர் ஆகிய நால்வரையும் எதிர்வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அத் தனகல்ல நீதிவான் லக்மால் பெரேரா உத்தரவிட்டுள்ளார்.
திரைப்பட மற்றும் தொலைக்காட்சி இயக்குநரான மனம்பெரிகே சுமித் குமார, நடிகரான பிரியந்த உதயகுமார, நடிகையான ரத்னகுமாரி ஷியாமிளா, உதவியாளரான திலங்க சத் துரங்க லக்ஷ்மன் ஆகிய நால்வருக்கே இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
வெயாங்கொட பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் வெயாங்கொட பிரதேசத்திலுள்ள வீடொன்றில் சோதனை நடத்தியபோதே இந்த நால்வரும் கைது செய்யப்பட்டனர்.
இவர்கள் தயாரித்த ஆபாசப் படங்களில் இதுவரை 6 ஆயிரம் இறுவட்டுகள் சந்தைக்கு விடப்பட்டிருப்பதாகவும், அந்தப் படங்கள் பாடசாலை மாணவர்களுக்கும் விற்பனை செய்யப்பட்டிருப்பதாகவும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.
சந்தேகநபர்களின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் சமர்ப்பித்த பிணை மனுவை நிராகரித்த நீதிவான், விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்ததுடன், வழக்கின் அடுத்த விசாரணையை ஒக்ரோபர் 5ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதரப்பு ஒப்பந்தங்களின் மூலம் நாட்டின் அபிவிருத்தி வலுவாகும்

## பிரதமர் ரணில் நியூசிலாந்தில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.3
உலகில் பல்வேறு நாடுகளுடன் இரு தரப்பு உடன்படிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு, நாட்டின் அபிவிருத்திக்காக வலுவான அடிப்படை வகுக்கப்படுகின்றது.
இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
நியூசிலாந்து சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒக்லன்ட் நகரத்தின் அரச மாளிகையில் அந்த நாட்டுப் பிரதமர் ஜோன் கீக்கைச் சந்தித்து இரு தரப்புப் பேச்சு நடத்தினார். அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.
இந்து சமுத்திர பிராந்தியத்திலிருந்து மத்திய கிழக்கு வரையான நாடுகளுக்கு உணவை விநியோகிக்கும் கேந்திர நிலையமாக வரலாற்றுக் காலத்திலிருந்தே இலங்கை செயற்படுகின்றது.
2050ஆம் ஆண்டளவில் இத்தகைய நாடுகளில் பெரும்பாலானவற்றுக்கு உணவு மற்றும் சேவைகளை வழங்கும் பிராந்தியத்தின் முக்கிய பங்காளியாக மீண்டும் வரலாற்றில் பெருமை கொண்ட நாடாக இலங்கை இடம்பெறும்- என்று அவர் தெரிவித்தார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ ஆகியோர் கூட்டாக செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டனர். (ற)




நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுக்கும் கொழும்புக்கும் இடையிலான நேரடி விமானசேவை நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. நேபாளத்தின் ஹிமாலய விமான சேவை நேற்றுமுன்தினம் தொடக்கம் வாரத்தில் இரண்டு நாள்கள் நடைபெறும் என்று காத்மண்டுவில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது. நேபாளத்திலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் இலங்கை சுற்றுலாப் பயணிகளின் பட்டியலில் நான்காவது இடத்தில் உள்ளனர். (ற)

# திறமையற்ற அரசியல்வாதிகளே இனவாதத்தைப் பரப்புகின்றனர்

## ஊடகத்துறை பிரதி அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.3
நாட்டுக்கும் மக்களுக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாத, திறமையற்ற, அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தாத அரசியல்வாதிகள்தான் இனவாதக் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பி, அரசியல் இலாபம் திரட்ட முயற்சிக்கின்றனர்.
இவ்வாறு நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை பிரதியமைச்சர் கருணாரத்ன பரணவிதான தெரிவித்தார்.
சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் ஊடகவியலாளர்களின் வகிபங்கு எனும் தலைப்பில் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு நேற்றுமுன்தினம் திருகோணமலையில் நடைபெற்றது. அதில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
இவர்களால் நாட்டில் எவ்வாறு சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்?. இவ்வாறான அரசியல்வாதிகள் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் மத்தியில் காணப்படுகின்றனர்.
நாட்டில், இனவாதம், மதவாதம், வகுப்புவாதம் போன்றன இல்லாமற்செய்யப்பட்டு, சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு சகல மக்களும் முன்வர வேண்டும்.
எமது நாடு, புது யுகத்துக்கு வந்திருக்கின்றது. நாம் பல விடயங்களை புதுப்பிக்க வேண்டியுள்ளது. இனவாதம், வகுப்பு வாதங்கள் சார்பாக செய்திகளை வெளியிடாது, நாட்டில் சிறந்த பிரசைகளை உருவாக்குவதற்கு ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் செய்திகளை பிரசுரித்தால் பயனுள்ளதாக இருக்கும் - என்றார்.
செயலமர்வில் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மகரூப், மூத்த ஊடகவியலாளர் எஸ். தில்லைநாதன், பத்திரிகை பேரவையின் தலைவர் சட்டத்தரணி கொக்கல வெல்லால பந்துல ஆகியோர் கலந்து கொண்டனர். (ற)



# இலங்கையின் முடிவால் பீரிஸ் கவலை

பாகிஸ்தானில் நடக்கவுள்ள சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்று இலங்கை மேற்கொண்ட தீர்மானம் கவலையளிக்கின்றது.
இவ்வாறு முன்னாள் அயல் உறவுத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்.
தற்பொழுது பிராந்தியத்தில் நிலவும் சூழ்நிலை-சார்க் உச்சி மாநாட்டை நடத்தும் அளவுக்கு சிறந்ததல்ல என்று- அயல் உறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ற)



இணுவில் திருப்பதி அருள்மிகு வேங்கடேஸ்வரர் ஆலயம் - மருதனார்மடம்

முதலாம் நாள் பிரமோற்சவ தினம்

- மகாதிருமஞ்சனம் - காலை 6.00 மணிக்கு
- அன்னதானம் - நண்பகல் 12.00 மணிக்கு
- பரமபதநாதர் தரிசனம் திருவூஞ்சல் ஆராதனை இரவு 7.00 மணிக்கு
- நாட்டிய சமர்ப்பணம் - கலைவாணி கலாமன்றம் (நல்லூர்)

(C 25486) (14,17,18)
ஆலயதர்மகர்த்தா.



வண்ணை
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
இன்று (03.10.2016)
திங்கட்கிழமை
இரண்டாம் திருவிழா

இந்து சமய ஒரு பிரிவாம் வைஷ்ணவ முதல்வனே
இலங்கிடும் வண்ணையில் உறைந்திடும் வரதராஜனே
இரப்போர்க்கு இல்லையெனாது ஈந்தருளும் பெருமாளே
இன்று உனக்கு மஹோற்சவத்தின் இரண்டாம் நாள்

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :

நியூ வீ.எம்.கே. ஜுவல்லறி
V.M.K. Jewellery
Dealers in 22 Kt. Gold Jewellery
இல. 80/03, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 720 1117/ 021 222 2515



வல்லிபுர ஆழ்வார்
இன்று (03.10.2016)
திங்கட்கிழமை
நான்காம் திருவிழா
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :

காசி யாத்திரையும், காட்மாண்டு, நேப்பாள் யாத்திரையும்.
ஆரம்பம்: 15.11.2016 யாத்திரீகர்: 15 நாள்கள் 14
தரிசிக்குமிடங்கள் சுருக்கமாக விவரங்களைக் கேட்டு அறிக!
காசிவிஸ்வநாதர் உட்பட காசியில் 15 இடங்கள், காயாவில் பிதிர்க்கடன்கள் செய்வது, புத்தகாயாவில் 5 இடங்கள், அலகபார்த்தில் (கங்கா, ஜமுனா, சரஸ்வதி சங்கமம்) உட்பட 5 இடங்கள், இராமேஸ்வரத்தில் 5 இடங்கள், மதுரைமீனாட்சி, ஆக்ராவில் (தாஜ்மகால், செங்கோட்டை, காட்மாண்டு), நேப்பாளில், பசுபதிநாதர், சங்கு நாராயணர், ஆஞ்சினேயர், சுயம்புநாதம், மாயாதேவி கோயில்கள் உட்பட 20 இடங்களும், டெல்லியில், அட்ஷய தாம் (நாராயணர் கோயில் உட்பட) வேறு ஆலயங்களும் தரிசிக்கலாம்:
தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை:
5 விமானப் பயணங்கள், ஏனைய பயணங்கள், A-C பஸ், உணவு, மடப்பள்ளி சமயல் ஆள்கள் சமைத்த சுத்தமான சைவ உணவு, மூன்றுவேளை காப்பி.ரீ, குடிநீர், தரமான இரண்டுபேருக்கு குளியலறை இணைந்த அறைகள், பூசகர்களும் தயக்கமின்றிக் கலந்துகொள்ளலாம்.
விரும்புவோர் பாஸ்போட் போட்டோக்கொப்பி ஒன்றும், சிறிய கலர் புகைப்படமும் அனுப்பி பதிவுசெய்க!
மேல் விவரங்களுக்கு: கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்
மகன் ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே. 077 768 0102/ 077 736 2154
Facebook: sridevisriranganathan.thuraiappa

# அஞ்சலியைப் பார்வையிட்டார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஒக்.3
கடந்த பெப்ரவரி மாதம் இலங்கைக்கு வந்த நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீக்குக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அன்பளிப்பாக வழங்கிய அஞ்சலி என்ற யானைக்குட்டியை நியூசிலாந்து சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பார்வையிட்டார். ஒக்லன்ட் நகர மிருகக் காட்சிசாலையில் உள்ள அஞ்சலி மற்றும் அஞ்சலியை தாய்போல் அரவணைத்து வரும் பர்மா என்ற பெண் யானைக்கும் பிரதமர் மற்றும் பிரதமரின் பாரியார் பழங்களை வழங்கினர்.
30 வயதான பர்மா என்ற பெண் யானை மியன்மாரைச் சேர்ந்தது.
இலங்கையின் பின்னவளையில் பிறந்த அஞ்சலி என்ற ஒரு வயதும் 9 மாதங்களும் நிரம்பிய யானைக்குட்டி ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் காணப்படுகின்றது என்று அதனைப் பராமரித்து வரும் பாகன் தெரிவித்தார். (ற)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பாக். - இந்திய எல்லையில் அணு ஆயுத அச்சுறுத்தல்

இந்திய- பாகிஸ்தான் காஷ்மீர் எல்லையில் மிக மோசமான நெருக்கடியொன்று தோன்றியிருப்பது உலக நாடுகளை உலுப்பியிருக்கிறது. ஆசிய நாடுகள், குறிப்பாக இரு நாடுகளினதும் அண்டை நாடுகளை இது பதற்றத்துக்குள்ளாக்கியிருக்கின்றது.

அண்மையில் இந்திய - பாகிஸ்தான் எல்லைக் கோட்டுக்கருகில் இந்திய எல்லைக் காப்புப் படைவீரர்கள், முகாமில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்த வேளையில் நான்கு தீவிரவாதிகள் உள்நுழைந்து தாறுமாறாகச் சுட்டதில் இந்தியப் படையினர் 17 பேர் கொல்லப்பட்டனர். தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர்.

இந்த விடயம் இந்தியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. உடனடியாக எதிர் நடவடிக்கை எடுத்தாகவேண்டும் எனப் பல கட்சிகளும் வற்புறுத்தத் தொடங்கியிருந்தன. இந்தச் சமயத்தில் ஐ.நா. பொதுச் சபை நியூயோர்க்கில் கூடியிருந்தமையால் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உட்பட முக்கிய தலைவர்கள் அங்கு செல்லாமல் நிலைமைகளை உள்நாட்டில் இருந்தே ஆராய்ந்தனர்.

இந்தியாவுக்குள் பாகிஸ்தான்தான் தீவிரவாதிகளை ஏவிவிட்டு வருகிறது, அது தீவிரவாதிகளின் நாடு என்ற வகையில் இந்தியா உலக அரங்கில் பரப்புரை செய்தது.

அதேசமயம் பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் எல்லையில் அமைந்துள்ள தீவிரவாதிகளின் முகாம்கள் மீது இந்தியப் படையினர் சில தினங்களுக்கு முன் அதிரடியாக வான் வழியாகவும் தரைவழியாகவும் தாக்குதல் நடத்தி தீவிரவாதிகளின் பல முகாம்களை அழித்துள்ளதுடன் சுமார் 50 பேரைக் கொன்றுமுள்ளனர். இந்தத் தாக்குதலில் இரண்டு பாகிஸ்தான் இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் என்று இஸ்லாமாபாத் ஒப்புக்கொண்டிருக்கிறது.

இந்தச் சம்பவத்தை அடுத்து பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செஷரீப் விடுத்த செய்தியில் தங்கள் படைவீரர்கள் தமது நாட்டுக்குள் வைத்துக் கொல்லப்பட்டமைக்கு எதிர்நடவடிக்கை எடுக்கப் பாகிஸ்தான் தயாராய் இருப்பதாக அறிவித்திருக்கிறார். இதையடுத்து காஷ்மீர் எல்லைப் பகுதியில் குறிப்பாக பூஞ் மற்றும் நவுகாம் பகுதிகளில் உள்ள கிராமவாசிகளை இந்திய இராணுவத்தினர் தூர இடங்களுக்கு அப்புறப்படுத்தியுள்ளனர்.

வெகுவிரைவில் பெரும் எடுப்பில் இரு நாடுகளுக்கும் இடையில் மோதல் ஒன்று வெடிக்கக் கூடிய அச்சத்தை இது தோற்றுவித்துள்ளது. அதைவிடப் பாகிஸ்தான் இராணுவ அமைச்சர் கவாஜா ஆசிப் விடுத்துள்ள செய்தியொன்று பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பாகிஸ்தான் மீது இந்தியா போரைத் திணிக்குமானால் அந்த நாட்டை அணுகுண்டு வீசி நாங்கள் அழிப்போம் என்பதாக அந்த அமைச்சர் ஆவேசமாக வெளியிட்டுள்ள கருத்து அணுகுண்டுகளை வைத்துக் கொண்டுள்ள ஒருநாட்டின் தலைவர் வெளியிடக்கூடிய பொறுப்பான கருத்தாக இருக்க முடியாது. அணுகுண்டுகள் பாகிஸ்தானிடம் மட்டும்தான் இருப்பதுபோல் அந்த அமைச்சர் கூறியிருப்பது பொறுப்பற்ற தன்மையாகும்.

பிராந்தியத்தில் பாகிஸ்தான் - இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளிடம் தற்போது அணுகுண்டுகள் இருப்பதாகக் கருதப்படுகின்றது. இதில் ஒரு நாடு தன் எதிரியான மற்ற நாட்டின் மீது அணுகுண்டை வீசுமானால் பதில் நடவடிக்கையும் மிக மோசமானதாகவே இருக்கும். அதையே யூரி தாக்குதலும் எடுத்துக்காட்டுகின்றது.

இந்த நாடுகளுக்கிடையில் இவ்வாறு ஒரு அணுகுண்டு மோதல் நடக்குமானால் பக்கத்திலுள்ள பூட்டான், நேபாளம், மாலைதீவுகள், இலங்கை, பங்களாதேஷ் எனப் பல நாடுகள் அணுத் துகள்களால் பாதிக்கப்படுவது தவிர்க்கமுடியாதது. எனவே பொறுப்பற்ற முறையில் பேசுவதையும் செயற்படுவதையும் இந்த நாடுகளின் தலைவர்கள் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

அணுகுண்டை வைத்திருக்கும் இன்னொரு நாடான சீனா, பாகிஸ்தானுடன் நெருங்கிய நட்பைக் கொண்டிருந்தபோதும் இந்திய - பாக். எல்லைப் பிரச்சினை பேச்சு மூலம் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று பொறுப்புடன் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது. அந்த வகையில் இருநாடுகளும் நிதானமாக இந்த விடயத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.



பல நாடுகளில் அமெரிக்க இராணுவம் நேரடியாகக் களமிறங்கிப் போராடி வருகின்றபோதிலும், சிரிய விவகாரத்தில் அமெரிக்கா அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. அங்கு போராடி வருகின்ற ஆயுதக் குழுக்களுக்கு ஆயுதங்களையும் ஏனைய உதவிகளையும் வழங்கியே இந்தப் போரில் கலந்து கொண்டுள்ளது. அத்தோடு, விமானத் தாக்குதல்களையும் நடத்தி வருகிறது.

எம்.ஐ.முபாறக்

ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட உயிர்களைப் பறித்து, ஐந்து வருடங்களாக இடம்பெற்று வரும் சிரிய நாட்டுப் போருக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு நல்ல சந்தர்ப்பங்கள் பல கைகூடி வந்தபோதிலும், போரில் ஈடுபடுகின்ற தரப்புகள் ஒத்துழைப்பு வழங்காததால் சிரியா தொடர்ந்தும் அழிவை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது.

சிரியாப் போரில் எதிர்எதிராக நின்று போராடிவரும் இரு பெரும் வல்லரசுகளான அமெரிக் காவும் ரஷ்யாவும் மனது வைத்தால் மாத்திரமே இதற்கு ஒரு முடிவு கட்ட முடியும் என்ற நிலை அங்கு இருப்பதால், வேறு தரப்புகள் ஒத்துழைத்தாலும் போரை நிறுத்தமுடியாது.

2011 இல் போர் தொடங்கப்பட்ட வேளை முதல் போர் நிறுத்தத்தை நோக்கி பல நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அவை எவையும் வெற்றியளிக்கவில்லை. 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதமும், 2014 ஜனவரி மாதமும் போரில் ஈடுபடும் இரு தரப்புகளுக்கும் இடையில் ஜெனிவாவில் அமைதிப் பேச்சுக்கள் இடம்பெற்றன. அவை தோல்வியிலேயே முடிந்தன.

இதனைத் தொடர்ந்து, இந்த வருடம் ஜனவரி மாதம் 29 ஆம் திகதி மீண்டும் இரு தரப்புகளுக்கும் இடையில் ஜெனிவாவில் பேச்சுத் தொடங்கப்பட்டது. ஆனால், அந்தப் பேச்சும் எதுவித பலாபயன்களையும் எட்டாது ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வருடம் பெப்ரவரி மாதம் அமெரிக்காவும்-ரஷ்யாவும் கூடிப் பேசி போர் நிறுத்த முடிவுக்கு வந்தன. சிரிய அரசும் அந்த அரசுக்கு எதிராகப் போராடும் எதிர்க் கட்சிகளும் போர் நிறுத்தத்தை மேற்கொள்ளுதல் என்றும்- ஐ.எஸ். பயங்கரவாதிகள் மற்றும் அல்-கைதா சார்பு, அல்-நுஸ்ராவுடன் இணைந்ததான ஆயுதக் குழுக்கள் உள்ளிட்ட மேலும் பல ஆயுதக் குழுக்களுக்கு எதிரான போரைத் தொடர்வது என்றும் அதில் இணக்கம் காணப்பட்டது.

## பகுதியளவிலான போர் நிறுத்தத்தால் பயன் ஏதுமில்லை

இந்தப் பகுதியளவிலான போர் நிறுத்தம் சிரிய நாட்டு மக்களுக்கு எந்தவித நன்மையையும் கொடுக்கவில்லை. போர் நிறுத்தம் சம்பந்தப்பட்ட தரப்புக்களால் தொடர்ச்சியாக மீறப்பட்டுக் கொண்டே வந்தது. பயங்கரவாதிகளை ஒழிக்கின்றோம் என்ற பெயரில், மக்களே கொன்று குவிக்கப்பட்டனர். இந்தப் போர் நிறுத்தத்துக்குப் பிறகுதான், மக்கள் மீதான தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டன. குறிப்பாக, அலெப்போ மாகாணம் கடுமையான தாக்குதலுக்கு உள்ளானது. மக்கள் ஆயுதங்களால் கொன்று குவிக்கப்பட்ட அதேநேரம், பட்டினியாலும் கொல்லப்பட்டனர். சுமார் நான்கு லட்சம் பேர் ஆயுதக் குழுக்களினதும் அரச படையினரினதும் முற்றுகைக்குள் சிக்கியுள்ளனர். அவர்கள் பட்டினியால் கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்லப்படுகின்றனர்.

இவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களை அனுப்பி இவர்களைக் காப்பாற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதன் அடிப்படையில், மற்றுமொரு போர் நிறுத்தத்துக்கு அமெரிக்காவும், ரஷ்யாவும் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் இணக்கம் கண்டன.

பெப்ரவரி மாதம் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம்போல் இதுவும் ஆயுதக் குழுக்களை தவிர்த்தே செய்யப்பட்டது. ஆனால், ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து ஒரு வாரத்திலேயே அது கிழித்து வீசப்பட்டதுதான் கவலைக்குரிய விடயம்.

சிரியப் படையினர் மீது அமெரிக்காவின் போர் விமானங்கள் தவறுதலாக மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்தே இது முடிவுக்கு வந்தது. இதற்கு அமெரிக்கா மன்னிப்புக் கேட்டபோதும் கூட, சிரிய அரசு அந்த மன்னிப்பை ஏற்காது அமெரிக்காவைப் பழிவாங்கியது.


ஒப்பந்தத்தின் அடிப்படையில் முற்றுகைக்குள் சிக்கியுள்ள சிரிய மக்களுக்கு வழங்குவதற்காக நிவாரணப் பொருள்களை எடுத்து வந்த வாகனத் தொடர் மீது சிரியா மற்றும் ரஷ்யாவின் விமானங்கள் தாக்குதல்களை நடத்தி, அந்தப் பொருள்களை அழித்ததோடு நிவாரணப் பணியாளர்களையும் கொன்றன.

இதனைத் தொடர்ந்து போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் கிழித்து வீசுவதாக சிரிய அரசு அறிவித்தது. இப்போது அங்கு போர் மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

## இனியொரு போர் நிறுத்தத்துக்கு இடமேயில்லை

இனி ஒரு போர் நிறுத்தம் ஏற்படவே மாட்டாது. போரால்தான் தீர்வு காணப்படும் என்ற நிலைதான் -அங்கு இப்போது ஏற்பட்டுள்ளது. இது மக்கள் எவரும் அற்ற சிரியாவைத்தான் உருவாக்கப் போகிறது.

தம்மில் எவர் வல்லரசு என்று காட்டுவதற்காக அமெரிக்காவும், ரஷ்யாவும் நடத்தும் இந்த நாடகத்தாலும், சிரிய மக்கள் முழுவதும் அழிந்தாலும் நானே இறுதிவரைக்கும் ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என்ற-சிரியா ஜனாதிபதியின் பேராசையாலும் இன்று சிரியா அழிந்துகொண்டு செல்கின்றது. உலகில் தற்போது இடம்பெற்றுவரும் போர்களுள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வாரத்துக்குள் முறிந்த போர் நிறுத்தம்; மேலும் அழிவை நோக்கி நகரும் சிரியா





மிகவும் கொடூரமான–அதிக சேதங்களை ஏற்படுத்திய போராக சிரியப் போர்தான் உள்ளது. சிரிய ஜனாதிபதி பசர் அல் –அசாத்தைப் பதவி கவிழ்ப்பதற்காகத் தொடங்கப்பட்ட இந்தப் போரால் இதுவரை எந்தத் தரப்பும் வெற்றி பெறவில்லை. தினம் தினம் உயிர்ச் சேதங்களையும் பொருள் சேதங்களையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இந்தப் போரால் எந்தத் தரப்பும் வெல்லமுடியாமல் இருப்பதற்குக் காரணம் போரில் ஈடுபடும் இரு தரப்புகளுக்கும் சம பலத்துடன் காணப்படுவதுதான்.

சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான ஆள்பலத்துடன் பல்வேறு ஆயுதக் குழுக்கள் அமெரிக்காவின் உதவியுடன் சிரிய அரசுக்கு எதிராகப் போராடி வருகின்றன. மறுபுறம், சிரிய அரசைக் காப்பாற்றுவதற்காக ரஷ்யா மற்றும் ஈரான் போன்ற நாடுகளும் ஹிஸ்புல்லாஹ் அமைப்பும் சிரிய ஜனாதிபதி ஆசாத்துடன் இணைந்து போராடி வருகின்றன. ஈரானின் ஆதரவில் சிரியாவுக்குள் களமிறக்கப்பட்டுள்ள ஈரானியத் துணைப்படை மற்றும் இராணுவத்தின் உதவியுடனும், ரஷ்யாவின் விமானத் தாக்குதலின் உதவியுடனும் சிரியப் படையினர் முன்னேறி வருகின்றனர்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம்தான் ரஷ்யாவின் விமானத் தாக்குதல்கள் தொடங்கப்பட்டன. உலக வல்லரசு நாடுகளுள் ஒன்றான ரஷ்யா, சிரிய அரசுடன் கைகோர்த்துள்ளதால், சிரிய அரசு பலம் பெற்றுள்ளது என்றே சொல்லவேண்டும்.

ரஷ்யாவின் விமானத் தாக்குதல்களின் உதவியால் சிரியப் படையினர் போராளிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பல இடங்களை மீளக் கைப்பற்றியுள்ளனர். மறுபுறம், அமெரிக்க ஆதரவு பெற்றுள்ள ஆயுதக் குழுக்களும் அதிக பலத்துடன் போராடி வருகின்றன.

### அமெரிக்காவும், ரஷ்யாவும் நீயா? நானா? பலப்பரீட்சை

சிரியா, போர்க்களத்தில், உலகின் இரு பெரும் வல்லரசு நாடுகளான ரஷ்யாவும், அமெரிக்காவும் எதிர் எதிர் நின்று போராடுவதால் நீயா? நானா? என்ற போட்டி ஏற்பட்டுள்ளது.

உண்மையில், சிரியாவில் இடம்பெற்றுக்கொண்டிருப்பது சிரிய அரசுக்கும் ஆயுதக் குழுக்களுக்கும் இடையிலான போர் அல்ல. இருபெரும் வல்லரசுகளான அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையிலான மறைமுகப் போராகும். இந்தப் போரில் எந்தத் தரப்பு வெல்கிறதோ அந்தத் தரப்புக்கு உதவிய வல்லரசு நாடே வென்றதாக அமையும். இதனால், எது அதி பலமிக்க வல்லரச நாடு என்று உலகம் அடையாளங் காண்பதற்கான ஒரு போராகவே இது அமைந்துள்ளது.

பல நாடுகளில் அமெரிக்க இராணுவம் நேரடியாகக் களமிறங்கிப் போராடி வருகின்றபோதிலும், சிரிய விவகாரத்தில் அமெரிக்கா அவ்வாறு நடந்துகொள்ளவில்லை. அங்கு போராடி வருகின்ற ஆயுதக் குழுக்களுக்கு ஆயுதங்களையும், ஏனைய உதவிகளையும் வழங்கியே இந்தப் போரில் கலந்துகொண்டுள்ளது. அத்தோடு, விமானத் தாக்குதல்களையும் நடத்தி வருகிறது. இவ்வாறு சிரிய ஜனாதிபதிக்கு எதிராக ஆட்பலத்தையும் ஆயுத பலத்தையும் அமெரிக்கா சிரிய மண்ணில் அதிகரித்துக் கொண்டே போகின்றது. மறுபுறம், ரஷ்யா – சிரியாவில் இரண்டு விமானத் தளங்களை நிறுவி, அமெரிக்க ஆதரவு ஆயுதக் குழுக்களுக்கு எதிராக விமானத் தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

இவ்வாறு இரண்டு வல்லரசு நாடுகளும் தங்களது போராட்ட பலத்தை அதிகரித்துக் கொண்டு செல்வதால், சிரியா மேலும் மேலும் அழிவை நோக்கியே செல்கிறது. விரைவில் மக்கள் எவரும் அற்ற சிரியாவாக மாறும் அபாயம்தான் அதிகம் உள்ளது.

## டெங்கு நோயை ஒழிப்பதற்கு அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்

டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கான செயற்றிட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. உயிர் கொல்லியான டெங்குநோய் எமது நாட்டில் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இதனை இல்லாமற் செய்வதற்கு அரசு பொதுமக்களின் ஆதரவைப் பெரிதும் நம்பியுள்ளது.

ஆனால், பொதுமக்களில் அநேகர் இதற்குத் தமது ஆதரவை வழங்கப் பின்னடித்து வருகின்றனர். குறிப்பாகத் தமது வீட்டு வளவுகளில் கழிவு நீர் தேங்கி நிற்பதற்கும், பற்றைகள் வளர்ந்து காடாகக் காட்சியளிப்பதற்கும் இவர்களே காரணமாக உள்ளனர். அதிகாரிகள் வந்து சொல்லித்தான் இவற்றைச் சீர்செய்ய வேண்டியதில்லை. பொதுமக்கள் தாமாகவே முன்வந்து இவற்றை நிவர்த்தி செய்ய முடியும்.

மேலும், யாழ். நகரில் ஸ்ரான்லி வீதிக்கும், மின்சார நிலைய வீதிக்கும் இடையிலுள்ள கழிவு நீர் செல்லும் வாய்க்கால் மிக மோசமான நில்லயில் அசுத்தமாகக் காட்சியளிக்கின்றது. இதில் நுளம்புகள் பெருகுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமுள்ளன. அத்துடன் நகரிலும், நகரைச் சுற்றியும் காணப்படும் கழிவு நீர் வாய்க்கால்களும் மோசமான நிலையில் காணப்படுகின்றன. இவை டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு முக்கிய காரணங்களாக உள்ளன. உரிய உள்ளூராட்சி நிறுவனத்தினர் இவற்றை உடனடியாகச் சரிசெய்து கொள்ள வேண்டும்.

மேலும் மழை காலம் ஆரம்பமாகும் இந்த வேளையில், நுளம்புகளை அழிப்பதற்கான சகல நடவடிக்கைகளும் முழுவீச்சில் இடம் பெறவேண்டும். பொதுமக்கள் வாழும் இடங்களில் மருந்து விசிறுவதன் மூலமாகவும் புகையூட்டுவதன் மூலமாகவும் நுளம்புகளை ஒழிக்க முடியும். உரிய அதிகாரிகள் கவனமெடுத்தால் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

பொ.மகேந்திரன்
அரியாலை.

## முதியவர்களைப் பேணிக்காப்பது பிள்ளைகளின் தலையாய கடமை

இந்த ஆண்டுக்கான சிறுவர், முதியோர் தினம் வந்து சென்று விட்டது. இதனையொட்டி ஊடகங்களில் ஆக்கங்கள் பல வெளிவந்தன. அவற்றில் சிறுவர்களையும் முதியவர்களையும் பேணிப்பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக விளக்கமான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தன.

தற்போதுள்ள சட்ட நடைமுறைகளின் கீழ் சிறுவர்களும் முதியவர்களும் பேணிப்பாது காக்கப்படல் வேண்டும். ஆனால் இது கடைப்பிடிக்கப்படுகின்றதா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

அண்மையில் சிறுமி ஒருவரை அவரது தாயார் எனக் கூறப்படுகின்றவர் கொடுமைகளுக்கு ஆளாக்கிய காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது. அந்தச் சிறுமி மோசமான கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டமை பலரையும் வேதனையில் ஆழ்த்திவிட்டது. இப்படியும் ஒரு கொடுமையான பெண் உலகில் இருப்பாரா? எனும் வினாவை எழுப்பும் அளவுக்கு அந்தப் பெண் சிறுமியைக் கொடுமைப்படுத்தினார். தற்போது கொடுமைப்படுத்தியவர் விளக்கமறியல் கைதியாக நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் வைக்கப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட சிறுமி சிறுவர் இல்லமொன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளார். இது வெளியில் வந்த செய்தி. இன்னமும் ஏராளமானவை வெளியில் தெரிவதில்லை. முதியோர் இல்லங்களின் அதிகரிப்பு ஒன்றே போதும் முதியவர்களின் அவலங்களைக் கூறுவதற்கு.

தமது பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கி விட்ட எத்தனையோ முதியவர்கள் இன்று கவனிப்பதற்கு எவருமின்றி அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர். நன்றி மறந்த பிள்ளைகளால் இவர்கள் இவ்வாறு நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மனச்சாட்சியுள்ள பிள்ளைகள் முதுமைப் பராயத்தை எட்டியுள்ள தமது பெற்றோரைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இது அவர்களின் தலையாய கடமையாகும்.

எஸ்.பவித்திரா. சுன்னாகம்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அலெப்போ மருத்துவமனை தகர்ந்தது ரஷ்யாவுக்கு உலக நாடுகள் கண்டனம்

## போர்க் குற்றம்மென ஐ.நா. கொதிப்பு

டமஸ்கஸ், ஒக். 3

சிரியாவின் அலெப்போ நகரில் முன்னெடுக்கப்பட்டுவரும் கண்மூடித்தனமான தாக்குதல்களில், அந்நகரின் முதன்மை மருத்துவமனை நேற்று முன்தினம் தகர்க்கப்பட்டது. இந்தத் தாக்குதலை போர்க் குற்றம் என ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டது.

சிரியாவில் அரசியல் போக்கை தீர்மானிக்கும் இரு பெரும் சக்திகளான அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையில் நடைபெற்ற சமாதான ஒப்பந்தம் முறிவடைந்ததைத் தொடர்ந்து, சிரியாவின் இரண்டாவது பெரிய நகராக அலெப்போ நகரில் உள்ள அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவுக்கு எதிராக சிரிய அரச படையும், ரஷ்யாவும் கடும் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றன. தரை வழியாகவும், வான் வழியாகவும் தாக்குதல்கள் நடைபெற்றுவருகின்றன. ரஷ்யாவால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் அலெப்போ நகரின் பிரதான மருத்துவமனை தகர்க்கப்பட்டதாக சிரியாவில் பணியாற்றும் பன்னாட்டு தொண்டு நிறுவனங்கள் தெரிவித்தன.

ரஷ்ய படைகள் 7 தொடர் ஏவுகணைகள் மூலம் மருத்துவமனையை தகர்த்ததாகவும், இருவர் சம்பவ இடத்திலேயே சாவடைந்ததுடன், 15 பேர் படுகாயமடைந்ததாகவும் அங்கு பணியாற்றும் பன்னாட்டு தொண்டு நிறுவனங்கள் மேலும் தெரிவித்தன.

அலெப்போவின் பிரதான நீர்த்தாங்கி சில தினங்களுக்கு முன்னர் தகர்க்கப்பட்டது. இதனால் அங்கு வசிக்கும் மக்கள் தண்ணீர் பஞ்சத்தை மிக விரைவில் எதிர்நோக்கியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டது. இந்த நிலையில் அலெப்போ மக்களின் ஒரே ஆறுதலான பிரதான மருத்துவமனை தகர்க்கப்பட்ட சம்பவம் பன்னாட்டு அரங்கில் பல எதிர்ப்பலைகளைத் தோற்றுவித்துள்ளது.

ரஷ்யா, சிரிய ஆயுதக்குழுக்களுக்கு எதிராக தாக்குத்தல் நடத்துவதாக தெரிவித்து வருகிறது. அவ்வாறாயின் மருத்துவமனையை தகர்க்க வேண்டிய அவசியம் இல்லையே என ஜேர்மன் தனது கண்டனத்தை குறிப்பிட்டது.

சிரியாவில் மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதலை நிறுத்த, ஐக்கிய நாடுகள் சபை உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வளைகுடா அரபு நாடுகள் எச்சரித்துள்ளன. குறித்த தாக்குதலை ஓர் போர்க்குற்றம் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது. (ம-ரி4)

# சீனாவில் தோல்வ… வண்ணத்துப் பூச்…

பீஜிங், ஒக். 3

சீனாவில் அண்மையில் நடைபெற்ற வண்ணத்துப் பூச்சிகள் விழா தோல்வியில் முடிவடைந்தது.

வண்ணத்துப் பூச்சிகளை உலகுக்கு அனுப்புதல் என்ற தொனிப்பொருளில் வருடா வருடம் சீனாவில் விழா நடத்தப்படும். செயற்கை முறையில் ஆயிரக்கணக்கான வண்ணத்துப் பூச்சிகள் பொரிக்க வைக்கப்பட்டு, விழா ஒன்று முன்னெடுக்கப்பட்டு, பறக்கவிடப்படும். இந்த விழா அண்மையில் நடைபெற்றது. பெட்டிகளில் கொண்டு வரப்பட்ட வண்ணத்துப்பூச்சிகள் பறக்க விடப்பட்டபோது, நூற்றுக்கணக்கான பூச்சிகளால் பறக்க முடியவில்லை. மேடையிலேயே விழுந்து கிடந்தன. தொடர்ந்து நடைபெற்ற கலைநிகழ்வுகளின்போது கலை…
சிக்குண்டு நசிந்து இறந்தன. இதனால்…
விழா தோல்வியில் முடிவடைந்ததாகக்…





பிரான்ஸின் தலைநகர் ப…
நடைபெற்றது. பலகோடி…
படுத்தப்பட்டன.



# காந்தியின் 147 ஆவது பிறந்ததினம் மோடி, பிரணாப் முகர்ஜி அஞ்சலி

புதுடில்லி, ஒக். 3

இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்த மகாத்மா காந்தியின் 147 ஆவது பிறந்ததினம் இந்தியா முழுவதும் நேற்றுக் கொண்டாடப்பட்டது. ராஜ்கோட்டில் அவரது நினைவிடத்தில் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஆகியோர் நேற்றுக் காலை மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். ஏனைய அரசியல் பிரமுகர்களும் தமது அஞ்சலிகளைச் செலுத்தினர். (ம-ரி4)

# கலிபோர்னியா நாளை அதிரும் கடும் எச்சரிக்கை விடப்பட்டது

வொஷிங்ரன், ஒக். 3

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் நாளை பெரிய அளவில் நிலஅதிர்வு ஒன்று ஏற்படும் என அமெரிக்க புவியியல் திணைக்களம் நேற்று எச்சரிக்கை விடுத்தது.

கலிபோர்னியா மாகாணத்தில் நாளை ஏற்படவுள்ள இந்த நில நடுக்கம் ரிச்டர் அளவில் 7 ஆக பதிவாகும் எனவும், இதன் தாக்கம் லொஸ் ஏஞ்சல்ஸ், சான் டியாகோ, சான் பெர் நாடியோ நகர்களிலும் உணரப்படும் எனவும், அமெரிக்க புவியியல் திணைக்களம் எச்சரித்தது. கணிக்கப்பட்டபடி நிலஅதிர்வு ஏற்பட்டால், ஆயிரத்து 800 பேர் சாவடைவார்கள் எனவும், 200 பில்லியன் டொலர்கள் பெறுமதியான பொருள் சேதம் ஏற்படும் எனவும் கணிக்கப்பட்டது. (ம-ரி4)

# இந்தியா - பாக். முறுகலில் ஐ.நா…

வொஷிங்டன், ஒக். 3

இந்திய-பாகிஸ்தான் எல்லையில் பதற்றத்தைத் தணிக்க இருநாடுகளும் பொறுமைகாக்க வேண்டும் என்று அறிவுறுத்திய ஐக்கிய நாடுகள் சபை, குறித்த விடயத்தில் தலையிடுவதற்கு தான் தயார் என்றும் தெரிவித்தது.

பாகிஸ்தானில் இருக்கும் ஆயுதக் குழுவொன்று சில தினங்களுக்கு முன்னர் காஷ்மீர் எல்லைப் பகுதியில் உள்ள யூரி இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்தியதில் 17 இந்திய இராணுவ சிப்பாய்கள் சாவடைந்தனர். குறித்த சம்பவத்துக்குப் பிறகு, இந்தியா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ok : UTHAYAN.PRINT
: UTHAYANPRINT



## ல்வியில் முடிந்த பூச்சிகள் விழா



கலைஞர்களின் பாதணிகளில் அவை னால் நடப்பு வருட வண்ணத்துப்பூச்சி தாகக் கருதப்படுகிறது. (ம-ரி4)

# வெனிசுலாவில் பசிக் கொடுமை அதிகரிக்கும் திருட்டுச் சம்பவம்

கரக்காஸ், ஒக். 3

வெனிசுலாவில் இடம் பெற்றுள்ள பெருளாதார நெருக்கடியால் அங்கு திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடத்திலிருந்து வெனிசுலா பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. உணவுப் பற்றாக்குறை காரணமாக மக்கள் உணவு விடுதிகளின் கழிவு உணவுகளை போட்டிபோட்டு சேகரித்து உண்கின்றனர். கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக அங்கு திருட்டுச் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.



வெனிசுலாவின் பிரதான நகர்களில் ஒன்றான ரொகுயிரோ நகரில், கோழிகளை ஏற்றிச் சென்ற வாகனமொன்று நேற்றுமுன்தினம் மக்களால் இடைமறித்து கொள்ளையிடப்பட்டுள்ளது. கண் காணிப்பு கமராவில் இந்தச்சம்பவம் பதியப்பட்டுள்ளது. காணொலி வடிவில் பன்னாட்டு ஊடகங்களை இந்தக்கொள்ளைச் சம்பவம் சென்றடைந்துள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் வெனிசுலாவின் மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளை அட்டைப் பெட்டியில் வைத்துப் பராமரிக்கும் படங்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)

## மாலைதீவில் சார்க் மாநாடு?

புதுடில்லி, ஒக். 3

தெற்காசிய நாடுகளின் நடப்பு வருடத்துக்கான சார்க் மாநாட்டை மாலைதீவில் நடத்த அந்த அரசு அழைப்பு விடுத்தது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் பாகிஸ்தானில் சார்க் மாநாட்டை நடத்தத் திட்டமிடப்பட்டது. ஆனால், பாகிஸ்தானில் இருக்கும் ஆயுதக்குழுவொன்று சில தினங்களுக்கு முன்னர் காஷ்மீர் எல்லைப் பகுதியில் உள்ள யூரி இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்தியதில் 17 இந்திய இராணுவச் சிப்பாய்கள் சாவடைந்தனர். இதற்கு கடும் கண்டனத்தை வெளியிட்ட இந்தியா, பாகிஸ்தானைத் தனிமைப்படுத்த பல திட்டங்களைப் பரிசோதித்தது. அதன் ஓர் கட்டமாக சார்க் மாநாட்டைப் புறக்கணிப்பதாக அறிவித்தது. இந்தியாவின் முடிவுக்கு பங்களாதேஷும் பூட்டானும் உடனடியாக ஆதரவைத் தெரிவித்தன. பின்னர் படிப்படியாக மேலும் நான்கு நாடுகள் சார்க் மாநாட்டைப் புறக்கணிப்பதாகத் தெரிவித்தன. இதனையடுத்தே மாலைதீவிலிருந்து இந்த அறிவித்தல் வெளிவந்துள்ளது.

நவம்பர் மாதம் 9ஆம், 10 ஆம் திகதிகளில் நடத்தப்படவிருந்த சார்க் மாநாட்டை, இந்த மாதம் 19 ஆம் திகதி தமது நாட்டில் நடத்த முடியுமெனவும்,



தெற்காசிய பிராந்தியத்தில் இடம்பெறும் பிரச்சினைகளை ஆலோசிக்க தகுந்த சந்தர்ப்பமாக மாநாடு அமையும் எனவும் மாலைதீவு தனது அறிக்கையில் குறிப்பிட்டது. (ம-ரி4)



கர் பரிஸில் அண்மையில் சொகுசு கார்கள், வாகனங்களின் கண்காட்சி கோடி ரூபா பெறுமதியான நூற்றுக்கணக்கான கார்கள் இதில் காட்சிப் (ம-ரி4)

### வடகொரியா
## அணு ஆயுதத்தை ஏவக்கூடிய நீர்மூழ்கிக் கப்பலை கட்டுகிறது

பியாங்யாங், ஒக். 3

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் அணுகுண்டு ஏவுகணைப் பரிசோதனையில் வெற்றிபெற்ற வடகொரியா, அத்தகைய ஏவுகணைகளை நீருக்கு அடியிலிருந்து ஏவும் வல்லமை பெற்ற நீழ் மூழ்கிக் கப்பல்களை கட்ட ஆரம்பித்துள்ளது.

பன்னாடுகளின் எதிர்ப்புக்களையும், ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மாணங்களையும் மீறி, தொடர்ந்து அணுவாயுதப் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகிறது வடகொரியா. சமீபத்தில் அந்த நாடு ஐந்தாவது ஏவுகணையைச் சோதித்தது. இந்தச் சோதனை கண்டம் விட்டுக் கண்டம் பாயும் வல்லமை பெற்ற அணுவாயுத ஏவுகணையாகும். அயல்நாடான தென்கொரியாவும், ஐக்கிய நாடுகள் சபையும் இந்த ஏவுகணைப் பரிசோதனையை வெளிப்படுத்தியதை அடுத்து, வடகொரியாவும் தனது பரிசோதனையை ஏற்றுக்கொண்டது. வடகொரியாவுக்கு உலகெங்கிலும் இருந்து கண்டனங்கள் குவிந்தன. அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளும் விதிக்கப்பட்டன. உலகின் எதிர்ப்பைக் கண்டுகொள்ளாத வடகொரியா, தற்போது கண்டம் விட்டுக் கண்டம் பாயும் அணுகுண்டை நீருக்கு அடியிலிருந்து ஏவக்கூடியவல்லமைபெற்றநீர்மூழ்கிக்கப்பலைகட்ட ஆரம்பித்துள்ளதாக பன்னாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ம-ரி4)

## ா. தலையிட முனைப்பு

பாகிஸ்தான் இடையே முறுகல் நிலை நீடித்து வருகிறது. போரின் விளிம்பில் இரு நாடுகளதும் அரசியல் விவகாரங்கள் உள்ளன. காஷ்மீர் பகுதியில்வசிக்கும்10ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இந்த நிலையிலேயே குறித்த விவகாரத்தில் இருநாடுகளும் பொறுமைகாக்க வேண்டும் என்று அறிவுறுத்திய ஐக்கிய நாடுகள் சபை, இந்த விடயத்தில், தான் தலையிடத் தயார் என்றும் அறிவித் தது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் பிரதான வேட்பாளர்களில் ஒருவரான ஹிலாரி கிளிங்டன், இந்தியா-பாகிஸ்தான் இரு நாடுகளுக்கும் இடையே போர் மூண்டால், இந்தியாவை சமாளிக்கக்கூடிய பலமான ஆயுதங்கள் பாகிஸ்தானிடம் இல்லை. எனவே அந்த நாடு ஆயுதங்களைப் பயன்படுத்த எத்தனிக்கும் என்றும்- பாகிஸ்தானின் அணுவாயுதங்கள் பல, தற்கொலை குண்டுதாரிகளிடம் உள்ளன. எனவே அவர்கள் இந்தியாவில் கொடும் தாக்குதலை அரங்கேற்றலாம் என்றும்- அச்சம் வெளியிட்டார். (ம-ரி4)

# கொந்தளிக்கிறது கொலிமா

மெக்ஸிக்கோ, ஒக். 3

மெக்ஸிக்கோவின் ஜலிஸ்கோ மாகாணத்தில் உள்ள பெரிய எரிமலைகளில் ஒன்றான கொலிமா எரிமலை வெடித்துச் சிதற ஆரம்பித்துள்ளது.



மெக்ஸிக்கோவிலுள்ள சக்தி வாய்ந்த எரிமலைகளில் கொலிமாவும் ஒன்று. இந்த எரிமலை 1913ஆம்ஆண்டேகடைசியாகப் பெரிதாக வெடித்துச் சிதறியது. இதன் பின்னர் பலதடவைகள் எரிமலை வெடித்த போதிலும், பொருள்சேதத்தை ஏற்படுததும் வகையிலேயோ அல்லது உயிரிழப்புக்களை ஏற்படுத்தும் வகையிலோ வெடித்துச் சிதறியதில்லை. ஆனால்,கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர் பேராபத்தை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் கொலிமா தற்போது சமிக்ஞைகளை வெளிப்படுத்தியுள்ளது. இதனால் எரிமலைக்கு அருகிலுள்ள இரு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆ.ஜெஜன்சன் றொனாலட்

# உயிர்க்கொல்லி நோயான டெங்கு

டெங்கு எனும் உயிர்கொல்லி நோயை வேரோடு அகற்ற நாம் ஒவ்வொருவரும் சமூகப் பொறுப்புணர்வுடன் உழைக்க முன்வரவேண்டும். இலங்கையின் கொள்ளை நோய் என தற்போது வர்ணிக்கப்படும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது பெரிய சவாலாகவே உருவெடுத்துள்ளது. டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துச் செல்வதால், பெரும் பணம் மற் றும் மனிதவலு விரயம் ஏற்படுவதோடு ஆரோக்கிய கொடுதலும் உருவாகின்றது. உயிர்க்கொல்லி நோயாகிய டெங்கைக் கட்டுப் படுத்த அனைவரும் இணைந்து சமூகப் பொறுப்புணர்வுடன் செயற்படுவதே அவசியமும் அவசரமுமாகின்றது.

**டெங்கு நோயை இனங்காணுதல்**

டெங்கு நோயானது ஈடிஸ் வகை பெண்நுளம்புகளால் பரப்பப் படுகின்ற ஒரு வைரஸ் நோயாகும். நோய்க் காரணியாகிய டெங்கு வைரஸ் ஒரு சுகதேகிக்கு தொற்றுதலடைந்து மூன்றுமுதல் பத்து நாள்களில் நோய் அறிகுறிகள் ஏற்படும். இதற்கான அறிகுறிகளாக பின்வருவனவற்றை அல்லது அவற்றில் சிலவற்றை இனங்கண்டு கொள்ளலாம்.

**சாதாரண டெங்கு காய்ச்சலில்**

01.திடீரென அதிகரித்துச் செல்லும் காய்ச்சல்
02.மூட்டு நோவு, தசை நோவு
03.தலைவலி
04.அடிவயிற்று நோவு
05. வாந்தி அல்லது ஓங்காளம்
06.கண்களில் வலி, சிவத்தல்
07.தோலில் சிவப்புப் புள்ளிகள், தடங்கள்

**டெங்கு குருதிப் பெருக்கின்போது**

குருதிக்கலன்களிலிருந்து குருதி கசியத் தொடங்குவதால்;
01. மூக்கு, முரசிலிருந்து குருதிக்கசிவு.
02. மலம், சலத்துடனான குருதி வெளியேற்றம் வாந்தியுடனான குருதி வெளியேற்றம்.
03. மாதவிடாயின் போது அதிகரித்த குருதி வெளியேற்றம்.
04.குருதி அமுக்கம் குறைதல்.

**டெங்கு அதிர்ச்சி நிலையின் போது**

01. திடீரென காய்ச்சல் குறைதல்.
02. உடல் குளிர்வடைதல்.
03. தோல் பிசுபிசுப்புத் தன் மையடைதல்.
04. மரணம் சம்பவித்தல்.

இவ்வாறு மூன்று விதமாக டெங்குக் காய்ச்சல் மக்களைத் தாக்குகின்றது. எனவே காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால் ஓய்வு எடுப்பதும், போதிய அளவு நீராகரம் பருகுவதும் முக்கியமானது. காய்ச்சலைக் குறைக்க பரசிற்றமோல் வகை வில்லைகளை மட்டுமே பயன் படுத்த வேண்டும். ஏனைய வலி நிவாரணிகள் டெங்கு குருதிப் பெருக்கு நிலையை அதிகரிக்க வைக்கும்.

மூன்று நாள்களுக்குமேல் காய்ச்சல் குறையாவிடின் உடனடியாக குருதிப்பரிசோதனை (FBC) செய்து டெங்கு தொற்று ஏற்பட்டுள்ளதா என அறிந்து சிகிச்சை பெறுதல் வேண்டும்.



**நுளம்பும் டெங்கும் வைரசும்**

டெங்கு வைரஸ்க்கள் பிரதானமாக நான்கு வகையாகக் காணப்படுகின்றன. இவை ஒரு மனிதனிலிருந்து இன்னொரு மனிதனுக்கு நேரடியாக கடத்தப்படுவதில்லை. இதனைக் காவி தொற்றக் கூடியநிலைக்கு மாற்றி பரப்புவதற்கு ஈடிஸ் வகையான நுளம்புகளே காவிகளாக செயற்படுகின்றன.

டெங்குக் காய்ச்சலுள்ள ஒருவரை கடிக்கும் ஈடிஸ் வகை பெண்நுளம்பினுள் டெங்கு வைரஸ்க்கள் குருதியோடு சென்று விடுகின்றன. அவை நுளம்பின் உடலில் விருத்தியடைந்து தொற்றக்கூடிய பருவமாக ஏழு தொடக்கம் பன்னிரண்டு நாள்களில் மாற்றமடைந்து, அதன் உமிழ் நீர் சுரப்பியை வந்தடைகின்றன. இந்த நிலையிலுள்ள நுளம்பு ஒருவரைக் கடிக்கும்போது, உமிழ்நீருடன் சேர்ந்து வைர ஸும் சுகதேகியை சென்றடைந்து விடுகிறது. அவ்வாறு சென்ற வைரஸுகள் பெருக்கமடைந்து மூன்று முதல் பத்து நாள்களில் டெங்கு அறிகுறிகளைத் தோற்றுவிக்கும்.

டெங்கு நுளம்பானது தனது இனப்பெருக்கத்தை மேற்கொள்ளவே விலங்குக் குருதியைக் குடிக்கின்றது. ஒரு நுளம்பு தனது வாழ்நாளில் ஒருதடவையில் இருநூறு முதல் நானூறு வரையான முட்டைகளை நான்கு தடவைகள் இடுகின்றது. பதினைந்து முதல் அறுபத்தைந்து நாள்கள் வரையான ஆயுள்காலத்தைக் கொண்ட இந்த டெங்கு நுளம்புகள் தொடர்ந்து சூழலில் நிலைத்திருப்பதற்கு காரணம்: அவை முட்டைகளை இட்டு பெருகக்கூடிய நீர் தேங்கும் இடங் களை நாம் சூழலில் வைத்திருப்பதுதான். பொதுவாக டெங்கு வைரஸ்க்கள் நான்கு வகையாகக் காணப்படுவதால், ஒரு வகை வைரஸால் டெங்கு காய்ச்சல் ஏற்பட்டு, நோய் எதிர்ப்பு சக்தி உருவாகினாலும், ஏனைய வகை டெங்கு வைரஸ்க்களால் மீண்டும் டெங்குக் காய்ச்சல் அவருக்கு ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

இந்த ஈடிஸ் வகையான நுளம்புகள் கறுப்புநிறத்தில் வெள்ளைப் புள்ளிகள், வரிகள் கொண்டு தெளிவாக இனங்காணக் கூடிய விதத்தில் காணப்படும். இவை பெரும்பாலும் சிறியளவான தெளிந்த அசைவற்ற நீர்தேங்கும் கொள்கலன்களிலேயே தமது முட்டைகளை இடுகின்றன. இந்த முட்டைகள் நீர்ப்பாத்திரங்களின் சுவரில் ஒட்டப்படுவதால் நீரை ஊற்றினாலும் முட்டைகள் அந்தப் பாத்திரங்களை விட்டு போய்விடுவதில்லை. இந்த முட்டைகள் நீரற்ற வறண்ட நிலையில் ஆறு முதல் பன்னிரண்டு மாதங்கள் வரை உயிர்ப்போடு இருந்து பின் நீர்சேருகையில் பொரித்து, புதிய நுளம்புகள் உருவாகக் கூடியன. அத்துடன் நிறைவுடலி நுளம்பு டெங்கு வைரஸை காவியுள்ள நிலையில் முட்டையிட்டால், அந்த முட்டைகளினுள்ளும் டெங்கு வைரஸுக்கள் சென்று பின்பு முட்டை பொரித்து புதிய நுளம்பு உருவாகுகையில் அவையும் டெங்கு வைரஸுடன் வெளி வந்து நோயைப் பரப்பு கின்றன.

**நுளம்பு பெருகும் இடங்கள்**

இவை பெரும்பாலும் பெருக்கமடையும் இடங்களாக பின்வருவன இனங்காணப்பட்டுள்ளன.

நீர் தேங்கியுள்ள
01. பிளாஸ்ரிக் பொருள்கள்
02. நீரை சேமித்து வைக்கும் தொட்டிகள்
03. தேங்காய்ச் சிரட்டைகள்
04. ரயர்கள், இளநீர் கோம்பைகள்
05. மண்பானை, சட்டிகள்
06. கைவிடப்பட்ட இயந்திரங்கள்
07. தகரப் பேணிகள், போத்தல்கள்
08. கைவிடப்பட்ட உபகரணங்கள்
09. மரப்பொந்துகள், நீர்தேங்கும் தாவர இலைகள்
10. பறவைகள் குளிக்க, குடிக்க நீர்வைக்கும் பாத்திரங்கள்
11. பொலித்தீன் பைகள்

எனவே இவற்றை நீர் தேங்காதவைகளாக மாற்றியமைத்தோ, நீர் தேங்காத இடங்களில் சேமித்தோ அல்லது உட்சுவர்களை தேய்த்துக் கழுவி, வாரத்துக்கு ஒருமுறை நீரை மாற்றியோ நுளம்பு பெருகுவதைத் தடுக்கமுடியும். நீரை மாற்றமுடியாத அல்லது நீண்ட நாள்கள் நீரைத் தேக்கிவைக்கும் இவ்வாறான இடங்களில் நுளம்பு குடம்பிகளை உண்ணும் கப்பிஸ், கோல்ட்பிஸ், திலாப்பியா போன்ற மீன்களை இட்டு உயிரியல் கட்டுப்பாட்டை மேற்கொள்ளலாம்.

**குடம்பிகளை அழித்தல்**

நுளம்புகள் முட்டை இடக்கூடிய சிறியளவான நீர் தேங்கக்கூடிய கொள்கலன்களை சூழலுக்குள் விடாது தவிர்ப்பதால் குடம்பிகள் உருவாவதைத் தடுக்கமுடியும். மேலும் குடம்பி உண்ணும் மீன்கள் மூலமும் குடம்பிகளை அழிக்கமுடியும். இவை சூழலுக்கு நேசமான முறையும், இலகுவாக சாத்தியமானதுமாகும். மேலும் குடம்பிகளைக் கொல்லும் இரசாயனங்களை நீரில் விசிறியும் குடம்பிகளை அழிக்கமுடியும். எனினும், இது சூழலுக்கு நேசமான ஒருமுறை அல்ல. மேலும் குடம்பிகளை அழிக்கக் கூடிய பசிலஸ் வகை உயிரிகளை நீருக்குள் இட்டும் (BTI) குடம்பிகளை கட்டுப்படுத்த முடியும். எனினும், இதுவும் நீண்டகால கட்டுப்பாடாக அமையாது.

**வருமுன் காப்போம்**

எனவே, டெங்கு எனும் உயிர்கொல்லி நோயை வேரொடு அகற்ற நாம் ஒவ்வாருவரும் சமூகப் பொறுப்புணர்வுடன் உழைக்க முன்வரவேண்டும். எமது வீட்டுச் சூழல், எமது பராமரிப்பிலுள்ள வளாகங்கள், கோயில்கள், பொது இடங்கள், வர்த்தக மையங்கள், என்பவற்றில் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை இல்லாதொழிக்க கிழமைக்கு ஒரு தடவையேனும் கண்காணிப்புகளை மேற்கொள்ளவேண்டும். இலகுவான சூழல் கட்டுப்பாட்டை மேற்கொள்வதன் ஊடாக இதனை நாம் சாத்தியமாக்க முடியும். எனவே இதனை சுகாதாரத்துறைக்குரிய வேலை என்று கருதாது அனைத்து அமைப்புகளும் ஒன்றிணைந்து கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பதோடு ஊடகங்களுகம் இதற்கு காத்திரமான விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ள முன்வரும்போது டெங்கை விரட்டியடிக்கும் தூரம் வெகு தொலைவில் இல்லை என்பதே உண்மை.

*கட்டுரையாளர்:*
*பொதுச் சுகாதார பரிசோதகர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழனித்துரை தர்மகுமாரன்

# தமிழினம் தனது நாகரிகத்தை ஒருபோதும் இழந்துவிடக் கூடாது

உலக மனிதகுலத்துக்கே நாகரிகத்தையும், மனிதநேயத்தையும் கற்றுக் கொடுத்த தமிழினம், இன்று தனது நாகரிகத்தையும் மனிதநேயத்தையும் பாதுகாக்க முடியாது தள்ளாடுகின்றது. உலக நாகரிகத்துடன் தன்னை வேறுபடுத்திய தமிழினம், தனக்கென தனித்துவமான ஒழுக்கம், நன்றி மறவாமை, விருந்தோம்பல், ஒற்றுமை, அன்பு, உதவி செய்தல் போன்ற விடயங்களைதனது சமூக அமைப்பினுள் உள்ளடக்கியது. இத்தகைய நன்நெறிகளுடன் கல்வி, கலை, கலாசார பண்பாடுகளுடன் பாரம்பரியமான முறைகளைப் பின்பற்றி ஆரோக்கியமான உடல், உள, சமூக, ஆன்மிகத்தைப் பரிபூரண நிலையில் பாதுகாத்து வந்தது. ஆனால், இன்றைய காலகட்டத்தில் மேலைத்தேய நாகரிகத்தின் மோகம் எமது சமூக கட்டமைப்பினுள் ஊடுருவி எமது கலை, கலாசாரப் பண்பாடுகளை சிதைத்துச் செல்வதுடன் எமது பாரம்பரியங்களையும் நாகரிகங்களையும் மறைக்க முயல்கின்றது.

**மனிதநேயம்**

உலகவரலாற்றிலே முல்லைக்கொடிக்குத் தனது தேரையே விட்டுச் சென்ற பாரி மன்னனது செயல் அதிசயிக்க வைத்தது. அதாவது ஒரு மன்னன் முல்லைக் கொடி ஆதரவற்று, ஆதாரமற்று அந்தரத்தில் ஆடுவதைக் கண்டு மனம்நெகிழ்ந்து அதற்குத் தனது தேரையே பரிசாகக் கொடுத்தான்.

இதை ஒரு கதையாகக் கருதினாலும், இதனூடாக பல உண்மைகள் புலப்படுகின்றன. அதாவது நாகரிகம் அன்பு, அரவணைப்பு,உதவிசெய்யும்மனப்பாங்குஆசையின்மை, பிறஉயிர்கள் மீது நேசம், எதையும் இழக்கும் துணிவு, இயற்கையை நேசித்தமை, உயர்ந்த இலட்சியம், உன்னத செயற்பாடு போன்றவற்றின் மூலம் தமிழினத்தின் மனிதநேயத் தன்மை வெளிப்படுத்தப்பட்டது. இன்றைய காலகட்டத்தை எடுத்து நோக்குவோமாக இருந்தால் தமிழினம் மனிதநேயம், மனச்சாட்சிக்கு அப்பால்நீதிகள் அற்ற குரோத மனப்பாங்குடன் பொய், களவு, ஏமாற்றுதல், பகட்டாகப் பேசுதல் போன்ற கையாலாகாத தன்மையையே வளர்த்து வருகின்றது.

எமது சமூக அமைப்பில் அன்றாட வாழ்க்கையை நடத்த முடியாது, அத்தியாவசிய தேவைகளை முழுமை செய்ய முடியாது அல்லற்படும் மக்களுக்கு உதவி செய்வதற்கு எவருமே முன்வருவதில்லை.

முல்லைக்கொடியைவிட மிகமோசமான நிலையில்பலமக்கள்ஆதரவற்று அநாதரவாக அந்நியப்படுத்தப்பட்டு உணவுக்காகவும்உடைக்காகவும்உறையுளுக்காகவும் ஏங்கித் தவிக்கின்றார்கள்.

உயர்ந்த இலட்சியத்துடனும் கொள்கைளுடனும் தம்மை அர்ப்பணித்துப் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர், யுவதிகளின் குடும்பங்கள், உறவுகள் எமது சமூகத்தாலேயே ஒதுக்கப்பட்டு, ஓரம் கட்டப்பட்டு பாதுகாப்பு அற்றவர்களாக பாராமுகமாகவும் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களாகவும் இன்றைய சமூக அமைப்போடு பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் வாழமுடியாத சிலர் தன்மானமற்ற தற்கொலைக்கு முயற்சி செய்தவர்களும் உயிரை நீத்தவர்களும் உண்டு என்பது யாவரும் அறிந்ததே. நாகரிகம் கொண்ட மனிதநேயமுள்ள தமிழ்ச் சமூகம் ஏன் இதுபற்றிச் சிந்திக்காது தாம் வாழ்ந்தால் போதும் என்ற மனநிறைவுடன் வாழ்கின்றது.

**நீதி**

மனுநீதி கண்ட சோழன், பசுமாடு நீதி கேட்ட போது தனது மகன் தான் கொடுமையை இழைத்தான் எனத் தெரிந்ததும். பசுமாடு அடைந்த வேதனையைத் தானும் அனுபவிக்க வேண்டும் என எண்ணித் தனது மகனையும் தேர்ச்சில்லால் நசுக்கி நீதியை நெறிப்படுத்தியதுடன் மட்டுமல்லாது உயிரினங்கள் மீது கொண்டுள்ள அறநெறி வெளிப்படுத்தப் பட்டுள்ளது. ஆனால், இன்றைய சமூக அமைப்பிலோ பிறர் மீது வசைபாடுதல் தன்னையும் தன் குடும்பத்தையும் பாதுகாத்தல் போன்ற நீதியற்ற செயற்பாடுகளே நாளுக்கு நாள் அரங்கேறி வருகின்றன.

தனக்குப் பிரச்சினை ஏற்படும்போது சட்டத்தரணியாக நின்று வாதிடுகின்றார்கள். மற்றவர்களுக்குப் பிரச்சினை ஏற்படும்போது நீதிபதியாக தீர்ப்பளிக்கும் சமூக அமைப்பே உருவாகிக் கொண்டு வருகின்றது.

அதாவது தனிநபர் தனது செயற்பாட்டை நியாயப்படுத்தியும் மற்றவர்களுக்குப் பிரச்சினை ஏற்படும் போது உடனடியாகவே எதையும் அறிந்து கொள்ளாமல் பக்கச் சார்பாகக் கருத்துச் சொல்லும் ஆரோக்கிமற்ற சமூகம் உருவாவதைத் தடுக்கவேண்டும்.

எனவே, இன்றைய தமிழ்ச் சமூகம், நீதி நியாயங்களுக்கு அப்பால் அரசியல் செல்வாக்கு, நிர்வாக செல்வாக்கு, கப்பம் கொடுத்தல், பந்தம் பிடித்தல், பக்கசார்பாக நடத்தல், வன்முறையைத் தூண்டிவிடுதல், பழிதீர்த்தல், காட்டிக் கொடுத்தல், பணத்துக்காக எதையும் செய்யத் துணிதல் போன்ற கீழ்த்தரமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற பிறழ்வு நிலை சமூகமாக உருவாவதைத் தடுக்க வேண்டும்.

இது தமிழினத்துக்கு ஏற்பட்டுள்ள சாபக்கேடாகும். ஏனெனில் கல்விமான்கள், புத்திஜீவிகள், சமூகப்பெரியார்கள், புரட்சியாளர்கள், அறநெறியாளர்கள், ஆன்மிகத்தை அதிகம் போதித்தவர்கள் உள்ள வையகத்தில் நீதி பிறழ்வது நியாயமற்றதே.

> தமிழினம் பாதுகாத்து வந்த நாகரிகத்தை ஒருபோதும் இழந்து விடக்கூடாது. அதனைப் பாதுகாப்பதற்குப் பாடசாலையின் ஊடாகவே முன்னாயத்தங்களை மேற்கொள்ள வேண்டும். அங்கு மனிதநேயம், நீதி, ஒழுக்கம், ஆன்மிகம் என்பவற்றைச் சிறுவயதிலேயே கற்றுக்கொடுக்க வேண்டும். அப்பொழுது தான் வளர்ந்துவரும் சிறார்கள் எதிர்காலத்தைச் சிறப்புமிக்கதாக மாற்றுவார்கள்.



**ஒழுக்கம்**

சமூக கட்டமைப்பிலே மிகவும் முக்கியமானது ஒழுக்கம். இந்தக் கட்டுக்கோப்பான ஒழுக்கத்தின் மூலமே எமது இனம்உயர்ந்து முன்னிலை வகித்ததுஎன்று கூறுவதில் மிகையேதுமில்லை.

இதற்கு உதாரணமாக விவேகானந்தரின் அமெரிக்க தேச பயணத்தைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். அமெரிக்க தேசத்துப் பெருவிழா ஒன்றுக்கு விருந்தினராக விவேகானந்தர் அழைக்கப்பட்டார். அங்கே தனது உரையில் தமிழர் கலை, கலாசாரப் பண்பாடுகள் பற்றியும் சுட்டிக்காட்டியிருந்தார் இதனை நன்கு கவனித்த அமெரிக்கா தேசத்து ஆண்மகன் கேள்வி ஒன்றை முன்வைத்தான். தமிழர் தேசத்து ஆண்மகனுக்கும் அமெரிக்க தேசத்து ஆண்மகனுக்கும் இடையில் என்ன வித்தியாசத்தைக் காண்கின்றீர்கள். தமிழருடைய கலாசாரம் பற்றி எல்லோரும் பேசுகின்றார்களே எனக் கேட்டான்.

அதற்குவிவேகானந்தர்சிரித்துக்கொண்டே பதில் அளித்தார். "உங்கள் தேசத்து ஆண் மகன்கள் தாயைத் தவிர மற்றைய பெண்களை எல்லாம் மனைவியாகப் பார்க்கிறார்கள். ஆனால் எமது தேசத்து ஆண்மகன்களோ மனைவியைத்தவிர மற்றைய எல்லாப் பெண்களையும் தாயாகப் பார்க்கிறார்கள். இதுவே சிறப்புமிக்க கலாசாரம்" என பெருமிதத்துடன் கூறினார். ஆனால் இன்றோ எமது கலாசாரத்துக்குள் மேலைத்தேய கலாசாரம் உட்புகுவதற்கு ஆடம்பர வாழ்க்கையும், அற்ப ஆசைகளும் காரணமாக அமைகின்றன.

இதன் மூலம் எமது கலாசாரம் சிதைக்கப்படுவது மட்டுமன்றி எமது ஆயுள்காலத்தையும், பொருளாதாரத்தையும் சின்னாபின்னமாக்கும் வகையில் பாலியல் நோய்கள், எயிட்ஸ் போன்ற கொடிய நோய்கள் தொற்றும் அபாயமும் அதிகரித்துள்ளது. இதுமட்டுமன்றி பெண்களின் சுதந்திரம் கேள்விக்குறியாகிக் கொண்டு செல்வதுடன் பெண்கள் அச்சத்துடன் பயணித்துக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**ஆன்மிகம்**

சமூக அமைப்பில் நம்பிக்கையையும், எதிர்கால சுபீட்சத்தையும் ஏற்படுத்துவது ஆன்மிகமாகும். ஆன்மிகத்தின் ஊடாகவே அறநெறி, உண்மை, பக்தி, ஒற்றுமை, உடல், உள, ஆரோக்கியம், தன்னம்பிக்கை, விட்டுக்கொடுத்தல், உதவிசெய்தல் மற்றும் உணர்வுகளை அடக்குதல் போன்ற செயற்பாடுகள் வளர்க்கப்படுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளை வளர்த்துக் கொள்வதன் மூலம் மனிதன் பூரணமடைகின்றான். இதன்மூலம் மனித மனத்தில் ஏற்படும் மாற்றம் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

தூய்மை கொண்ட உள்ளம் வன்முறையில் ஈடுபடத் தயங்கும் மற்றவர்களை வஞ்சிக்கத் தயங்குவதுடன் நல்ல சமூக வழிகாட்டியாகத் தோன்றுவதற்கு வழியமைத்துக் கொடுக்கும்.

*"உள்ளம் பெருங்கோயில்*
*ஊன் உடம்பு ஆலயம்*
*வள்ளல்பிரானார்க்கு வாய்கோபுரவாசல்..."*

என்னும் தேவார வரிகள் உள்ளத்தையே கடவுள் இருக்கும் இடமாக வர்ணித்துக் காட்டுகின்றன. எனவே எல்லோரும் மிக முக்கியமாக உள்ளத்தைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். உள்ளொன்றும் வெளியொன்றுமாகப் பேசுதல் ஆகாது. அவ்வாறு பேசும்போது அது தனிநபர், சமூகம் என எல்லோர் மத்தியிலும் பழக்க வழக்கமாக மாறி ஆன்மிகத்தை களங்கப்படுத்துவதற்கு ஒப்பான செயலாகி விடும்.

தமிழினம் பாதுகாத்து வந்த நாகரிகத்தை ஒருபோதும் இழந்து விடக்கூடாது. அதனைப் பாதுகாப்பதற்குப் பாடசாலையின் ஊடாகவே முன்னாயத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

அங்கு மனித நேயம், நீதி, ஒழுக்கம், ஆன்மிகம் என்பவற்றைச் சிறுவயதிலேயே கற்றுக் கொடுக்க வேண்டும். அப்பொழுது தான் வளர்ந்துவரும் சிறார்கள் எதிர்காலத்தைச்சிறப்புமிக்கதாகமாற்றுவார்கள்.

*"பப்பாளி மரம் பலகையாகாது*
*பயந்த உள்ளம் உலகையாளாது"*

பயன் உள்ளதைப் பாவித்து பயபக்தியுடன் வாழ்வதற்கு வழியமைத்துக் கொடுக்க வேண்டும்.

*கட்டுரையாளர்:*
*ஆசிரியர் உடுவில் மகளிர் கல்லூரி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRIN
Twitter : UTHAYANPRINT





# வர்ணம்
## தீட்டுவோம் வாங்க...



# பயம்!

ஒருவன், காட்டு வழியே போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசி எடுத்தது. ஒரு மரத்தின் உயரத்தில் பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மீது ஏறி, கிளையின் மேல் நகர்ந்து சென்றபோது, கிளை முறிந்துவிட்டது. சட்டென்று சுதாரித்த அவன், வேறு ஒரு கிளையைப் பிடித்துக்கொண்டு தொங்க ஆரம் பித்தான்.

குனிந்து பார்த்தபோது, தரை வெகு கீழே இருந்தது. "என்னைக் காப்பாற்றுங்கள்" எனப் பயத்தில் அலறினான்.

அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். அவனைப் பார்த்ததும், சிறிய கல் ஒன்றை எடுத்து மேலே எறிந்தார். அவன் பயத்துடன், "பெரியவரே, உதவி கேட்டால், கல்லால் அடிக்கிறீரே?" என்றான்.

பெரியவர் மேலும் ஒரு கல்லை எடுத்து, அவன் மேல் வீசினார். அவன் கோபமாகி, விடுவிடுவென இறங்கிவந்து அவரைத் திட்டினான். பெரியவர் அமைதியாகச் சிரித்துக்கொண்டே, "தம்பி, நான் உன்னைப் பார்த்தபோது நீ பயத்தில் இருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும், என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். கீழே இறங்கி வந்து, உன் னைக் காப்பாற்றிக்கொண்டாய்" என்றார்.

பயம், ஒருவனை முட்டாளாக்கிவிடும்.

# தன்னம்பிக்கை தரும் வெற்றி வரிகள்!

**பெர்னாட்ஷா**
நான் ஆரம்பத்தில் 10 காரியங்களைச் செய்தால், 9 தோல்வியாகவே முடியும். தோல்வி என்னைக் கேலி செய்தது. 9 முறை வெற்றிபெற என்ன செய்ய வேண்டும் என யோசித்தேன். 90 முறை முயன்றால் 9 வெற்றி கிடைக்கும் அல்லவா? அன்று முதல், முயற்சியின் எண்ணிக்கையை அதிகப்படுத்தினேன். இதுதான் எனது வெற்றியின் இரகசியம்.

**எடிசன்**
துவண்டுபோவதே ஒரு மனிதனுடைய மிகப்பெரிய பலவீனம். வெற்றிக்கான நிச்சய வழி, தோல்வி அடைந்த பிறகும் இன்னும் ஒரு தடவை முயற்சி செய்வது.

**மகாத்மா காந்தி**
வன்முறை மூலம் அடையும் வெற்றி தோல்விக்குச் சமமே. அது தற்காலிகமான ஒன்றே அன்றி வேறு இல்லை. அகிம்சை மூலம் பெறும்வெற்றியேஉண்மைவெற்றி.

**ஸ்ரீபன் ஹக்கிங்**
இந்த நிமிடத்தில் வாழ்க்கை எவ்வளவு கடினமாக வேண்டுமானாலும் தெரியலாம். ஆனால், செய்வதற்கும்வெல்வதற்கும்ஒவ்வொரு நொடியும்ஏதேனும்ஒன்று இருந்து கொண்டேதான் இருக்கிறது.

**சுவாமிவிவேகானந்தர்**
ஒரே ஓர் எண்ணத்தை கையில் எடுங்கள். அந்த எண்ணத்தையே உங்கள் வாழ்க்கை ஆக்குங்கள். அந்த எண்ணத்தையே சிந்தியுங்கள், கனவு காணுங்கள். உடலின் ஒவ்வொருசெல்லும்நரம்பும்அந்த எண்ணத்திலேயே ஊறட்டும். இதுவே, வெற்றியின் ரகசியம்.

# வரலாற்றில் இன்றைய தினம்



1778 – கப்டன் ஜேம்ஸ் குக் அலஸ்காவில் நங்கூரமிட்டார்.

1873 – மொடக் போர் சம்பந்தமாகக் கப்டன் ஜாக்கும் அவரது கூட்டாளிகளும் தூக்கிலிடப்பட்டனர்.

1829 – சேர்ப் ராச்சியங்களான குறோட்சும் ஸ்லொவெனீசும், யூகோஸ்லாவியா இராச்சியம் எனப் பெயரிடப்பட்டது.

1932 – ஈராக் ஐக்கிய இராச்சியத்திலிருந்து சுதந்திரம் பெற்றது.

1935 – ஜெனரல் டி போனோ தலைமையில் எதியோப்பியாவை இத்தாலி ஆக்கிரமித்தது.

1992 – இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு ஏற்பட வேண்டும் என இந்தியப் பிரதமர் ராவ் தெரிவிப்பு.

1992– வடக்கு – கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றையே விரும்புவதாக வடபகுதி இராணுவத் தளபதி தெரிவிப்பு.

2007 – அரசியல் வழியிலேயே தீர்வென்று பன்னாடு அழுத்தம் தரமுடியாதென அமெரிக்காவில் வைத்து கொஹன்ன காட்டம்.

2007– புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் தமிழர்கள் மீது சித்திர வதை மற்றும் வன்முறைகள்; ஆஸ்திரேலிய நீதிமன்றில் சாட்சியமளித்த தளபதி மறுப்பு.

2009 – துருக்கி கவுன்சிலை உருவாக்கும் நாக்சிவன் ஒப்பந்தத்தில், அஸெர்பஜான் கஸகிஸ்தான், துருக்கி ஜனாதிபதிகள் ஒப்பமிட்டனர்.



# யானை : சில குறிப்புகள்!

மனிதர்களுக்கு அடுத்து அறிவுத்திறனில் சிறந்து விளங்குபவை, யானைகள். நுட்பமான கேட்கும் திறன் மற்றும் மோப்பத் திறன் பெற்றவை. ஆனால், கிட்டப்பார்வை உடையவை. இவற்றின் பாதங்களுக்கு மிகக் குறைந்த அதிர்வுகளையும் உணரும் ஆற்றல் உண்டு.


ஆண் யானைகள், பருவ வயதை எட்டியதும், தனித்து வாழ ஆரம்பிக்கும். பெண் யானைகள்... தாய், சகோதரி, மகள் எனக் குழுவாக வாழ்கின்றன. இனப்பெருக்க காலத்தில் பெண் யானையும் தனித்து இருக்கும்.

சாதாரணமாக, மணிக்கு 6 கிலோமீற்றர் வேகத்தில் நடக்கும் யானைகள், அவசியம் ஏற்பட்டால், 40 கிலோமீற்றர் வேகத்தில் விரையும். இவ்வளவு வேகமாகச் சென்றாலும், வழியில் குறுக்கிடும் சிறிய பள்ளங்களை இவற்றால் தாண்ட முடியாது.

யானையின் கால்களின் அடிப்புறத்தில் வளரும் மென்மையான சதைப் பகுதி, சத்தமின்றி நடக்க உதவுகிறது. இதனால், எவ்வளவு அருகில் யானை வந்தாலும், நம்மால் உணர முடியாது.

யானை ஒரு நாளைக்கு 200 முதல் 250 கிலோ இலை மற்றும் தழைகளைச் சாப்பிடும். அதில், 50 சதவிகிதமே ஜீரணம் ஆகும்.

ஒரு நாளைக்கு 200 லீற்றர் வரை தண்ணீர் தேவைப்படும். இதற்காக, ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்கு நகர்ந்துகொண்டே இருக்கும். இதற்காக, ஆயிரக்கணக்கான சதுர கிலோமீற்றர் பரப்பளவை தனது வசிப்பிடமாகக் கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.ஈழத்தமிழ்மணி

# சிறுவர் தினம் குறித்த எடுகோளை நிதர்சனமாக்க முயல்வோமே!

இலங்கையில் இடம்பெற்ற போரின்போது ஆயிரக் கணக்கான சிறுவர்கள் கொல்லப் பட்டுள்ளனர். பெற்றோர்களை இழந்துள்ளனர். அங்கவீனப்பட்டுள் ளனர். உலகில் சிறுவர்களின் சிறப்பு மேன்மை கொண்ட தொன்றாகும். போர்க் காலத்தில் அவர்களின் வளர்ச்சி தடைப்பட்டது. அவர்கள் சமூக உளப்பாதிப்புகளுக்குள்ளா னார்கள். ஆனால், இன்றைய சிறுவர்களுக் கான உரிமைகள் மதிக்கப்படுகின்ற னவா என்ற கேள்வி முன்வைக்கப் படுகின்றது. இன்று நாட்டிலுள்ள சிறுவர்கள் நிம்மதியை இழந்துள் ளனர். இளம் பாலகர்கள் தொடக்கம் சிறுவர் சிறுமியர் வரை படுகின்ற அவலங்கள் யாவும் நாளாந்த நிகழ்வு களாகி விட்டன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள சிறு வர்கள் பட்டுள்ள துன்பங்கள், சித்திரவதைகள் எழுத் தில் வடிக்க முடியாதவை.

1924ஆம் ஆண்டு சிறுவர் உரிமை தொடர்பான கொள்கைகள் வெளியிடப்பட்டிருந்தன. 1959ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் பல்வேறு விடயங் களை உள்ளடக்கியதாகவும் சிறுவர்களுக்குரிய உரி மைகள் தொடர்பான கொள்கை கள் பிரகடனமாக வெளியிடப் பட்டது.

சிறுவர்களுக்கான உரிமைகள் என்ன? அவர்கள் தொடர்பான மக்கள் பங்கு எப்படியிருக்க வேண்டும்? சிறுவர்களின் உரி மைகளுக்கானஉத்தரவாதத்தை வழங்க ஐக்கிய நாடுகள் சபை யால் 1979ஆம் ஆண்டில் உலக சிறுவர்தினமாகப் பிர கடனப்படுத்தப்பட்டது.

சிறுவர்கள் தினம் பன்னாட்டு மட்டத்திலும் உள்நாடுகளி லும் அதற்கான மதிப்பைப் பெற்று விடுகின்றது. கிராம மட்டத்திலி ருந்து தலைநகர் வரை சிறுவர் களை கௌரவிக்கின்ற உயர்ந்த விழாவாக தொண்டு நிறுவனங் கள், உள்ளூர் அமைப்புகள், அந்தந்த நாட்டு அரசுகள் வரை யில் முன்னுரிமை வழங்கி சிறப் பாக கொண்டாடி வருவதைக் கடந்த பலவருடங்களாகக் காண்கின்றோம்.

உலகில் அனைத்து நாடுகளி லும் வாழுகின்ற சிறுவர்களுக் கான பாதுகாப்பு முக்கிய பங்கு வகிக்கின்றது. உலகத்தின் பல நாடுகளில் உள் நாட்டுப் போர்களினால் பல இலட்சம் சிறுவர்களின் உரிமை கள் மறுக்கப்பட்டுள்ளன. பிறநாடுகளில் தஞ்சம டைந்துள்ள சிறுவர்கள் பெற்றோர்களை இழந்து அகதி யாய் வாழுகின்ற அவலக்காட்சிகளை தொலைக்காட்சி வாயிலாகப் பார்க்கின்றோம்.

உலகமெங்கிலும் சிறுவர்கள் உரிமைகள் பாதிக்கப் படுவதும், மறுக்கப்படுவதும் இன்று வழக்கமாகி விட்டுள் ளது. பசிபட்டினியால் எண்ணற்ற சிறுவர்கள் வாடுகின் றனர். நோய்வாய்ப்பட்டு இறக் கின்ற நிலைக்குள்ளா கின்றனர். சிரியாவில் இன்றும் நடக்கின்ற போரில் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் கொல்லப் பட்டுள்ளனர்.

சிறுவர்கள் மீதான பாலியல் துர்நடத்தை, குடும்ப வன் முறைகள், உடல்ரீதியான துர்நடத்தை, போதை வஸ்துக்கு அடிமையாதல் பிள்ளைகளை அடிமைப் படுத்தி வைத்திருத்தல், பயமுறுத்தல், வீட்டு வேலைக் காக கட்டாயப்படுத்தி அமர்த்துதல், தனிமைப்படுத்து தல், வன்முறைகளைக் கையாளுதல் போன்ற சம்ப வங்கள் யாவும் சிறுவர்கள் மீது உலகளாவிய ரீதியில் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

1991ஆம் ஆண்டு சிறுவர்பாதுகாப்புத் தொடர்பான சம நிலைப்பாட்டை ஒரேமாதிரியானதாக இருக்க வேண்டு மேன்ற பிரேரணை ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டு வரப்பட்டது. அது தத்தமது நாட்டின் சிறுவர்களின் நல் வாழ்வுக்கும். பாதுகாப்புக்கும் பொறுப் புள்ளவர்களாக நடந்துகொள்ள வேண்டும் என்பதாகும்.

ஐக்கியநாடுகள் சபையின் சிறுவர்கள் பற்றிய சமவா யம் என அழைக்கப்படும் சட்டவரைவில் 54 உறுப் புரிமைகள் காணப்படுகின்றன. இதில் 4 தலைப்புக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. பாதுகாப்பு உரிமை, வாழும் உரிமை, அபிவிருத்தி உரிமை, பங்கேற்கும் உரிமைகளைப் பாதுகாத்தல் என்ற அந்தச் சட்ட ஏற்பாடுகள் இலங்கைஅரசாலும்ஏற்கப்பட்டவையாகும். பன்னாட்டு தொழிலாளர் சம்மேளனம் 1989ஆம்



ஆண்டு சிறுவர் உரிமைகள் தொடர்பான கொள்கைப் பிரகடனத்தை அங்கீகரித்து ஏற்றுக் கொண்டது. 1992 ஆம் ஆண்டு மேற்படி உரிமைகள் தொடர்பான விதி முறைகளை இலங்கையும் நடைமுறைப்படுத்துவதாக உறுதியான நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போர்க்காலத் தில் பெற்றோரை, பாதுகாவலரை இழந்து தவிக்கின்ற பல நூற்றுக்கணக்கான சிறுவர்கள் இன்னமும் இருக் கின்றனர்.

காமுகர்களின் கொடிய பாலியல் வன்முறைகளுக்கு சிறுமிகள் உள்ளாவது பற்றிக் கேள்விப்படுகிறோம்.

எமது சமூகத்தில் போதைவஸ்து, கஞ்சா போன்ற பொருள்களோடு நடமாடுகின்ற கூட்டமாக, மக்களோடு மக்களாக நடமாடி சிறுவர்கள் மத்தியில் அவற்றைத் திணித்து அவர்களை தீயவழிக்கு இட்டுச்செல்லும் தீய சமூக விரோத சக்திகள் உருவாகியிருப்பதுதான் இன்று வேதனை தருமொன்றாகும்.

மாணவர்கள் மத்தியில் ஊடுருவியுள்ள இவர்கள் வாள் வெட்டு, கொலை, களவு, போன்றவற்றில் ஈடுபட்டு வரு வதோடு, மாணவர்களையும் அந்த வழிக்குட்படுத்து கின்றனர். இந்தச் செய்கைகளால் மாண வர்களில் சிலர் சிறைக் கைதிகளாக அடைபட்டுள்ளனர், விசா ரணைகளுக்காகவும் காத்திருக்கின்றனர்.



2004 டிசம்பரில் ஏற்பட்ட ஆழிப் பேரலை இடரில் பல நூற்றுக் கணக்கான சிறுவர்கள் உயிரிழந் தனர். பல சிறுவர்கள் பெற்றோர் களை இழந்தனர். இன்றும் எங் கள் கண்கள் முன்னால் போரில் பெற்றோரை இழந்து அநா தைகளாக உள்ளசிறுவர்கள், உண்ண உணவின்றி தவிக் கின்ற சிறுவர்கள், நிம்மதியாக உறங்குவதற்கு வீடில்லாமல் கவலையடைகின்ற சிறுவர்கள், பராமரிப்பும் பாதுகாப்பு மில் லாது வாழும் சிறுவர்கள், பிறர் தயவில் வாழும் சிறுவர்கள், தகுந்த கல்வி இல்லாமல், மேற்கொண்டு கற்க முடியாமல் அல்லாடும் சிறுவர்கள் எனப் பலதரப்பட்ட ஆயிரக் கணக்கான சிறுவர்கள் ஒவ்வொரு சிறுவர் தினங்களிலும் தமது துயர்களோடு தோன்று வார்கள்.

சிறுவர் தினம் வருடாவருடம் வந்து போய்விடும், நிகழ் வுகளில் கலந்துகொண்டு சிறப்பிப்பவர்களும் வந்து சென்று விடுவார்கள். சிறுவர்கள் என்பவர்கள் இறைவனின் செல்வங்கள், அரும்பு மலர்கள், மென்மை உள்ளம் கொண்டவர்கள் என அழ காக ஒலிவாங்கி முன் நின்று அழகு தமிழில் கொஞ்சிப் பேசு வார்கள்.

ஆனால், அவர்களின் கரங்களைக் கைப்பற்றி அவர்களின் கண்ணீ ரைத்துடைப்பது யார்? ஆற்றுவது யார்?

குழந்தைப் பருவம் கொண்டவர்கள், அன்பு, பாசம், கருணை, தேவை யான உபசரிப்பு இவை களை முழுமையாக எதிர் பார்ப்பவர்கள், மனமகிழ் வோடு வாழவேண்டிய வர் கள் இவர்களது உணவு, சுகாதாரம், சீரான கல்வி, ஒழுக்கம் என்பவை முக் கியமானதாக கவனிக் கப்பட வேண்டிய தொன் றாகும்.

இன்றைய சமுதாயத்தில் நெருக்கடியான கால கட்டத்தில் எண்ணற்ற சிறுவர்கள் இத்தகைய பாதிப்புகளை எதிர் நோக்கியவாறுள்ளனர்.

ஒருபகுதி சிறுவர்கள் கைபேசி பாவனைகளாலும், தொலைக்காட்சி நிகழ்வுகளாலும், திரைப் படங்களாலும் ஈர்க்கப்பட்டு தங்களது எதிர்கால வாழ்வைப் பாழடிக்கவும் செய்கின்றனர்.

குறிப்பாகப் பதின்ம வயது சிறுவர்களை இங்கு குறிப் பிட முடியும். பெற்றோர்களானவர் தங்களது பதின்ம வயதுச் சிறுவர்கள் மீது கவனமெடுப்பதற்கும் சிறுவர்தி னம் முக்கியத்துவம் பெறுகின்றது.


வீதி விபத்துக்களில் சிறுவர்கள் கடந்த வருடங்களிலும் இந்தவருடத்திலும் உயிரிழந்துள்ளனர். தற்கொலையும் செய்து கொண்டுள்ளனர். பாடசாலைகளில் ஆசிரியர் கள் சிலரினால் மாணவிகளுக்கு ஏற்படுகின்ற பாலி யல் ரீதியான கொடுமைகள் என்பவற்றாலும் மாண விகள் பாடசாலைகளுக்குச் செல்ல அஞ்சுகின்றனர்.

பஸ் வண்டிகளில் கல்லூரிகளுக்குச் செல்லும் மாண விகளை அதில் பயணிக்கின்ற சில ஆண்களின் அங் கச் சேட்டைகளும், பஸ் நடத்துநரின் இரட்டை அர்த்த வார்த்தைகளும் தலைகுனியவைப்பதுடன் மனதை நோகடிக்கவும் செய்கின்றன.

இத்தனைக்கும் மத்தியிலேயே சிறுவர் தினம் நாட்டில் சகல தரப்பாலும் கொண்டாடப்படுகின்றது. உலகம் முழுவதிலும் கொண்டாடப்படுகின்ற சிறுவர் தினத்தில் சிறுவர் களின் பாதுகாப்பிலும், நலன்களிலும் தனி ஒருவரின் கவனம் மட்டும் இருப்பது மட்டுமன்றி சமூகத் தின் சகல தரப்பினரதும் கவனம் இருத்தல் வேண்டும்.

இலங்கையில் சிறுவர்கள்–சிறுமிகள் கொடூரமான தீயசக்திகளினால் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருவது அதிகரித்துள்ளது. அதி லிருந்து சிறுமிகள் பாதுகாக்கப்பட வேண்டும். யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சிறுவர்கள் மீதான பாலியல் கொடுமைகள், போதைப் பொருள்களுக்கு சிறுவர்கள் அடிமையாகுதல், பாதுகாப்பின்மை போன்றவற்றி லிருந்து அவர்கள் பாதுகாக்கப்படவேண்டும். யாழ். மாவட்ட மண்ணின் பெருமையும், கலாசாரமும் பாது காக்கப்படவேண்டும். அதற்கென உறுதி எடுக்கின்ற தினமாக சிறுவர் தினம் அமைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தனுஷின்

## ஒரிஜினல் பெற்றோர் நாங்கள் தான்; முறைப்பாடு கொடுத்த தம்பதி

கஸ்தூரி ராஜாவின் மகன், செல்வராகவனின் தம்பி, ரஜினியின் மருமகன் என பல அடையாளங்கள் இருந்தாலும், இவற்றையெல்லாம் மீறி தனக்கான அந்தஸ்தை சமூகத்தில் உருவாக்கி வைத்திருப்பவர் நடிகர் தனுஷ். மேலும் திரையுலகின் பல துறைகளிலும் இவர் சாதித்து வருகிறார்.

இந்த நிலையில் தனுஷை தங்களது மகன் என சிவகெங்கை மாவட்டத்தைச் சேர்ந்த கதிரேசன் மீனாள் என்ற தம்பதியினர் சொந்தம் கொண்டாடி வருகின்றனர். அரசு போக்குவரத்து கழகத்தில் நேரக் கணிப்பாளராகப் பணி புரிந்து வருகிறார் கதிரேசன். இவர் தெரிவித்துள்ளதாவது: எனக்கு பிறந்த கலையரசன் என்ற மகன் கடந்த 2002ஆம் ஆண்டு பத்தாம் வகுப்பு படிக்கும்போது, எங்களை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டான். அவன்தான் தற்போது சென்னை சென்று தனுஷ் என்ற பெயரில் நடிகராகி விட்டதாகக் கூறியுள்ளார்.

அதன் பின்னர் சென்னைக்கு தனுஷை தேடி வந்தபோது கஸ்தூரிராஜா குடும்பத்தினர் தங்களைத் தடுத்து வருவதாகவும் கூறியுள்ளார்.

மேலும், பொலிஸ் நிலையத்திலும் முதலமைச்சரின் தனிப்பிரிவிலும் முறைப்பாடு கொடுத்துள்ளதாகவும் இந்தத் தம்பதியினர் கூறி வருவதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

வங்கியில கடன் வாங்கி வட்டி கட்டுற மக்களுக்கு மட்டுமே தெரியும்...



சம்பளச் சிட்டையில் இருக்கும் சம்பளமும், வங்கிக் கணக்கில் இருக்கும் சம்பளமும் வேறு வேறு என்று...

மச்சி, நமக்கு பிராண்டி, பீயர், ரம் பிடிக்குது. ஒயின் பிடிக்க மாட்டேங்குதே?



ஒயின் என்று சொல்லிப் பாரு, உதடுகள் கூட ஒட்டமாட்டேங்குதே!

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | 4 | 2 | | 1 | | |
| | | 2 | | | 3 | 8 | 6 | |
| 7 | 9 | | | | | | | |
| | | | | | | 3 | | |
| 4 | | | 1 | | 2 | | | 7 |
| | | 9 | | | | | | |
| | | | | | | | 8 | 1 |
| | 8 | 7 | 2 | | | 6 | | |
| | | 1 | 8 | 4 | 6 | | | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 2 | 3 | 6 | 7 | 4 | 1 | 8 |
| 4 | 8 | 3 | 1 | 5 | 2 | 7 | 6 | 9 |
| 6 | 7 | 1 | 4 | 9 | 8 | 2 | 3 | 5 |
| 7 | 1 | 8 | 9 | 4 | 5 | 6 | 2 | 3 |
| 9 | 3 | 4 | 2 | 1 | 6 | 8 | 5 | 7 |
| 2 | 6 | 5 | 8 | 7 | 3 | 1 | 9 | 4 |
| 1 | 2 | 9 | 5 | 8 | 4 | 3 | 7 | 6 |
| 3 | 4 | 7 | 6 | 2 | 9 | 5 | 8 | 1 |
| 8 | 5 | 6 | 7 | 3 | 1 | 9 | 4 | 2 |

சோமு:
கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி என்னோட மொபைல் போன் 30 ஆவது மாடில இருந்து கீழ விழுந்திட்டுது.
பரமு: அச்சச்சோ! உன் மொபைல் உடைஞ்சிருக்குமே!
சோமு: எப்படி உடையும். இப்படி எதாவது நடக்கும் என்று தெரிஞ்சுதான் நான் என் மொபைல்ல 'பிளைட் மோடு' ல வச்சிருந்தேன். பாதுகாப்பாக லாண்ட் ஆயிடும். ஙங்ங்...
உன் அறிவுல தீய வைக்க...

WhatsApp

கூட.. யாருமே இல்ல.. தனியா இருக்கின்றோம் என்று வருத்தமா இருக்கா...? லைட்டை அணைத்துவிட்டு நல்ல பேய் படமா பாருங்க. பின்னாடி யாரோ இருக்கிற மாதிரியே பீல்... ஆகும் எப்படி ஐடியா...



சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### கவிதை ரசிகன்



விதி சிலரைத் தன் சிறகுகளில் தூக்கிச் செல்லும்... அதே விதி பலரை தரையிலேயே போட்டு இழுத்துச் செல்லும்...

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** நண்பர்கள் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால், தாராள பணவரவு கிடைக்கும். குடும்பத்தில், சுபவிடயம் குறித்த பேச்சு நடக்கும். அரசு வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**இடபம்:** அறியாதவர்களிடம் சொந்த விடயம் பற்றி பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் சுமாராக இருக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது. உறவினர் வருகையால், குடும்பச் செலவு அதிகரிக்கும்.

**மிதுனம்:** எளிதான பணிகூட சுமை போலதோன்றும். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். லாபம் சுமாராக இருக்கும். மனைவியின் ஆலோசனை நம்பிக்கையளிக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**கடகம்:** பிறர் நலனில் அக்கறை கொள்வீர்கள். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். வருமானம் உயரும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**சிங்கம்:** ஞாபக மறதியால், பணியில் தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த பணவரவு ஓரளவு கிடைக்கும். நண்பர்களால் தொல்லை ஏற்படலாம். அலைச்சலால், அசதிக்கு ஆளாக வாய்ப்புண்டு.

**கன்னி:** கடந்த கால உழைப்பால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்திகரமாக இருக்கும். பெண்களுக்கு, குடும்ப தேவை நிறைவேறும். பணியாளர்களுக்கு, பாராட்டு, வெகுமதி கிடைக்கும்.

**துலாம்:** பேச்சில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், கடின உழைப்பு தேவைப்படும். பணவரவில் இருந்த தாமதம் விலகும்.

**விருச்சிகம்:** சுதந்திர மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் உயரும். நிலுவைப் பணமும் வசூலாகும். உறவினர் வருகையால், வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள்.

**தனுசு:** செயலில் நேர்மை நிறைந்திருக்கும். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.

**மகரம்:** மனதில் குழப்பம் உருவாகி மறையும். தொழில், வியாபாரத்தில், நடைமுறை சீராக தகுந்த முயற்சியில் ஈடுபடுவீர்கள். லாபம் சுமாராக இருக்கும். பாதுகாப்பு குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**கும்பம்:** செயலில் குளறுபடி வராமல் பார்த்துக் கொள்வது நல்லது. நண்பரின் உதவி கிடைக்கும். தொழிலில், லாபம் சராசரி அளவில் இருக்கும். பெண்கள், வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். உடல் நலனில் அக்கறை தேவை.

**மீனம்:** நற்செயலில் ஈடுபட்டு பெருமிதம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சி உண்டாகும். இலாபம் படிப்படியாக உயரும். உடல்நலக் குறைவால் சிலருக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரிசிமா கேக்

## தேவையான பொருள்கள்

பச்சரிசி மா - 1 கப்
துருவிய தேங்காய் - ½ கப்
துருவிய வெல்லம் அல்லது சீனி - ½ கப்
உப்பு - 1 சிட்டிகை
பால் - 1 கப்
விருப்பமான உணவு நிறமூட்டி

## செய்முறை

பச்சரிசியை ஒருமணிநேரம் ஊறவைத்து- வடித்து, நிழலில் உலர்த்தி, மிக்சியில் அரைத்து அரித்து லேசாக வறுத்து எடுத்துக்கொண்டால் மிகவும் மிருதுவாக இருக்கும். பதப்படுத்திய மாவை, பால், உப்பு தெளித்து கொஞ்சம் கொஞ்சமாக பிசைந்து சர்க்கரை, தேங்காய்த்துருவல், விரும்பினால் நிறமூட்டி சேர்த்துக் கலக்கவும். இந்தக் கலவையைப் பிசைந்து பார்க்கும்போது பாண் தூள் மாதிரி இருக்கும். கையில் பிடித்தால் உதிரக்கூடாது. இந்தக் கலவையை கொஞ்சம், கொஞ்சமாக 2, 3 கிண்ணத்தில் நிரப்பி ஆவியில் வேகவிட்டு 10 நிமிடங்களின் பின்னர் எடுத்துப் பரிமாறலாம்.



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 500 | 700 | 700 | 800 | 800 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 600 | 300 | 600 |
| கணவாய் | 600 | 650 | 400 | 600 | 700 | 800 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 500 | 500 | – |
| சுறா | 500 | 600 | 500 | 800 | 700 | – | – |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 400 | 400 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 450 | 500 | – |
| முரல் | 300 | 400 | 300 | 500 | 300 | 300 | 400 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 500 | 200 | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 400 | 350 | 400 |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 300 | 150 | 500 |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 400 | 150 | – |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 120 | 150 | – |
| ஒட்டி | 300 | 200 | 200 | – | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 400 | 300 | 150 |
| மதனம் | 150 | 200 | – | 400 | 300 | 200 | 350 |
| கொய் | 100 | 150 | 50 | 70 | 80 | 50 | – |
| பாலை | 400 | 100 | 300 | 400 | 500 | 300 | – |
| வாழை | 100 | 150 | – | 400 | 350 | 250 | – |

# வாழைப்பூவின் மருத்துவக் குணங்கள்

வாழைப்பூ துவர்ப்புச் சுவையுடையது. இயற்கையின் படைப்புக்களில் பூக்கள் அற்புதமானவை. ஒவ்வொரு பூவும் ஒவ்வொரு விதமான மருத்துவக் குணங்களைக் கொண்டுள்ளது.

இப்போது நாம் உண்ணும் உணவில் உடலுக்குத் தேவையான முழுமையான ஊட்டச் சத்துக்கள் கிடைப்பதில்லை. இரசாயனம் கலந்த உணவையே சாப்பிட நேரிடுகிறது. மேலும், போதிய உடற்பயிற்சியின்மை, சில நேரங்களில் அதிக வேலைப்பளு, சரியான நேரத்துக்கு உணவருந்தாமை போன்றவையால் உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டு, செயலிழந்து நீரிழிவு நோயை உண்டாக்குகின்றன.

வாழையின் அனைத்து பாகங்களும் மருத்துவக் குணம் கொண்டுள்ளன. வாழையிலையில் சாப்பிடும்போது ஆரோக்கியத்தைத் தருவதுடன் ஆயுளையும் அதிகரிக்கச் செய்கிறது.


நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வாழைப் பூவை சுத்தம் செய்து, சிறிது சிறிதாக நறுக்கி, அதனுடன் சின்ன வெங்காயம், உள்ளி, மிளகு சேர்த்து பொரியல் செய்து சாப்பிட்டு வந்தால் கணையம் வலுப்பெற்று உடலுக்குத் தேவையான இன்சுலினைச் சுரக்கச் செய்யும். இதனால் நீரிழிவு நோய் கட்டுப்படும்.

உடல் சூடு உள்ளவர்கள் வாழைப்பூவுடன் பாசிப்பருப்பு சேர்த்து கடைந்து நெய் சேர்த்து வாரம் இருமுறை உண்டுவந்தால், உடல் சூடு குறையும். சிலருக்கு அஜீரணக் கோளாறு ஏற்பட்டு, அதனால் வயிற்றுக்கடுப்பு உண்டாகும். இதனால் சீதக் கழிச்சல் ஏற்படும். இவர்கள் வாழைப்பூவை நீரில் கலந்து அதனுடன் சீரகம், மிளகுத்தூள் சேர்த்து கொதிக்க வைத்து வடிகட்டி அந்த நீரை இளஞ்சூடாக அருந்தி வந்தால் வயிற்றுக்கடுப்பு நீங்கும்.

கை கால் எரிச்சலால் அவதிப்படுபவர்கள் வாழைப்பூவை இடித்து, அதனுடன் சிற்றாமணக்கு எண்ணெய் சேர்த்து வதக்கி கை கால் எரிச்சல் உள்ள பகுதிகளில் ஒத்தடம் கொடுத்து வந்தால் எரிச்சல் குணமாகும்.

சிலர் குழந்தையின்மையால் மன வேதனைக்கு ஆளாவர். இவர்களுக்கு வாழைப்பூ ஒரு வரப்பிரசாதம். வாழைப்பூவை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால், மலட்டுத்தன்மை நீங்கி குழந்தை பாக்கியம் பெறுவர்.





# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 80 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 80 | 60 | 50 | 80 | 40 | 40 | 90 | 35 |
| கரட் | 80 | 100 | 100 | 100 | 100 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 70 | 60 | 80 | 40 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 140 | 100 | 130 | 160 | 200 | 40 | 100 | 60 |
| பாகல் | 100 | 100 | 160 | 120 | 200 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 100 | 110 | 100 | 120 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 100 | 80 | 120 | 90 | 70 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 | 25 | 60 | 70 | 30 |
| தக்காளி | 80 | 70 | 70 | 80 | 80 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 60 | 80 | 80 | 70 | 40 |
| கீரை | 25 | 20 | 30 | 20 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 70 | 100 | 60 | 70 | 100 | 200 | 70 |
| புடோல் | 40 | 50 | 30 | 60 | 30 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 100 | 80 | 100 | 80 | 80 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 140 | 200 | 160 | 220 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 120 | 120 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 35 | 40 | 35–40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 110 | 110 | 110–120 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 600 | 350 | 400–600 | 360 | 300 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 90 | 100 | 120 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 100 | 60 | 100 | 60 | 80–100 | 200 | 80 | 100 |



# நாளை

**புரட்டாதி-18**

செவ்வாய்க்கிழமை -04.10.2016
திதி: திருதியை மு.ப. 11.00
நட்சத்திரம்: விசாகம் முழுவதும்
ராகுகாலம்: 03.02-04.32 வரை
சுபநேரம்: 10.32-12.02 வரை
சதுர்த்தி விரதம்



# இது புதுசு

தற்போது நெற் ஆடைகளின் வரத்து அதிகரித்துள்ளது. விதம் விதமான வடிவங் களில் நெற் கவுண்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. முற்பகுதியில் நெற் வைத்த கண்கவர் கவுண்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவை 3 ஆயிரத்திலிருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா நகரங்களில் கொழும்பு 4ஆம் இடம்

உலகின் வேகமாக வளர்ந்து வரும் சுற்றுலா நகரங்களில் நான்காவது இடத்தில் கொழும்பு தரப்படுத்தப்பட்டுள்ளது. மாஸ்டர்கார்ட்டினால் வருடாந்தம் வெளியிடப்படும் தரப்படுத்தலில் இந்த விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்தச் சுட்டெண்ணின் பிரகாரம் இலங்கையின் வர்த்தக தலை நகராகத் திகழும் கொழும்பு 19.57 சதவீத வளர்ச்சியைக் கடந்த ஏழு ஆண்டுகளில் பதிவு செய்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பன்னாட்டு சுற்றுலாப் பயணிகள் பெருமளவு வருகை தந்த நாடுகள் வரிசையில் ஜப்பானின் ஒஸாகா முதல் இடத்திலும், சீனாவின் செங்டு மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத் தின் அபுதாபி முறையே இரண்டாம் மற்றும் மூன்றாமிடங்களையும் பெற்றுள்ளன. இலங்கையின் கொழும்பைத் தொடர்ந்து, ஜப்பானின் டோக்கியோ ஐந்தாமிடத்தில்தரப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, தாய்லாந்தின் பாங்கொக் நகரம் சுற்றுலாப் பயணிகள் அதிகளவு செலவு செய்யும் நகரங்களில் முதல் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளதுடன், இரண்டாம் மற்றும் மூன்றாமிடங்களில் லண்டன் மற்றும் பாரிஸ் ஆகியன தரப்படுத்தப்பட்டுள்ளன.

2009 - 2016 காலப் பகுதியில் இலங் கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு பதிவாகியிருந்தது. நாட்டில் போர் நிறைவடைந்ததன் பின்னர், சுற்றுலாப் பயணிகளின் வருகையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதுஎனமாஸ்டர் கார்ட்டினால் வருடாந்தம் வெளியிடப்படும் சுட்டெண்ணில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)


## மரண அறிவித்தல்

### முருகுப்பிள்ளை நடராசா



தையிட்டி, காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகவும், தற்போது உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை நடராசா 01.10.2016 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை- சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசதுரை மற்றும் தேவராசா, சந்திரகாந்தி ஆகியோரின் சகோதரரும், இரவீந்திரன், ரவிதாஸ், வசந்தாதேவி, பாமினி, விஜிதா, தேவி ஆகியோரின் தந்தையும், காண்டீபன், யாழினி, சுரேஸ், சுதன் ஆகியோரின் பெரிய தந்தையும், பத்மநாதன், சிவனேசன், கஜேந்திரன், ரஞ்சித்,சுகந்தி, வான்மதி, சர்மினி, வனித்தா ஆகியோரின் மாமனாரும், கிஷோத், கிருசிகா, விதுசா, துசாந், நிலான்சி, சஜித்,துஷாரா, சாருணிகா, லதுர்சிகா, கௌசிகன்,தேசிகன்,லக்சிகன், வர்ணிகா, வரன்ஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2016) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.31, V.T.S. லேன்,
உரும்பிராய் தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

வசந்தி - 077 515 7392, கிஷோத் - 077 905 0693

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி பரமு



மலர்வு 01.02.1928 உதிர்வு 01.10.2016

சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பரமு 01.10.2016 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நாகம்மா தம்பதிகளின் ஏகபுத்திரனும், தெய்வானைப்பிள்ளையின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், துரை (சுவிஸ்), தவம் (சுவிஸ்), குமாரி (லண்டன்), நகுலேஸ்வரி (ஆசிரியை - எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தா (சுவிஸ்), மனோ (சுவிஸ்), சிறீ (லண்டன்), தங்கராசா (மீசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், மதுர தாசன் (சுவிஸ்), மதுரா, ஆதவன் (லண்டன்), போவாஸ் (சுவிஸ்), ரஷினா, றக்ஷனா, விதுஷா (மீசாலை) ஆகியோரின் பாசமிகு பேரனும், ஹெய்டனின் (சுவிஸ்) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2016) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாவகச்சேரி வடக்கு , மீசாலை. (C/26489) (11,17,18) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### மரியாம்பிள்ளை அன்ரனி ஜெயநாதன்

(ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரியும் வடக்கு மாகாணசபை முல்லை மாவட்ட உறுப்பினரும் வடமாகாண சபையின் பிரதி அவைத்தலைவரும்)



முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை அன்ரனி ஜெயநாதன் (ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரியும் வடக்கு மாகாணசபை முல்லை மாவட்ட உறுப்பினரும் வடமாகாண சபையின் பிரதி அவைத்தலைவரும்) அவர்கள் 01.10.2016 சனிக் கிழமை காலமானார்.

அன்னார் முன்னைநாள் முல்லைத்தீவு பட்டின சபைத்தலைவர் திரு.மரியாம்பிள்ளை - திருமதி மேரி திரேசா தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற மேரிஅமலோற்பவநாயகி அவர்களின் அன்புக் கணவரும் பீற்றர் இளஞ்செழியன், றெஜி இளஞ்சோழன், காலஞ்சென்ற கிறிஸ்டி இளஞ்சேந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மேரி ஆன் பிரான்ஸிஸ்கா(லீலா), அலோஷியஸ் நேசராஜா (குலசிங்கம்), மேரி பிறிம்றோஸ்(புசி), அன்ரனிப்பிள்ளை (அன்ரன்), மேரி கொன்செப்ரா(பேபி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செபமாலை செபமணி(லங்கநாதன்), மேரிரோஸ் ஜசிந்தா (சின்னா), வின்சன் ஞானமணி, மேரிபுளோரன்ஸ் (பபா), பூபாலசிங்கம், பென்ஜமின் அருமைநாயகம், மேரிராணி, சேவியர் குலநாயகம், விக்டர் தனி நாயகம், மேரிநிர்மலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.10.2016 வியாழக்கிழமை முல்லைத்தீவில் இடம் பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணற்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

(C / 26488)

தகவல்
குடும்பத்தினர்.

077 756 6804(லங்கநாதன்), 077 070 8578(குலசிங்கம்), 077 665 2106(அன்ரன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைமையின்...

நாட்டில் ஆட்சியை நடத்துபவர்களின் சிந்தனையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை இது எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு நடப்பதற்கு நாட்டில் நல்லிணக்கம் – புரிந்துணர்வு ஏற்பட வேண்டும். வெவ்வேறு தேசிய இனங்களுக்கு மத்தியில் சமரசம் – சமத்துவம் ஏற்பட வேண்டும். அதனூடாக சமாதானம் ஏற்பட வேண்டும். ஆட்சியில் இருக்கின்ற தலைவர்கள் இவ்வாறு சிந்திக்கின்ற காரணத்தினால்தான் முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் தேசிய விளையாட்டு விழா நடைபெற்றிருக்கின்றது என்று நான் நினைக்கின்றேன்.

நாங்கள் ஒரு நாட்டைச் சேர்ந்தவர்களாக சமமாக வாழக் கூடிய நிலமை உருவாகவேண்டும். அந்த விதமாக நடைபெற வேண்டுமாக இருந்தால் சில கருமங்கள் நடைபெற வேண்டும். நாட்டில் வாழுகின்ற மக்கள் மத்தியில் ஓர் கருத்து இருக்கின்றது. இந்த நாடு சுதந்திரமடைந்த பொழுது நாட்டில் வாழுகின்ற பெரும்பான்மையின மக்கள்தான் சுதந்திரமடைந்தார்கள், ஏனைய சிறுபான்மை மக்கள் சுதந்திரமடையவில்லை.

இவ்வாறு மக்கள் எண்ணுவதற்கு காரணம் இருக்கின்றது. நாட்டில் வாழுகின்ற அனைத்து இன மக்களாலும், சகல அரசியல்கட்சிகளாலும் ஒருமித்து நாட்டின் அரசமைப்பு உருவாக்கப்படவில்லை. சகல இனங்களுக்கும் அரசமைப்பில் சமத்துவம் வழங்கப்படவில்லை.

எமது நாட்டின் முதலாவது அரசமைப்பை ஆங்கிலேயர்கள் நடைமுறைப்படுத்தினார்கள். 1972ஆம் ஆண்டு, 1978ஆம் ஆண்டு அரசமைப்பு, ஒவ்வொரு தனிப்பட்ட கட்சிகளால் திருத்தப்பட்டது. ஏனைய கட்சிகளினது கருத்துக்கள் கேட்கப்படவில்லை. எல்லா இனங்களின் ஆதரவைப் பெறவில்லை. இதனால்தான் நாட்டை ஒற்றுமைப்படுத்த முடியவில்லை.

தற்போது புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான முயற்சி நடக்கின்றது. இரண்டு முதன்மைக் கட்சிகளும் இணைந்துள்ளன.

புதிய அரசமைப்பு நாட்டில் வாழும் அனைத்து மக்களும் சுதந்திரமாக வாழக் கூடிய சமரசத்தின் அடிப்படையில், அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு, ஒவ்வொரு இனங்களினதும் இறைமை மதிக்கப்பட்டு, இறைமையின் அடிப்படையில் அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இதனை உருவாக்குவதற்கான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கி வருகின்றோம். ஆதரவு வழங்குவோம்.

நாங்கள் எல்லோரும் நாடு பிரிக்கப்படாமல் ஒரே நாட்டிற்குள் ஒருமித்து ஒற்றுமையாக சமத்துவமாக வாழக் கூடிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இதற்குப் பெரும்பான்மையினம் ஆதரவு வழங்குகின்ற வேளையில் சிறுபான்மையினமும் ஆதரவு வழங்க வேண்டும். இது முக்கியமான விடயம். இங்கு சகல பிரதேசங்களிலும் இருந்து வந்திருக்கின்றீர்கள். நீங்கள் இந்தச் செய்தியை உங்கள் இடங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். எல்லோரையும் சென்றடையச்செய்ய வேண்டும் – என்றார்.

(வ-5-106)

## தென் பகுதி

சுரேஷ் பிரேமச்சந் திரன் தெரிவித்ததாவது:

தென்பகுதியிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களும், ஜே.வி.பியைச் சேர்ந்தவர்களும், பௌத்த பிக்குகளும், பேரின வாதக்கட்சிகளும், சிங்கள பௌத்த தீவிரவாதிகளும் வடக்கு மாகாணத்தில் எல்லோரும் இன வாதம் பேசுகின்றார்கள் என்ற ஒரே விடயத்தைத்தான் கூறிவருகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊர்வலத்தைக் கலைப்பதற்கு தமிழரசுக்கட்சி முயன்றது. அதனுடைய பேச்சாளர் சுமந்திரன் நாங்கள் அதில் கலந்து கொள்ள மாட்டோம் என்று அறிக்கை விட்டார். நாங்கள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சேனாதிராசா சொன்னார். ஊர்வலம் நடைபெற இது காலமல்ல என்றும் தெரிவித்தார்கள்.

அரசமைப்பு மாற்றத்திற்கான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்த சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் முக்கியமான குழுவில் இருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் மு. திருநாவுக்கரசு எழுதிய நூல் வெளியீட்டு விழா நேற்று இடம்பெற்றது. அதில் பலபேர் பேசினார்கள். பல கட்சிகளின் தலைவர்கள் பேசினார்கள். தமிழரசுக்கட்சியைச் சார்ந்த சுமந்திரன், ஈழமக்கள் புரட்சிகரவிடுதலைமுன்னணியை சார்ந்த நான். புளொட்டில் பவான், ஈ.பி.டி.பியில் தவராசா, ஆனந்த சங்கரி, ரெலோவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது அவர்கள் வரவில்லை. அனைவரும் அரசியல் தொடர்பாக பேசினார்கள். மேடையில் நிறைய குழப்பங்கள், பிரச்சினைகள் வந்தன.

இப்போது அரசமைப்பு மாற்றம் குறித்த குழுவில் பங்குபற்றிக் கொண்டிருக்கக்கூடிய மக்களால் தெரிவு செய்யப்பட்டதாகக் கூறப்படும் சுமந்திரனும் அந்தக் கூட்டத்தில் பேசியதால், அரசமைப்பு மாற்றத்தில் என்ன என்ன விடயங்கள் உட்படுத்தப்பட்டிருக்கின்றன என்று மக்களுக்குச் சொல்வார் என்று அங்கே எல்லோரும் எதிர்பார்த்தார்கள். நாங்களும் எதிர்பார்த்தோம். ஆனால் அது தொடர்பாக ஒரு விடயம் கூட வாய்திறக்கப்படவில்லை.

நீங்கள் சத்தம் போடுவதால் அல்லது இந்தியாவிற்கு விரட்டுவோம் என்று கூறுவதால் அல்லது எல்லோரையும் கைது செய்து விடுவோம் என்று கூறுவதால், தமிழ் மக்களுடைய குரலை ஒடுக்கிவிடலாம் என்று நினைத்தால், அது தவறு. தென்பகுதி அரசியல்வாதிகள் வடபகுதிக்கு வந்து சத்தம் போடுவார்கள் என்றால், அதை தமிழ்மக்கள் கட்டுப்படுத்துவார்கள் – என்றார். (வ-21)

## மதகுவைத்த...

எனினும் அந்தக் காணி தேசிய வீடமைப்பு அதிகார சபையினருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதால், அதன் ஒப்பந்தத்தை நீக்கம் செய்து வழங்கும் அனுமதி அமைச்சரவையிடம் கோரப்பட்டது.

அதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியது. அந்த அனுமதி தொடர்பான அறிவிப்பு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு அரசினால் வவுனியா மாவட்டச்செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதன் பிரகாரம் பொருளாதார மையத்திற்கான அடிக்கல் நாட்டு தல் இந்த மாத இறுதிக்குள் இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(வ-101)

## சமஷ்டியில்...

அந்தக் குழுவின் தலைவர் லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் மல்வத்தை பீடத்தின் மகாநாயக்க தேரரை நேற்று முன்தினம் சந்தித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அரசமைப்பு பல்வேறு சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டுள்ளது. இனி மேலும் அதில் திருத்தங்கள் செய் யப்படக் கூடாது.

மக்களால் எளிதாக விளங்கிக் கொள்ளக் கூடியதான சாதாரணமான அரசமைப்பு ஒன்றை அறிமுகப்படுத்துவதில் அரசு அக்கறை கொண்டிருந்தது. அரசமைப்பு மக்களுக்கானது என்பதால், அவர்களின் கருத்துக்கள் முக்கியமானது.

தென்னாபிரிக்க அரசமைப்பு மிகச் சாதாரணமானது. இலகுவாக விளக்கிக் கொள்ளக் கூடியது.

கூட்டாட்சித் தீர்வில் மக்கள் ஆர்வம் கொண்டிருக்கவில்லை என்பதையும், ஆனால் மாகாண சபை முறை மாற்றப்பட வேண்டும் என்பதில் மக்கள் கவனம் செலுத்தினர் என்பதையும் எமது பரிந்துரைகளில் குறிப்பிட்டுள்ளோம், என்றும் லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

(வ-5)

## மலையகத்...

தொழிலாளர்களின் போராட்டம் காரணமாக பொதுமக்களுக்கு இடையூறுகள் ஏற்படலாம், பொதுச் சொத்துகளுக்குச் சேதம் ஏற்படக் கூடும் என்ற காரணங்களை முன்வைத்தே பொலிஸாரால் இந்தத் தடை உத்தரவு பெறப்பட்டது.

தொழிலாளர்களின் போராட்டத்துக்கான தடை உத்தரவு பற்றி அறிவிக்கப்பட்டபோது, தொழிலாளர்கள் ஆத்திரமடைந்தவர்களாகக் காணப்பட்டனர். இதன் காரணமாக சில நிமிடங்கள் அங்கு பதற்றநிலை ஏற்பட்டது.

மஸ்கெலியா நகரிலுள்ள வர்த்தகர்கள் தங்கள் வியாபார நிலையங்களை நேற்று மூடி தொழிலாளர்களின் போராட்டத்துக்கு ஆதரவை வழங்கியிருந்தனர்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போது 620 ரூபா நாளாந்த சம்பளமாக வழங்கப்படுகின்றது. இந்தத் தொகையை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த 10 நாள்களாக தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்களிலும், வீதிமறியல் போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

சம்பள உயர்வு தொடர்பாக ஏற்கனவே தொழிற் சங்கங்களுக்கும் தோட்ட உரிமையாளர்கள் சம்மேளனத்துக்குமிடையில் கடந்த 18 மாதங்களில் 10 தடவைகள் பேச்சுகள் இடம்பெற்றிருந்த போதிலும் இதுவரை இணக்கப்பாடு ஏற்படவில்லை.

தோட்ட உரிமையாளர்கள் சம்மேளனத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் அவர்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையில் வாசக அட்டைகளையும், கறுப்புக் கொடிகளையும் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தங்களின் அரசியல் மற்றும் தொழிற்சங்கத் தலைமைகள் மீதும் அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தியும், தோட்ட நிர்வாக மையங்களுக்கு முன்பாக ஒன்று கூடியும் இந்தப்போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தங்களுக்கு தற்போது கிடைக்கும் நாளாந்த வேதனம் 620 ரூபா எதிர்வரும் தீபாவளி பண்டிகைக்கு முன்னதாக ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவேண் டும் என்பதே தொழிலாளர்களின் கோரிக்கையாகும்.

ஏற்கனவே இந்தக் கோரிக்கை தொழிற்சங்கங்களால் இருதரப்பு பேச்சுகளின்போது முன்வைக்கப்பட்டு இறுதிப் பேச்சின்போது ரூபா 720 வரை அந்தத் தொகை இறங்கியது.

பெருந்தோட்டத்துறை அமைச்சு மற்றும் தொழில் அமைச்சு ஆகியவற்றின் தலையீடு காரணமாக இந்தத் தொகை தோட்ட உரிமையாளர்கள் சம்மேளனத்தால் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு பின்னர் நிராகரிக்கப்பட்டது.

தற்போது வழங்கப்படும் சம்பளத்தைவிட ஒரு சதம்கூட தங்களால் அதிகரிக்க முடியாது என்பதே தோட்ட உரிமையாளர் சம்மேளனத் தின் நிலைப்பாடாகும்.

(வ-5)

## தேர்தலில்...

நிகழ்வுகள் நேற்று மாலை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: பேச்சாளர் பட்டியலில் எனது பெயர் முன்பு இடம் பெற்றிருக்கவில்லை. இறுதி நேரத்தில் என்னையும் பேசுமாறு அழைத்தமைக்கு நன்றி கூறுகின்றேன். ஒரு வேளை தெற்கிலே என்னை இப்பொழுது சித்திரித்துக் காட்டி வருவது என்னைத் தகாத ஒரு மனிதனாக ஏற்பாட்டாளர்கள் மனதில் எடுத்துக் காட்டியிருக்கக் கூடும். நான் வழக்கமாக பேச்சுக்களை எழுதியே வாசிப்பேன்.

என்னைப் பேயாகவும் பூதமாகவும் தகாத மனிதப் பிறவியாகவும் சித்திரிப்பதற்கு முன்னர் நான் அண்மையிலே பேசிய பேச்சை சிங்களத்திலோ ஆங்கிலத்திலோ முறையாகச் சரிவர மொழி பெயர்த்து வாசித்து விட்டு, என்னை விமர்சித்திருந்தால், அதற்கான பதிலைத் தந்திருக்க முடியும். ஆனால் நான் சொல்லாததை எல்லாம் சொல்லி எனக்கு மனவருத்தத்தைத் தருகின்றது.

1958ஆம் ஆண்டில் செனவிரத்ன எனும் ஒரு சிங்களச் சகோதரரை வெட்டித் துண்டு துண்டாக்கி மீன் பெட்டிகளில் அடைத்து அனுப்பியதாக ஒரு கட்டுக் கதை கட்டி விடப்பட்டதால் தான், பல தமிழ் மக்கள் அழிக்கப்பட்டார்கள். சொத்துக்கள் சூறையாடப்பட்டு தீயிடப்பட்டன. அவ்வாறு அழிக்கப்பட்ட பின்னர்தான் அந்தச் செய்தி பொய் என்று தெரியவந்தது. ஆனால் அழிவு அழிவு தான். கடைசி நேரத்தில் என்னைப் பேச அழைத்ததால், அது பற்றிய முழு விவரங்களையும் என்னால் திரட்ட முடியவில்லை. தார்சி விதாச்சி என்பவரின் '58 இன் அவசர காலம்' என்ற நூலில் இது பற்றிய விவரம் அடங்கியுள்ளது. ஆகவே பொய் புரட்டுக்களை நம்பி அநியாயமாக மக்களிடையே பிரிவினைகளையும் முரண்பாடுகளையும் வெறுப் புணர்ச்சிகளையும் ஏற்படுத்தாது இருப்போம்.

முக்கியமாக தெற்கில் தேர்தலில் தோற்ற சிலர், சிறைத் தண்டனைக்கு இலக்காக வேண்டிய சிலர் எம்மை வைத்து அரசியல் வியாபாரம் நடத்த முற்பட்டிருக்கின்றார்கள். அவர்களின் வியாபாரத்துக்காவது நான் பயன்பட்டுள்ளேன் என்பதில் எனக்குத் திருப்திதான்.

தேசிய விளையாட்டு நிகழ்வுகளும் தடகளப் போட்டிகளும் ஒவ்வொரு வருடமும் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டு, அந்தந்தப் பிரதேசங்களில் முன்னிலைப் படுத்தப்பட்டு வருகின்ற வகையில் இந்த 42 ஆவது தேசிய விளையாட்டு விழா யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றிருப்பது எமக்கு பெருமை அளிக்கின்றது.

பல விளையாட்டுக்களை நடத்த எமக்கு வசதிகள் இல்லை. பிற மாகாணங்களில்தான் அவை நடத்தப்படுகின்றன. வடக்கு மாகாணத்தில் தேசிய விளையாட்டு நடைபெறுகின்றது என்று கூறுவது எமக்குப் பெருமை தரும் அதே வேளையில், நீச்சல் போன்ற பல போட்டிகளை எம்மால் நடத்த முடியாதிருப்பதால் மனவேதனை அடைகின்றோம். வெகுவிரைவில் வடக்கு மாகாணத்திற்குள்ளேயே கிளிநொச்சியில் சகல போட்டிகளும் நடத்தப்பட்டு தேசிய விளையாட்டு விழா மீண்டும் இங்கு நடைபெற எங்கள் ஜனாதிபதி வழி சமைப்பார் என்று எதிர்பார்க்கின்றேன் – என்றார். (வ-5)

## பயங்கரவாதத்...

முப்படைத் தளபதிகளுடன் விரைவில் பேச்சு நடத்தவுள்ளனர் என்றும், இதற்காகச் சிறப்பு பாது காப்புச் சபைக் குழுக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது என் றும் அரச தரப்புத் தகவல்கள் தெரி வித்தன.

ஜனாதிபதி தலைமையில் சிறப்புப் பாதுகாப்புச் சபைக் கூட்டம் நடைபெறவுள்ளதை இராணுவப் பேச்சாளர் உறுதிப்படுத்தினார். ஆனால், பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டத்தைப் பற்றி ஆராயும் நோக்கிலா இந்தக் கூட்டம் நடைபெறுகின்றது என்பது பற்றி தனக்குத் தெரியாது என்றும் கூறினார்.

மேற்குலக நாடுகளில் நடைமுறையிலுள்ள பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டத்தில் தீவிரவாத ஒழிப்பு, இணைய குற்றங்கள், பொருளாதாரம் சார்பான அச்சுறுத்தல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனை மையப்படுத்தியே இலங்கையின் புதிய சட்டமும் அமையவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு பன்னாட்டு சமூகமும், மனித உரிமை அமைப்புகளும் இலங்கையை தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றன. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலும் இந்த விடயம் பரிந்துரைக்கப்பட்டது.

இதை நிறைவேற்றும் வகையிலேயே தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக புதியதொரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசு உத்தேசித்துள்ளது.

இலங்கையில் நடைமுறையில் இருந்த அவசரகால சட்டம் நீக்கப்பட்ட பின்னர், அதிலுள்ள முக்கிய சரத்துகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குள் புகுத்தப்பட்டன. (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# மலையகத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு ஒரு வாரத்துக்குள் தீர்வு

## தொழில் இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு இந்த வாரத்துக்குள் தீர்வுகாணப்படும் என்று தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர் ரவீந்ர சமரவீர நேற்றுத் தெரிவித்தார்.

2013ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தம் கடந்த 2015 மார்ச் 31ஆம் திகதியுடன் காலாவதியானது. தற்போது 18 மாதங்கள் கடந்துள்ளபோதிலும் அது இன்னும் புதுப்பிக்கப்படவில்லை. நடைபெற்ற பேச்சுகளும் தோல்வியிலேயே முடிவடைந்தன. அத்துடன், இடைக்கால நிவாரணக் கொடுப்பனவும்(ரூ. 2,500) உரிய வகையில் வழங்கப்படவில்லை.

இதனால், நியாயமான சம்பள உயர்வை விரைவில் வழங்குமாறு வலியுறுத்தி மலையகத்தில் பல பாகங்களிலும் தோட்டத் தொழிலாளர்கள் போராட்டங்களை முன்னெடுத்துவருகின்றனர். வீதிமறியல் போராட்டம், ஒப்பாரிப் போராட்டம் என்று பல வழிகளிலும் போராட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

கூட்டுஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களும் போராடுவதற்குத் தயாராகிவருகின்றன. ஆனால், ஆயிரம் ரூபா சம்பள உயர்வை வழங்குவதற்கு கம்பனிகள் இழுத்தடித்து வருகின்றன.

கூட்டு ஒப்பந்தப் பேச்சு இழுபறி நிலையை எட்டியதால், இம்முறை தொழில் அமைச்சும் இதில் த்லையிட வேண்டியநிலை ஏற்பட்டது. பல சுற்றுப் பேச்சுகள் நடந்தாலும் அவற்றில் ஆரம்பக்கட்டப் பேச்சுகள் இணக்கப்பாடின்றியே முடிவடைந்தன. இறுதிக்கட்டப் பேச்சுகள் தாமதகமாக அமைந்தன. குறுகியதொரு தொகை வேறுபாட்டிலேயே சிக்கல் இருக்கின்றது. அந்த சர்ச்சைக்கும் ஒருவாரத்துக்குள் முற்றுப்புள்ளி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, ஒருவாரத்துக்குள் தொழிலாளர்களுக்கு நியாயமானதொரு சம்பள உயர்வு கிடைக்கும் என்பதே அரசின் எதிர்பார்ப்பாகும். அதை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தல் காலத்தில் அரசியல் நோக்கத்துக்காகவே ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. எனவே, அத்தொகை சாத்தியப்படாது. தற்போது உலகச்சந்தையில் தேயிலை விலையும் வீழ்ச்சியைக் கண்டுள்ளது" என்றார் தொழில்துறை இராஜாங்க அமைச்சர்.

## மரண அறிவித்தல்கள்

### நீக்கிலாப்பிள்ளை யோன் பிரான்சிஸ்



பிறப்பு
17.03.1950

இறப்பு
01.10.2016

நாவாந்துறையினைப் பிறப்பிடமாகவும் 25, மவுண்காமல் வீதியினை வதிவிடமாகவும் கொண்ட நீக்கிலாப்பிள்ளை யோன் பிரான்சிஸ் 01.10.2016 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை-றோசலின் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான அன்ரனி-மரியம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மரியகாமலிற்றா (றோக்கு) அவர்களின் பாசமிகு கணவரும் மேரி றொசாணி (லண்டன்), றொக்கி (அபிவிருத்தி உத்தியோகத்தர் கமநல சேவை நிலையம், கிளிநொச்சி), றொசிற்றா (ஆஸ்திரேலியா), றொமினா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (03.10.2016) திங்கட்கிழமை மாலை நடைபெற்று 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

25, மவுண்காமல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### ஜனாதிபதி...

தெரிவித்தார்.

நியூசிலாந்து சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஓக்லாந்து நகர சபையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கு, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில்போட்டியிடுவீர்களாஎன்றுஎழுப்பப்பட்டகேள்விக்குப் பதிலளித்த போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு நாம் எதிர்பார்த்திருக்கிறோம். எனினும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைக்குப் பதிலாக எத்தகைய ஆட்சி முறையைக் கொண்டு வரு வது என்பது குறித்து இன்னமும் முடிவு செய்யவில்லை.

எவ்வாறாயினும், இதன் அதிகாரங்கள் அனைத்தையும் நாடாளுமன்றத்துக்கு அல்லது தேசிய சட்டசபை, செனட் சபை மற்றும் மாகாண சபைகளுக்கு மாற்றுவது குறித்து கலந்துரையாடப்படுகிறது என்று அவர் தெரிவித்தார். (வ-5)

### மரண அறிவித்தல்



### நடராஜா துரைசிங்கம்

பிறப்பு
03.12.1947

இறப்பு
01.10.2016

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நடராஜா துரைசிங்கம் 01.10.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா-பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான மகாதேவா - நேசரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், ரஞ்சிதமலரின் பாசமிகு கணவரும், டனிஷா (கனடா), பிரசன்னா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஞ்சித் (கனடா), கீர்த்திகா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தங்கராசா (DR.FRCP RTD LONDON), விஜயமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பத்மாவதி (பத்து - லண்டன்), பாலசுப்பிரமணியம், யோகமலர் (கனடா), செல்வரட்ணம் (கனடா), புஸ்பராசா (கனடா),விஜயராஜன் (கனடா), ஞானமலர் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், நிதுஷா,பரணிக்கா, ஶ்ரீநிதா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (05.10.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மலர்வாசம்"
G.P.S.வீதி,
கல்வியங்காடு.

தகவல்:
மனைவி,மகள்,
மகன்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(J/5081)
(11,17,18)

021 223 0289, 077 793 5944

### மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை

மல்வில் இயக்கச்சி பளையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை 01.10.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-சிவஞானசுந்தரம் தம்பதிகளின் அன்பு மகனும் தவமணி (ஜேர்மனி), தங்கமணி ஆகியோரின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற சிவக்கொழுந்தின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கதிரவேலுவின் மைத்துனரும் வசீகரன் (ஜேர்மனி), பாஸ்கரன் (ஜேர்மனி), சுபாசினி (ஜேர்மனி), றாகினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கௌசலா, யசோ (ஜேர்மனி), ஆம்சோன் ஆகியோரினதும் கணேசலிங்கம் (லண்டன்), கமலாம்பிகை (லண்டன்), காலஞ்சென்ற கனகலிங்கம், சிவகாம்பிகை (லண்டன்), யோகலிங்கம் (லண்டன்), யோகாம்பிகை (லண்டன்), வதனாம்பிகை (லண்டன்) ஆகியோரினதும் மாமனாரும் அபிர்சனா, அபிசன், லக்சிகா, டயானா, ஜெனிபா, ஜெஸ்வின், ஜெதுசா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2016) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் யாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாஸ்கரன்(மகன்).

### பிரிட்டிஷ்...

துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த விளையாட்டு மைதானத்தில் நாட்டின் அனைத்து பிரதேசத்திலிருந்தும் வீரர்கள் வந்து விளையாடவேண்டும் என்று, மைதானத்தை அண்மையில் திறந்து வைக்கும் போது பிரார்த்தித்திருந்தேன். அந்தப் பிரார்த்தனை குறுகிய காலத்தினுள் நிறைவேறியுள்ளது.

விளையாட்டுத்துறையில் தேசிய ரீதியிலும், பன்னாட்டு ரீதியிலும் பல திறமைகளை வெளிக்காட்டிய நாடாக எமது நாட்டை நாம் குறிப்பிட முடியும். தேசிய ரீதியில் திறமைகளை நிகழ்த்தும் போது, தமிழர் – முஸ்லிம் – சிங்களவர் என்ற பாகுபாடின்றி இலங்கையர் என்ற அபிமானத்துடன் அந்த வெற்றியைப் பெற்றுக் கொண்டோம்.

எனக்கு முன்னர் பேசிய பலரும் முக்கிய விடயத்தைக் குறிப்பிட்டனர். விளையாட்டு என்பது உலகளாவிய மொழி. விளையாட்டும் நல்லிணக்கமும் உலகின் பொது மொழிகளாக உள்ளன. விளையாட்டு மைதானம் அனைவரும் ஒன்றிணையும் இடமாக உள்ளது. இந்த விளையாட்டு மைதானத்தில் ஒன்பது மாகாணங் களையும் பிரதிநித்துவப்படுத்தி வீரர்கள் கலந்து கொண்டிருந்தனர். விளையாட்டுக்காக ஒன்பது மாகாணங் களாக பிரிந்து கொண்டால் எந்தப் பிரச்சினையும் இல்லை. நாட்டை அபிவிருத்தி செய்ய, நிர்வாகம் செய்ய, உற்பத்தி செய்ய பிரிந்து கொண்டால் பிரச்சினை இல்லை. நாம் ஒன்பது மாகா ணங்களைப் பற்றிப் பேசுகின்றோம்.

இந்த ஒன்பது மாகாணங்களையும் யார் எமக்கு தந்தது. இலங்கையர்கள் எவரும் எமக்குத் தரவில்லை. சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிப் பீடமேறியவர்கள் வழங்கவில்லை. இங்கிலாந்தின் ஜோர்ஜ் அரசர்தான் ஒன்பது மாகாணங்களையும் எங்களுக்கு வழங்கினார். அவர் வழங்கிய ஒன்பது மாகாணங்களுக்காக நாம் சண்டைபோட வேண்டிய அவசியமில்லை. அவர்கள் தமது நிர்வாகத்தை இலகுவாக மேற்கொள்வதற்கே இலங்கையை ஒன்பது மாகாணங்களாகப் பிரித்தார்கள்.

1833ஆம் ஆண்டு கோல்புறூக் கமரூன் ஆணைக்குழு ஊடாக நாட்டில் முதலில் 5 மாகணங்கள் உருவாக்கப்பட்டன. பின்னர் 1890ஆம் ஆண்டு அது ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டன. எனவே நாங்கள் ஏன் மாகாணங்களுக்காக சண்டையிட வேண்டும். நாம் அனைவரும் இலங்கையர் என்ற அபிமானத்துடன் செயற்படுவோம்.

இந்த மைதானத்தில் வீர, வீராங்கனைகள் ஒரே நாட்டின் மக்கள் என்ற ரீதியில்தான் விளையாடினார்கள். இந்த மைதானத்தில் விளையாட்டின் ஊடாக மாணவர்கள் ஒன்றிணைவது போன்று இந்த சமூகத்தையும் ஒன்றிணைக்க முடியும்.

விளையாட்டின் ஊடாக நல்லொழுக்கம் உருவாக்கப்படுகின்றது. இன்று எமது நாட்டிற்குத் தேவையாக இருப்பது ஒழுக்கமுடைய முழுமையான சமூகமே.

பல நாடுகளில் இன்று போர் நடைபெறுகிறது. அவர்களுக்கு இடையில் ஒழுக்கம் இல்லாத காரணத்தினால்தான் போர் நடைபெறுகிறது. ஒழுக்கம் என்ற செயற்பாடு உலகம் முழுவதிலும் ஏற்பட வேண்டும். போரை இல்லாமல் ஒழிக்க அதுவே வழி என்றார். (வ-5-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல்வர் ஜெயலலிதா உடல்நலக்குறைவு அப்பலோ மருத்துவமனையில்

## அமைச்சர்கள் அவசர பேச்சு

சென்னை, ஒக்.3

தமிழக முதல்வர் ஜெயலலிதா உடல்நலக் குறைவால் சேர்க்கப்பட்டுள்ள அப்பலோ மருத்துவமனையில் அமைச்சர்கள் அவசரமாகக்கூடி சுமார் ஒரு மணிநேரம் ஆலோசனை நடத்தினர்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா கடந்த 22 ஆம் திகதி உடல்நலக்குறைவின் காரணமாக சென்னை அப்பலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மருத்துவமனை நிர்வாகம் இதுவரை 4 செய்திக்குறிப்புகளை வெளியிட்டு ஜெயலலிதா நன்றாக இருப்பதாகவும் வழக்கமான உணவு உட்கொள்வதாகவும் கூறி வருகிறது. என்றாலும் அவர் தொடர்ச்சியாக மருத்துவமனையிலேயே இருக்கிறார்.

10ஆவது நாளான நேற்று முன்தினம் மாலை தமிழக ஆளுநர் வித்தியா சேகர் ராவ் அப்பலோ மருத்துவமனைக்குச் சென்று முதல்வருக்கு அளிக்கப்பட்டுள்ள சிகிச்சை குறித்து மருத்துவர்களிடம் பேசினார். இந்தநிலையில், 11ஆவது நாளான நேற்று தமிழக அமைச்சர்கள் அனைவரும் ஒரேநேரத்தில் அப்பலோ மருத்துவமனைக்கு அவசரமாக விரைந்துசென்றனர்.

ஓ. பன்னீர்செல்வம், ஜெயக்குமார், ராஜேந்திர பாலாஜி, சிவி சண்முகம், எடப்பாடி பழனிச்சாமி, விஜயபாஸ்கர், திண்டுக்கல் சீனிவாசன் உட்பட அனைத்து அமைச்சர்களும் சென்றனர். அதேபோல டிஜிபி ராஜேந்திரன், சென்னை பொலிஸ் ஆணையாளர் ஜார்ஜ் உள்ளிட்ட காவல்துறை அதிகாரிகளும் வந்தனர். அங்கு வைத்து ஒரு மணிநேரத்திற்கும் மேலாக ஆலோசனை நடந்ததாகக் கூறப்படுகிறது. அந்த ஆலோசனைக்குப் பின்னர் அனைவரும் அங்கிருந்து வெளியேறினர். (வ-5)

**காணி விற்பனைக்குண்டு**

மல்லாகம், கே.கே.எஸ் வீதியில் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(சோடாக் கம்பனி ஒழுங்கை அருகில்)
**077 753 2994**

**வாடகைக்குண்டு**


அலுவலகப் பயன்பாட்டிற்கு ஏற்ற சிறிய கட்டடத் தொகுதி (20 X20) திருநெல்வேலிக்கு அருகில் வாடகைக்குண்டு.
தொடர்பு - 076 9912971

**புதிய கட்டடம் அமைத்து வாடகைக்கு வழங்கல்**

யாழ் நகரப்பகுதியில் மணிக்கூட்டுக்கோபுர வீதி, வெலிங்டன் தியேட்டருக்கு முன்பாக கீழ்த்தளத்தில் இருகடைகளும் முதலாம் மாடியில் இருகடைகளும் நிர்மாணிக்க இருப்பதால் தேவையுடையோர் தொடர்பு கொள்ளவும். (தற்போதைக்கு வாகனத்தரிப்பிடமாகவும் உபயோகிக்கலாம்) (I 5080) (14,17,18)
**021 222 5666/ 077 656 9764**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தாயின் மடியில்
1938.04.19



ஆண்டவன் அடியில்
2016.09.03

கடந்த 03.09.2016 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

### மாணிக்கம் இராசதுரை

அவர்களின் ஆத்மசாந்திப்பிரார்த்தனை இன்று (03.10.2016) திங்கட்கிழமை மு.ப. 11.30 மணியளவில் நாவலர் வீதியில் உள்ள சொர்ணாம்பிகை (TCT) மண்டபத்தில் இடம்பெறும். அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் எமது அன்புத்தெய்வம் நோயுற்றிருந்த வேளையில் சிகிச்சையளித்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் மற்றும் நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம் மூலமும், தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும், பலவழிகளிலும் உதவிய அன்புள்ளங்களுக்கும் யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இவ்அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

126/1, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 9081, 077 1103322

குடும்பத்தினர்.

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்



கடந்த 07.07.2016 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புச்செல்வம்

### மகேந்திரராசா மதுசன்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (04.10.2016) செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. இந்நிகழ்விலும் இதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இத்தாவில், பளை.

குடும்பத்தினர்.
077 4824214

## மரண அறிவித்தல்

திருமதி

### கேஜலெட்சுமி தாமோதரம்பிள்ளை



யாழ். தாவடியைப் பிறப்பிடமாகவும் வவுனியா வைரவபுளியங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கேஜலெட்சுமி தாமோதரம்பிள்ளை கடந்த (01.10.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா-அம்மணியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய V.C.O-வவுனியா) அவர்களின் பாசமிகு மனைவியும் ஸ்ரீதரன்(பொறியியலாளர்-ஆஸ்திரேலியா), மனோரதன் (பொறியியலாளர்- ஆஸ்திரேலியா), Dr.ஜெயரதன் (தாய், சேய் நல வைத்திய அதிகாரி-சுகாதார பிராந்திய பணிமனை, வவுனியா), தேவாதரன் (கணித அளவையாளர்-UK), ஸ்ரீவதனி (டென்மார்க்), உஷா (ஆசிரியை-வவுனியா இறம்பைக் குளம் மகளிர் வித்தியாலயம்), Dr.உமாவதி(Consultant Texas-U.S.A), வனிதா(பொறியியலாளர்-கனடா), குமுதினி (ஆஸ்திரேலியா), மயூரதன்(பொறியியலாளர்-ஆஸ்திரேலியா), ரோகினி(Scientific Officer Pathology- ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற ராஜேஸ்வரி மற்றும் ஞானேஸ்வரி, நாகேஸ்வரி, சண்முகநாதன், காலஞ்சென்ற சோதிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அன்னநாயகி, மதியாபரணம், காலஞ்சென்றவர்களான தியாகராசா, இரத்தினசிங்கம், பாலசுப்பிரமணியம் மற்றும் வசந்தாதேவி, தவரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் பாமினி, சியாமிளா, கமலாதேவி, விஜிதா, மனோகாந்தன், சந்திரகுமார், மனோரதன், ராகுலன், ஸ்ரீகாந்தன், புனிதினி, சங்கரதாசன் ஆகியோரின் அன்பு மாமியும் கௌதம், கீரன், ஆரணி, அஸ்வின், கேஷிகா, டேசிகன், மிதுஷன், மகிஷா, ஹரிசன், சுபங்கவி, ஸாஸ்வதன், பிரணவன், சாருஜன், நிரூஜன், லக்சன், சஞ்ஜே, சஜீவ், துளசி, தனீஸ், பிரியன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2016) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூந்தோட்டம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**இல.26, 5ஆம் ஒழுங்கை,**
**வைரவபுளியங்குளம்,**
**வவுனியா.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:
ஸ்ரீதரன்- 077 9861482, ஜெயரதன்- 077 2093154,
மயூதரன்- 076 6126309, தேவாதரன்- 077 [illegible]
உஷா - 077 9150469, மனோரதன்- +614[illegible]

## மரண அறிவித்தல்

திருமதி **தங்கலக்ஷ்மி குமாரசாமி** (ரத்தி)



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கலக்ஷ்மி குமாரசாமி (ரத்தி) 30.09.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விதானை கந்தையா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற குமாரசாமியின் அருமை மனைவியும் காலஞ் சென்ற வனசமலர் மற்றும் கருணாதேவி, நந்தா, ஜெயந்தி, பிரேமா, மஞ்சுளா, மிதுலா ஆகியோரின் தாயும் காலஞ் சென்றவர்களான அன்னலக்ஷ்மி தளையசிங்கம், பூபாலசிங்கம், ராஜலக்ஷ்மி, யோகலக்ஷ்மி, நாகலக்ஷ்மி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், மனோகரபூபன் மற்றும் சண்முகநாதன், ரூபகுமார், ஸ்கந்தராஜா, செல்வன், ரவிக்குமார் ஆகியோரின் மாமியும் பிரமிளா கணேஷ்வரன், சகிலா குமரன், நிகிலா பகீரதன், வீணா பிரகாஷ், கிருஷ்ணவேணி ஸ்ரீதரன், தஞ்சயன், விஜய், கலாபன், கோகுலன், ஜனகன், காருண்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கௌதம், பிரவீன், இலக்கியன், அனபாயன், பிரவீன், சந்தோஷ், வேனிலன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.10.2016 செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு உரும்பிராய் தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உரும்பிராய் தெற்கு,**
**உரும்பிராய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**021 4921557,**
**077 3144787, 077 1337894**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய சம்மட்டி எறிதலில் வடக்குக்கு பதக்கமில்லை

யாழ்ப்பாணம், ஒக். 3

தேசியமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான சம்மட்டி எறிதலில் வட மாகாணத்துக்கு ஏழாம், எட்டாம் இடங்கள் கிடைத்தன. யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுக் காலை இந்தப் போட்டிகள் நடைபெற்றன. வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஆர்.தர்சிகா 24.50 மீற்றர் தூரத்துக்கு எறிந்து ஏழாமிடத்தையும் எஸ்.லினோஜிதா 20.17 மீற்றர் தூரத்துக்கு எறிந்து எட்டாமிடத்தையும் பெற்றனர். தென் மாகாணத்தைச் சேர்ந்த அமரசிங்க 45.85 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தையும் ஊவா மாகாணத்தைச் சேர்ந்த மடுவந்தி 44.82 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அருணிலக்சிகா 40.73 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

## தேசியமட்ட அஞ்சலோட்டத்தில் வடமாகாணத்துக்கு ஏழாம் இடம்

யாழ்ப்பாணம், ஒக். 3

தேசியமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் வடமாகாணத்துக்கு ஏழாவது இடம் கிடைத்தது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை இந்தப் போட்டிகள் நடைபெற்றன. தங்கப் பதக்கத்தை மத்திய மாகாண அணியும், வெள்ளிப் பதக்கத்தை மேல் மாகாண அணியும், வெண்கலப் பதக்கத்தை வட மேல் மாகாண அணியும் தமதாக்கின. (ம-422)





# வெள்ளிப் பதக்கத்தை வென்றது வடமாகாணம்

யாழ்ப்பாணம், ஒக். 3

தேசியமட்ட கயிறு இழுத்தல் போட்டியில் பெண்கள் பிரிவில் வடமாகாண அணி வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் வடமாகாண பெண்கள் அணியை எதிர்த்து மேல் மாகாண பெண்கள் அணி மோதியது. மூன்று சுற்றுக்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு சுற்றுக்களையும் கைப்பற்றி 2:0 என்ற கணக்கில் தங்கப் பதக்கத்தைக் கைப் பற்றியது மேல் மாகாண அணி. வடக்குக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.

ஆண்கள் பிரிவிலும் மேல் மாகாண கயிறிழுத்தல் அணியே தங்கத்தைக் கைப்பற்றியது. அந்த அணி கிழக்கு மாகாண அணியை 2:0 என்ற அடிப்படையில் வீழ்த்தியது.

(ம-422-23)

## இன்றைய மோதல்கள்

கரணவாய், செப். 3

**மனோகரா வி.க. கால்பந்தாட்டம்**

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் ஏழாலை பைவ் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**கழுகுகள் வி.க. கால்பந்தாட்டம்**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

**ஞானமுருகனின் கால்பந்தாட்டம்**

மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம் பெறும் ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-108)

# இந்திய வீரர்களுக்கு இரு மடங்கு சம்பளம்

டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடும் வீரர்களுக்கு இரு மடங்கு சம்பளம் வழங்கப்படும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்தது.

டெஸ்ட் ஆட்டங்களில் மிகவும் பலமான அணியாக இந்தியா வலம் வருகிறது. சொந்த மண்ணில் மட்டுமல்லாமல் அன்னிய மண்ணிலும் அதிகமாகச் சாதிக்கும் அளவுக்கு இந்தி டெஸ்ட் அணி வளர்ந்துள்ளது. அந்த அணி இறுதியாக டெஸ்ட் ஆட்டமொன்றில் தோல்வியடையாமல் கடந்த ஒரு வருடமாக தொடர்ந்து வெற்றிநடை போட்டுவரும் நிலையில் டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடும் வீரர்களுக்கு இருமடங்கு சம்பளம் வழங்கப்படும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்தது. (ம)

## தொடரை வென்றது பங்களாதேஷ்

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை 2:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது பங்களாதேஷ்.

இந்த இரு அணிகளுக்கும் இடையில் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்றது. முதலாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் 7 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் 2 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. கிண்ணத்தைத் தீர்மானிக்கும் இறுதியாட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் 141 ஓட்டங்களால் வெற்றிபெற்ற பங்களாதேஷ் 2:1 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்றியது. ஆட்ட நாயகனாகவும், தொடராட்ட நாயகனாகவும் ரமீம் இக்பால் தெரிவானார். (ம)




தேசியமட்ட தடகளத் தொடரில் சாதனை படைத்த வடமாகாண வீராங்கனை ஜே.அனித்தாவுக்கு யாழ்ப்பாணம் ஸ்மார்ட் ரைச் கையடக்க அலைபேசி விற்பனையாளர்களால் ரப் ஒன்றும் அனித்தாவின் பயிற்சியாளருக்கு பெறுமதி வாய்ந்த கையடக்க அலைபேசி ஒன்றும் பரிசளிக்கப்பட்டது. (ம-422)

# இலங்கையின் வேகமான வீரருக்கு ரீ.வி.எஸ். மோட்டார் சைக்கிள் பரிசு

தேசியமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கப்பதக்கம் வென்ற வீரருக்கு ரி.வி.எஸ். மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டது.

தேசியமட்ட தடகளத் தொடரின் இறுதிநாளான நேற்று ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டம் நடைபெற்றது. தென் மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய விக்கிரமசிங்க 10 செக்கன்கள் 06 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். இலங்கையின் வேகமான குறுந்தூர ஓட்டப்பந்தய வீரர் என்ற அடிப்படையில் இவருக்குரி.வி.எஸ். நிறுவனத்தால் மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டது. (ம-422-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகுதியை இழந்தனர் வடமாகாண வீரர்கள்

யாழ்ப்பாணம், ஒக். 3
தேசியமட்டத் தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான முப்பாய்தலில் வடமாகாண வீரர்கள் சிறந்த எட்டு போட் டியாளர்களுக்கான தகுதியை இழந்தனர்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை இந்தப் போட்டிகள் நடைபெற்றன. ஆண்களுக்கான முப்பாய்தலில் வடமாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.கமல்ராஜ் 13.64 மீற்றர் தூரத்துக்கும், தேவராஜ் 13.34 மீற்றர் தூரத்துக்கும், எஸ்.வெனிலன்மார்க் 13.07 மீற்றர் தூரத்துக்கும் பாய்ந்தனர். ஆனால் அவர்கள் எவராலும் சிறந்த எட்டுப் போட்டியாளர்களுக்கான தகுதியைப் பெற முடியவில்லை.

சப்ரகமுவா மாகாணத்தைச் சேர்ந்த ஜெயசிங்க 15.98 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், மேல் மாகாணத்தைச் சேர்ந்த பெர்ணாண்டோ 15.76 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும், ஊவா மாகாணத்தைச் சேர்ந்த சம்பத் 15.63 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)



# சம்பியனானது மேல் மாகாணம் வடக்கு மாகாணம் கடைசி இடம்

## 242 பதக்கங்கள் இடை வெளி

யாழ்ப்பாணம், ஒக். 3
நடப்பு வருடத்துக்கான தேசியமட்டப் போட்டிகள் நேற்றுடன் நிறைவுக்கு வந்தன. ஒட்டு மொத்தமாக 254 பதக்கங்களுடன் மேல் மாகாணம் சம்பியனானது. ஒட்டுமொத்தமாக 12 பதக்கங்களுடன் வடமாகாணம் கடைசி இடத்தைப் பிடித்தது. இந்த இரு மாகாணங்களுக்கும் இடையே 242 பதக்க வேறுபாடு காணப்படுகிறது.

நடப்பு வருடத்துக்கான தேசியமட்டப் போட்டிகள் பல கட்டங்களாக பல இடங்களில் நடைபெற்று யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் நடைபெற்று முடிந்த தேசியமட்ட தடகளத் தொடருடன் நேற்று நிறைவுக்கு வந்தது. நேற்றையதினம் தேசியமட்டப் போட்டிகளின் ஒட்டுமொத்த தரப்படுத்தல் வெளியிடப்பட்டது. மேல் மாகாண அணி அசைக்க முடியாத ஆதிக்கத்துடன் சம்பியனானது. அந்த அணி 113 தங்கப்பதக்கம், 74 வெள்ளிப்பதக்கம், 67 வெண்கலப்பதக்கம் உட்பட 254 பதக்கங்களுடன் முதலாமிடத்தையும், தென்மாகாண அணி 33 தங்கப்பதக்கம், 29 வெள்ளிப் பதக்கம், 43 வெண்கலப்பதக்கம் என 105 பதக்கங்களுடன் இரண்டாமிடத்தையும், மத்திய மாகாண அணி 28 தங்கப்பதக்கம், 38 வெள்ளிப்பதக்கம், 41 வெண்கலப்பதக்கம் என 107 பதக்கங்களுடன் மூன்றாமிடத்தையும் பெற்றன. நான்கு முதல் எட்டு வரையிலான இடங்களை முறையே வடமேல் மாகாணம், சப்பிரகமுவா மாகாணம், வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகியன தனதாக்கின. வடமாகாண அணி 2 தங்கப்பதக்கம், 5 வெள்ளிப்பதக்கம், 5 வெண்கலப்பதக்கம் உட்பட 12 பதக்கங்களுடன் ஒன்பதாவது இடத்தைப் பெற்றது. (ம-422)

# இலங்கையின் வேகமான குறுந்தூர வீராங்கனை




யாழ்ப்பாணம், ஒக். 3
தேசியமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றிய வீராங்கனைக்கு, ரி.வி.எஸ். நிறுவனத்தால் மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டது.

தேசியமட்டத் தடகளத் தொடரின் இறுதி நாளான நேற்று, பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டி நடைபெற்றது. ஊவா மாகாணத்தைச் சேர்ந்த விதானதுர்க்கே என்ற வீராங்கனை 11 செக்கன்கள் 9 மில்லிசெக்கன்களில் ஓடி முடித்து தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். இலங்கையின் வேகமான குறுந்தூர வீராங்கனை என்ற அடிப்படையில் அவருக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டது. (ம-422)



*நடப்பு வருடத்துக்கான தேசியமட்ட காட்டாப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சௌந்தராஜா பாலுராஜ் கராத்தே பிரிவில் தேசியமட்டத்தின் சிறந்த வீராகவும் தெரிவானார். இவர் 2014 ஆம் ஆண்டும் இந்த விருதைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம-23)*

# வடக்கு மாகாணத்துக்கு எட்டாவது இடம்

தேசியமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் வடக்கு மாகாணத்துக்கு எட்டாம் இடம் கிடைத்தது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டி நடைபெற்றது. வடமாகாணத்தைச் சேர்ந்த எஸ்.செந்தூரன் 57.19 மீற்றர் தூரத்துக்கு எறிந்து எட்டாமிடத்தை பெற்றார். வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த லக்சன் 78.52 தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தையும், தென் மாகாணத்தைச் சேர்ந்த ரணசிங்க 71.19 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த ராஜித 66.23 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)










*தேசியமட்ட தடகளத் தொடரில் புதிய சாதனையை நிலைநாட்டிய வீர, வீராங்கனைகளுக்கு ரி.வி.எஸ். நிறுவனத்தால் ஒரு லட்சம் பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது. வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.அனித்தா கோலூன்றிப் பாய்தலில் 3.41 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து புதிய சாதனையைப் பதிவுசெய்திருந்தார். பெண்களுக்கான குண்டு போடுதலில் மேல்மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பிரானந்தோ 15.25 மீற்றர் தூரத்துக்கு எறிந்து புதிய சாதனையைப் பதிவு செய்திருந்தார். பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் தென் மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த நிமாலி 2 நிமிடங்கள், 3 செக்கன்கள் 5 மில்லி செக்கன்களில் ஓடி முடித்து புதிய சாதனையைப் பதிவு செய்தார். ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் மேல் மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த சந்திரரூப 5.10 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து புதிய சாதனையைப் பதிவு செய்தார். இவர்களுக்கே ரி.வி.எஸ். நிறுவனத்தால் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது. (ம-422)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸ்திரேலியாவுக்கு மீண்டும் பலத்த அடி

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்திலும் வெற்றிபெற்று ஐந்து ஆட்டங்களைக் கொண்ட தொடரில் 2:0 என்று முன்னிலை வகிக்கின்றது தென்னாபிரிக்கா. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா பிளாசிஸ் சதம் கடக்க 361 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா 219 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்ததையடுத்து 142 ஓட்டங்களால் வெற்றிபெற்றது தென்னாபிரிக்கா. (ம)





# சம்பியனானது விண்மீன் யங்ஹென்றிஸை வீழ்த்தி

கரணவாய், ஒக். 3
பொலிகை பாரதி வி.கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் யங்ஹென்றிஸ் வி.கழகத்தை வீழ்த்தி சம்பியனானது பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம்.
பாரதியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. ஆட்டத்தின் 10 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப்பதிவு செய்தது யங்ஹென்றிஸ். 23 ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தார் விண்மீன் அணியின் நிசாந்தன். 1:1 என்ற நிலையில் முதல் பாதி முடிவடைந்தது. இரண்டாம் பாதியிலும் கோல் கணக்கில் மாற்றம் ஏற்படவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது பலாலி விண்மீன். யங்கம்பன்ஸை வீழ்த்தி மூன்றாம் இடத்தை தனதாக்கியது நவஜீவன்ஸ். பரிசளிப்பு நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டார்.
(ம-422-108)

## சிறந்த தடகள வீரராக கிழக்கின் எம்.நிர்மால்

யாழ்ப்பாணம், ஒக். 3
சிறந்த தடகள வீரராக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எம். நிர்மால் தெரிவு செய்யப்பட்டார். 42 ஆவது தேசியமட்ட தடகளத் தொடர் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த 29 ஆம் திகதி ஆரம்பமாகி நேற்றுடன் நிறைவுக்கு வந்தது. நீளம் பாய்தல் போட்டியில் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய எம்.நிர்மால் சிறந்த தடகள வீரராகத் தெரிவு செய்யப்பட்டார். (ம-422)

## தென்மாகாணத்தின் நிமாலி சிறந்த தடகள வீராங்கனை

யாழ்ப்பாணம், ஒக். 3
சிறந்த தடகள வீராங்கனையாக தென்மாகாணத்தைச் சேர்ந்த நிமாலி தெரிவானார். தேசியமட்ட தடகளத் தொடர் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த 29 ஆம் திகதி ஆரம்பமாகி நேற்றுடன் நிறைவுக்கு வந்தது. பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் தென்மாகாணத்தின் சார்பாக களமிறங்கி 02 நிமிடங்கள், 03 செக்கன்கள், 05 மில்லிசெக்கன்களில் இலக்கை அடைந்து சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்ற எம்.நிமாலி சிறந்த தடகள வீராங்கனையாக தெரிவானார். (ம-422)



A/L வரலாறு
2017 மற்றும் 2018
பிரிவுகளுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
ஆசிரியர்- M. பத்மன் M.A. {History}
D.M.I யாழ்ப்பாணம்.
உயர்கலைக் கல்லூரி, குளப்பிட்டி.

## பாக். – தீவுகள் 3 ஆவது ஆட்டம்

பாகிஸ்தான் – தீவுகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டம் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. (ம)



யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த 29 ஆம் திகதி ஆரம்பமான தேசியமட்ட தடகளத் தொடர் நேற்றுடன் நிறைவுக்கு வந்தது. இறுதி நிகழ்வுகளில் மானிப்பாய் இந்துமகளிர், சுன்னாகம் ஸ்கந்தவரோதய, யாழ். இந்து மகளிர் ஆகிய பாடசாலைகளின் மாணவிகளின் கலாசார நடனமும் இடம்பெற்றது. இதில் கிட்டத்தட்ட 200 இற்கும் அதிகமான மாணவிகள் கலந்துகொண்டனர். (ம-23)

தமிழ் சித்த மருத்துவ நிலையம்
சகல நோய்களுக்குமான பக்க விளைவற்ற முறையில் மூலிகைகளில் தயாரிக்கப்பட்ட மருந்துகளைக் கொண்டு வைத்தியசேவை இடம்பெறுகின்றது.
குழந்தை வைத்தியம் – தலைமுடிசம்பந்தமான பிரச்சினைகள்
மகப்பேற்று பாக்கியம் – நீரிழிவு – ஆண்மைக் குறைவு – தோல் நோய்கள்
பாரிசவாதம் – குடல்புண் – விஷக்கடி
உள்ளிட்ட அனைத்து நோய்களுக்குமான சிறந்த சேவை வழங்கப்படுகின்றது.
AMC 13905
077 137 4728

3 மாத பயிற்சி நெறி
இம்முறை A/L எழுதியோர், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர், இளைஞர் யுவதிகள் இணையமுடியும்!
சனி, ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம்: 08.10.2016
பிரிவு1.காலை 08-10 | பிரிவு 3.மாலை 01-03
பிரிவு2.காலை 10-12 | பிரிவு 4. மாலை 03-05
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட 3 மாதங்களிலேயே சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்!
பாடப்புத்தகங்கள் Video DVD என்பன இலவசம்.
பயிற்சிநெறி முடிவில் "Diploma Certificate"
SAAMSON
Expert in Language Training
178, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 1570 486
021 320 3313

கணக்காய்வாளர் போட்டிப் பரீட்சை கருத்தரங்கு
ஒவ்வொரு நாளும் மாலை 5.00-7.00 மணிவரை
20 ஆம் திகதி வரை 5 வினாத்தாள்களுக்கும் உரிய மீட்டல்
ஆரம்பம்:
செவ்வாய் [4/10]
பி.ப 5.00 மணி
T.P 076 6883394
021 2223382
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி,

## மீண்டும் பலம்பெற்றது இந்தியா

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய மூன்றாம் நாள் நிலவரத்தின் படி இந்திய அணி முன்னிலையில் உள்ளது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 316 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து இரண்டாம் நாள் முடிவில் 128-7 என்றிருந்தது. அந்த அணி தொடர்ந்தும் தடுமாற்றத்தை வெளிப்படுத்தி 204 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பட்டேல் 47 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பாக புவனேஸ்குமார் 5 இலக்குகளைக் கைப்பற்றினார். பதிலுக்குக்களமிறங்கிய இந்திய அணி நேற்றைய நாள் முடிவில் 227-8 என்றுள்ளது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறு[illegible] 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org